கல்கி




KALKI

.11.1964 30 காசு



அற்புதக் கிளிஞ்சல்களின் அலாதி அழகு





ஸான்போரைஸ்ட் பாப்ளின்ஸ்:
கோல்ட் ட்ரிக், ப்ளுபர்ட், எவர் ப்ரைட்,
குட் ஷைன்

ஷர்ட்டிங்ஸ்:
ஸ்டிரைப், டாப்பி, செக்ஸ், பைஜாமா


தோதீஸ்:
ராஜா ஸ்பெஷல், ராணி ஸ்பெஷல்,
ப்ளாடினம், காம்ராஜ்

ஸூட்டிங்ஸ்:
காபர்டின்

நெசவான கலர் புட்டாக்கள்:

ப்ரிண்ட்ஸ்:
ப்ரிண்டட் லான்ஸ், வாயில்ஸ், பாப்ளின்ஸ்,
ஸ்கிரீன் ப்ரிண்ட் ஸாரீஸ்

2x2 கவர்ச்சியான முழு வாயில்கள்—
லினோவிலும் புட்டாக்களிலும்



Arvind Quality FABRICS

SANFORIZED

அரவிந்த் மில்ஸ் லிமிடெட்
அஹமதாபாத்

முருகப் பெருமான்

புனலில் அனலாய்
    வளர்ந்து வந்தான் - எங்கள்
புண்ணிய மூர்த்தி
    தவழ்ந்து வந்தான்-புனலில்!

சூர பதுமன் வீழ்ந்திடவும் - வானோர்
    துயர்கள் யாவும் தீர்ந்திடவும்
வீரம் உலகில் வென்றிடவும் - அறம்
    வெற்றித் தவிசில் வீற்றிடவும்

குளிரும் நீரில்
    நெருப்பாகி - எங்கள்
குழந்தைப் பெருமான்
    குதித்து வந்தான்!

ஊனை உருக்கும்
[illegible] கனலாகி - அவன்
உள்ளப் பொய்கையில்
    உதித்து வந்தான்! —சோமு


கல்கி

பொருளடக்கம்

குரோதி ஐப்பசி 23 — நவம்பர் 8

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.


நான் தங்கம் கிடையாது
என்று சொல்லித்தான்
இந்த கதியடைந்தேன்.
நீங்களோ 'உணவே
கிடையாது' என்கிறீர்களே!
PK


ரத்தின கம்பளமும் விரித்து
வரவேற்கிறார்கள்!
வருக வருக!
பழிப்பேய்
ரேஷன் கார்ட்
PK



மலர் 24 | தமிழ்த்திரு நாடுதன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார் | இதழ் 15

நெருப்புடன் விளையாட வேண்டாம்!

சீனு அணு ஆயுதச் சோதனை நடத்தியபின் நம் நாட்டிலும் சிலருக்கு ஒரு யோசனை தோன்றியுள்ளது. நாமும் அணு ஆயுதங்களைச் செய்து குவித்தாலன்றிச் சீனுவை அச்சுறுத்தித் தடுத்து நிறுத்தி வைக்க முடியாது என்று இவர்கள் எண்ணுகிறார்கள். ஒரு வகைக் குறைந்த சக்தி அணுகுண்டுகளைக் 'குறைந்த செலவில்' செய்வதற்கு வசதிகள் உள்ளன என்று நமது அணு விஞ்ஞான நிபுணர் டாக்டர் ஹெச். ஜே. பாபா ஆசை காட்டியிருக்கிறார். 'சக்தியில் குறைந்தது' என்று இவர் கூறினாலும் இந்தக் குண்டும் நாடு நகரங்களை—ஏதுமறியாத ஏராளமான பொதுமக்களை—அழிக்கும் ராட்சத ஆயுதம்தான். 'குறைந்த செலவு' என்று இவர் கூறினாலும் உண்மையில் இந்தச் செலவும் சாமானிய ராணுவத் தளவாடங்களுக்கு ஆவதைக் காட்டிலும் எவ்வளவோ மடங்கு கூடுதலானது. நாமும் அணு ஆயுதம் தயாரிக்க வேண்டும் என்ற கருத்து தரும ரீதியிலும், பொருளாதார ரீதியிலும் நம் நாட்டைப் பாழாக்கும் யோசனை. பயங்கரமான கொலைக் கருவியைப் பெரும் செலவில் தயாரித்துக் குவித்து வைத்துக் கொள்வது நம்மைப் பெரும் பயத்திலும், பாபத்திலும், பொருளாதாரச் சிக்கலிலும் தள்ளிவிடும். அணு ஆயுதம் தயாரிப்பதென்பது நெருப்புடன் விளையாடுவதற்கொப்பாகும் என்று யாவரும் தெளிய வேண்டும்.

அப்படியே நாம் அணு ஆயுதங்களைத் தயாரிப்பினும் அதனால் சீனுவைக் கட்டுப் படுத்திவிட முடியாது என்பதை மக்கள் உணர வேண்டும். இந்தியாவில் கிடைக்கும் அணு ஆயுத மூலப் பொருள்கள் பற்றிய பட்டியலாலும், அணு ஆயுதத் தயாரிப்புக்குத் தேவைப்படும் செலவுக் கணக்காலும் மட்டும் இப் பிரச்னையை ஆராய்தல் கூடாது. நம் நாட்டின் மன நிலை, எதிராளியின் மன நிலை இவற்றையும் முக்கியமாக ஆராய்ந்து பார்த்தே முடிவு எடுக்கவேண்டும். பயங்கரமான அணுகுண்டு யுத்தத்துக்கு இந்தியர்களின் மன நிலை இடமளிக்காது. அணு ஆயுதம் நம் கையில் இருப்பினும் அதனை நாம் பிரயோகிக்க முற்பட மாட்டோம் என்பதைச் சீனு நன்கு ஊகிக்க முடியும். ஜன நெரிசல் தாள முடியாமல் தவிக்கும் சீனுவுக்கு மண்ணாசையும் சேர்ந்து கொண்டதால் அது எந்த பயங்கரமான முடிவுக்கும் வர முடியும். தனது மக்கள் தொகை ஓரளவுக்கு அழிந்து போனால்கூட நலமே என்று நினைக்குமளவுக்குச் சீன ஆட்சியாளரின் மனநிலை இருக்கும் போது, 'இதோ எங்களிடமும் மூன்றும் தர அணு ஆயுதம் இருக்கிறது பார்' என்று நாம் காட்டுவதால் எதிராளியைத் தடுத்து நிறுத்திவிட முடியாது.

அப்படியானால் சீனுவின் ராணுவ பலம் பெருகியிருக்கும் போது நாம் அதற்குச் சமமாக உயர்வதற்கு வழி கிடையாதா என்ற கேள்வி எழலாம். ஒரு வழி நிச்சயமாக உண்டு. நாம் பல முறை கூறிய வழி அது. மேல்நாட்டு வல்லரசுகளுடன் ராணுவ உடன்பாடு கொள்வதே அவ்வழி. சீனுவின் அணு ஆயுத சக்தியை உண்மையிலேயே அஞ்சச் செய்யும் தன்மை மேல்நாட்டின் அணு ஆயுத சக்திக்குத்தான் உண்டு. சீன மக்களில் உபரியானவர்களை மட்டுமின்றி அனைவரையுமே ஒருமொத்தமாக அழிக்கும் ஆற்றல் அமெரிக்காவுக்கு உண்டு என்பதைச் சீனு அறியும். 'இந்தியாவுக்குத் துணையாக இந்தச் சக்தி படைத்த வல்லரசு நிற்கிறது' என்பதொன்றே சீனுவைத் தடுக்கும் அஸ்திரமாகும்.

அபரிமிதமான செலவு செய்து மூன்றும் தர அணு ஆயுதங்களைச் செய்யும் போட்டி இல்லாமல், மௌனமாகவே எதிராளியை அச்சுறுத்தும் வழி இதுவே.

புது ருஷியா சீனாவுடன் சல்லாபிக்கத் தொடங்கிய பின்னும் உண்மை நிலையைப் பாரத சர்க்கார் உணரவில்லை எனில் அதை இந்நாட்டின் போதாத காலம் என்றுதான் சொல்ல வேண்டும். ருஷிய உதவி பெறுவதற்காக முன்பு திட்டமிடப்பட்ட 'மிக்' விமான ஏற்பாடுகளைக் கூட ரத்து செய்ய வேண்டிய தருணம் இது. அவ்வாறு நாம் ரத்து செய்தாலும் அதனைப் புதிய ருஷ்யத் தலைமை வரவேற்குமே யன்றி ஆட்சேபிக்காது.

மேல்நாட்டு வல்லரசுகளுடன் நாம் ராணுவ உடன்படிக்கை செய்துகொள்வதால் பாகிஸ்தானில் இருக்கக் கூடிய விரோத மனப்பான்மையையும் கட்டுப்படுத்த முடியும்.

ஓரிரண்டு அணுகுண்டு செய்வது நமக்குச் சாத்தியமா யிருக்கலாம். ஆனால் அது பூரண அணு ஆயுதப் போட்டியில்தான் கொண்டுவிடும். நம் நாட்டின் பொருளாதார அடிப்படை அதற்கு இடம் தராது. தரும ரீதியிலோ கேட்கவே வேண்டாம். பாரத நாகரிகத்துக்கு அணுகுண்டு என்ற சர்வ நாச ஆயுதம் முற்றிலும் முரண்பட்டதாகும்; நம் நாட்டுப் பெரியோர்களும் சர்க்காரும் இதுவரை பேசிய பேச்சுக்கு முற்றிலும் முரண்பட்டதாகும்.

[இவ்விதம் அச்சேறும் தருணத்தில் இந்தியா அணு ஆயுதம் தயாரிக்காது எனப் பிரதமர் பேசியுள்ள செய்தி கிடைத்துள்ளது.]

மீண்டுமா ரேஷன் கொடுமை?

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன் நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ் அடைந்த வீழ்ச்சிக்கு ஒரு காரணம் அப்போது அமுலில் இருந்த ரேஷன் முறை. வீழ்ந்த காங்கிரஸைத் தூக்கி நிறுத்தி ரட்சித்த ராஜாஜி ரேஷனை ஒழித்துக் கட்டி மக்களின் மனத்தில் பால் வார்த்தார்; வயிற்றுக்கு உணவு படைத்தார். ராஜாஜியின் நடவடிக்கையைப் பார்த்து அன்று மத்திய உணவு மந்திரியாக இருந்த ரஃபி அகமத் கித்வாய் அவர்கள் அகில இந்திய ரீதியில் உணவுக் கட்டுப்பாடுகளை நீக்கி நாட்டில் பசிக் கொடுமை தீர உதவினார்.

பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பின் இன்று நடப்பதென்ன? அன்று ஒழித்துக் கட்டிய ரேஷன் சனியனுக்கு இன்று ஆட்சியாளர்கள் பூரணகும்பம் அளித்து வரவேற்கிறார்கள். ராஜாஜி மந்திரி சபையில் உணவு மந்திரியாக இருந்தவர்தான் இன்று மத்திய உணவு மந்திரி! 'எங்கள் நிலக் கொள்கையில் தவறேதும் இல்லை; அதனால் உணவு உற்பத்தி குறையவுமில்லை; அதிகமாகவே உற்பத்தியாகியிருக்கிறது' என்று சொல்லிக் கொண்டு அதே மூச்சில் மறைமுகமாகவும் நேர்முகமாகவும் ரேஷனை மீண்டும் புகுத்துகிறார்கள். உணவு தானிய விற்பனையில் சர்க்கார் சர்வாதிபத்தியம் ஏற்பட்டு வருகிறது. இந்த நடவடிக்கைகளுக்கு அரிசிப் பஞ்சம் காரணமில்லை எனில் அரசாங்கத்தின் அறிவுப் பஞ்சம்தான் காரணம். நிலச் சொந்தக்காரர்களிடம் நம்பிக்கையில்லாமல், உணவு வியாபாரிகளிடமும் நம்பிக்கை இல்லாமல், தங்கள் கொள்கையில் மட்டும் வீம்பு நம்பிக்கையுடன் அரசாங்கம் குருட்டுத்தனமாக நடந்து வருகிறது. முடிவில் ரேஷனும் வந்துவிட்டதால் மக்களுக்குச் சர்க்காரிடமிருந்த நம்பிக்கைக்குச் சாவு மணி அடித்தாகி விட்டது. அதோடு ஜனநாயகத்திலும், நாகரிக அரசாட்சியிலும் உள்ள நம்பிக்கையும் நாசமாகி விட்டது.

புதிய பிரதமர் லால் பஹதூர் அவர்கள் எப்படிக் கண்ணைக் கட்டிக் கொண்டு, காங்கிரஸ் மேலிடத்தின் துர்யோசனைகளின்படி செல்கிறார் என்பதைக் காண பயங்கரமாக இருக்கிறது. உணவு வியாபாரிகளின் ஆலோசனையைக் கேளாமல் இவ்வர்த்தகத்தில் சர்க்கார் இறங்கி யிருப்பது மட்டுமின்றி, வியாபார சமூகத்தையே போதிய விசாரணையின்றி அசாதாரண முறையில் கைதிகளாக்கவும் உத்தேசித்திருப்பது சர்க்காரின் மமதைக்கும் யதேச்சாதிகாரத்துக்கும் எடுத்துக் காட்டு. விரிந்து பரந்த இத்தேசத்தில் பரவலாக வாழும் லட்சோபலட்சம் வியாபாரிகள் கூட்டுச் சேர்ந்து சதி செய்து உணவுப் பண்டங்களைப் பதுக்கிக் கொள்ளை லாபம் அடிக்கிறார்கள் என்று அரசாங்கம் நினைப்பது பகுத்தறிவுக்கு இம்மியும் ஒவ்வாத வாதம். தான் கொள்ளை லாபம் அடிக்கவில்லை, குற்றம் செய்யவில்லை என்று நிரூபணம் செய்ய இயலாத எந்த வியாபாரியும்

...ற்றவாளிதான் என்கிற முடிவுக்குச் ...ர்க்கார் வந்திருப்பது வருந்தத்தக்கது.

அரசியல்வாதிகளைவிட வியாபாரிகள் ...ம்பிக்கைக்கு உரியவர்கள். சர்க்கார் ...லையிட்டதால்தான் எல்லாம் குழப்ப ...ாகி விட்டது என அவர்கள் கூறு ...றார்கள். நிர்ப்பந்தங்களை நீக்கினால் ...யாபாரம் தன்னால் சரியாகப் போகும்.

நாற்பது கோடி மக்களின் வாழ்வு ...ாங்கிரஸ் மேலிடத்தில் உள்ள ஒரு ...லரின் கையிலேயே சிக்கிக் கொண்டு ...வர்கள் கையிலேயே பிரதமரும் சிக் ...க்கொண்டிருப்பதால், உணவு மட்டு ...மின்றி, துணி, சர்க்கரை, சிமெண்ட், ...ருந்து எல்லாத் துறைகளிலும் சர்க் ...ாரின் ஏக போக்கியத்தை ஏற்படுத்தத் ...ிட்டங்கள் உருவாகின்றன. சர்க்கார் ...ர்வாதிபத்தியம் எதுவரையில் செல் ...லும் என்று ராஜாஜி எச்சரித்தாரோ அந்த எல்லையை எட்டிவிட்டது.

இதைத் தொடர்ந்து, ஊக்கம் இல்லாத ஊழியர் பட்டாளம் பெருகும். கணக்கில் வந்த நஷ்டமும் கணக்கில் வராத நஷ்டமும், வெளிப்படையான நஷ்டமும் ஒளித்து வைத்த நஷ்டமும் பெருகும். இதற்கெல்லாம் ஈடு செய்வதற்காக வரிகளும் உயரும்; விலைகளும் உயரும். இரண்டாம் உலக யுத்தத்தில் அடிநாசமாகி யிருந்த ஜெர்மனியும், ஜப்பானும் தனியார் தொழில் மூலம் இன்று பழைய நிலையைக் காட்டிலும் சிறப்பாக உயர்ந்துள்ளபோது, இந்தியா அதற்கு நேர்மாறாகச் செல்வதை என்னென்பது?

ஆட்சியாளர்கள் நினைப்பது போல் வியாபாரிகளைத் தொழில் துறையிலிருந்து விலக்குவதல்ல இன்று நாட்டின் தேவை; காங்கிரஸை ஆட்சி பீடத்திலிருந்து விலக்குவதுதான் முதல் தேவை என்பதை மக்கள் அறியவேண்டும்.

ஒரு காந்திஜி தோன்ற வேண்டும்!

இலங்கையின் முன்னேற்றத்துக்குப் பரம்பரை பரம்பரையாகப் பாடுபட்ட பல லட்சம் மக்களை அந்நாட்டிலேயே சௌகரியமாக வாழச் செய்ய வழி காணாமல், அவர்களில் எவ்வளவு பேரை எப்படிப் பங்கு போட்டு இந்தியாவுக்கு வரவழைத்துக் கொள்ளலாம் என்பது பற்றி நம் சர்க்கார் இலங்கைப் பிரதமருடன் வாதம் நடத்தி முடித்திருக்கிறது. இந்தப் பேர விவாதம் நீடித்து, அதற்கேற்ப ஸ்ரீமதி சிரிமாவோ அம்மையின் தில்லி வாசமும் நீடித்தது. இரு சர்க்கார்களின் 'உடன்படிக்கை'க் கணக்குகளைப் பார்க்கும்போது தமிழ் இதயங்களின் ரத்தம் கொதிக்கும். பல தலைமுறைகளுக்கு முன் இலங்கை சென்று அந்நாட்டில் தங்கள் நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்து, அதனை வாழ்வித்தவர்களின் வாரிசுகளில் பெரும் பகுதியினருக்கு அங்கு இடமில்லை என்ற அநியாயத்தை எப்படி ஏற்பது? இலங்கையில் பிறந்த ஓர் இந்திய வமிசாவளியினர் அங்கேயே வாழ விரும்பி அந்நாட்டில் வேலை செய்து வரும்போது, அந்த ஒரே ஒருவரை 'நாடற்றவ'ராக்கி இந்தியாவுக்குத் துரத்தினாலும் அது அநீதியாகும். ஆனால் இப்போதோ ஐந்து லட்சத்துக்கு மேற்பட்டவர்களை அகதிகளாக்கியுள்ள ஏற்பாட்டுக்கு இந்திய சர்க்கார் ஒப்புக் கொண்டிருக்கிறது. இது இலங்கை சர்க்காரின் வெற்றி. தமிழர்கள் அகதிகளாக நிற்கின்றனர்.

அன்று தென் ஆப்பிரிக்காவில் இந்தியர்களுக்காக ஒரு காந்திஜி எழுச்சி கொண்டு போராடியது போல் இன்று இலங்கைத் தமிழர்களுக்காக ஒருவர் அந்நாட்டில் எழுச்சி பெற மாட்டாரா? இலங்கை அரசாங்கத்தை விடக் கொடிய எதிராளியுடன் காந்திஜி போரிட்டார். அன்று மனித உரிமை சாஸனத்தைக் காக்கும் ஐக்கிய நாடுகள் சபையும் இருக்கவில்லை. எனினும் அண்ணலின் சத்தியம் வென்றது. இலங்கையிலும் சத்தியத்துக்காகப் போராட ஒரு தீரன் தோன்ற வேண்டுமென்று ஆண்டவனைப் பிரார்த்திக்கிறோம்.

வருந்துகிறோம்

மைசூர் ராஜ்யத்தின் நீண்ட காலத் தலைவர்களில் ஒருவரும் மத்தியத் தொழில் மந்திரியுமான ஸ்ரீ ஹெச். வி. தாஸப்பா அவர்களின் திடீர் மறைவு கேட்டு வருந்துகிறோம். மைசூர் ராஜ்யத்திலும் மத்திய சர்க்காரிலும் பல பதவிகளை வகித்த தாஸப்பா சமீபத்தில்தான் தொழில் துறையில் பொறுப்பேற்றார். அவரது மனைவியும், மைசூர் மந்திரி சபையின் சமூக நல மந்திரியுமான ஸ்ரீமதி யசோதரா தாஸப்பாவுக்கு நமது அநுதாபங்கள்.

கந்தன் கருணை



'கல்கி'யில் முருகவேளின் மதுர சரி கட்டுரைத் தொடராக வருவதற்கு ஜ குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசா ஸ்வாமிகள் அளித்துள்ள ஆசியுரை :

உலகத்தில் நன்மைகள் வளர்வ காகத் தீய சக்திகளை அழிக்கும் வ யில் சிவப்பிழம்பாய் உருவெடு கந்தப் பெருமானின் அற்புத திருவிளையாடல்களை நமது தல்மு யில் எடுத்துரைக்கப் பெரு வாய்ப் படைத்த ஸ்ரீ கிருபானந்தவாரியார் வாக்கின் மூலம் பாமரமக்கள் மு லாக எல்லா ஆத்மாக்களுக்கும் கந் பெருமானிடத்தில் அன்பு வெள்ள பெருகுமாறு அவ்விறைவனுடை அருளையே பிரார்த்திக்கின்றோம்.

முன்னுரை

திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்

★

வளமையான கானகம்: அங்கு கூடியுள்ள அனைவரும் சிறந்த தபோதனர்கள். சடை முடியும், வேதம் மணக்கும் மலர் வாக்கும், கருணை பொழியும் கண் மலர்களும் படைத்த மாதவ முனிவர்கள் ஆயிரக்கணக்காக அங்கே குழுமியிருந்தார்கள்.

அந்த மகாநாட்டுக்கு வேத வியாசர் தலைமை தாங்கினார்.

''இனி கலியுகம் பிறக்குமே. அதர்மம் தலைவிரித்துத் தாண்டவம் புரியும் அக் கலியின் கொடுமையை எப்படி நாம் சமாளிப்பது? கோடை வெயில்போல் கொதிக்குமே ?'' என்றார்கள் முனிபுங்கவர்கள்.

வியாச முனிவர் திருவாய் திறந்தார் எங்கும் ஒரே அமைதி. எல்லோரு அவருடைய மலர் வாக்கையே நோக் நின்றார்கள்.

''ஸ்கந்தஸ்ய கீர்த்தம் அதுலாம்
கலி கல்மஷ நாசனீம்''

என்று தெளிவுறக் கூறினார் வே வியாசர்.

''கந்தப் பெருமானுடைய இணையற்ற கீர்த்தி ஒன்றுதான் கலியில் வரும் பாவங்களைப் போக்க வல்லது'' என்றார். தங்களுக்காகச் சொந்தக் கவலையின்றி, உலக மாந்தருக்காகவே கவலைப்படும் முனிவர்கள் அவர் வாக்கைக் கேட்டுச் சாந்தமுற்றனர்.

கலியுகத்தின் வெப்பத்தைத் தணிக்கும் கற்பக நிழல் கந்தவேளின் கருணை. கலியுக வரதராம் அப்பரமனது சரிதையை ஸ்காந்த புராணமாக ஆதியில் வியாச முனிவர் கூறியருளினார்.

ந முருக கிருபானந்தவாரியார்



ாணம் என்றால் பழைமை
ு என்பது பொருள். வேதத்
உள்ள நுண்ணிய தருமங்களை
ுச் சொல்வது புராணம். சிறு
ரத்தின் நுண்ணிய சக்கரங்
பூதக் கண்ணாடி மூலம் அறி
பால், வேத நுண் பொருள்
புராணமாகிய பூதக் கண்
மூலம் அறிதல் வேண்டும்.
கள் கூறும் பல உண்மைகளை
பாதனைகளையும் புராணங்கள்
கிக் கூறும்.

ாணங்கள் பதினெட்டு. இவற்
ிவபுராணம் பத்து. விஷ்ணு
ரம் நாலு. பிரம்ம புராணம்
டு. சூரிய புராணம் ஒன்று.
னி புராணம் ஒன்று.

ுதப் புராணங்கள் பதினெட்
சேர்ந்து கிரந்த எண் நாலு
ம். இதில் கந்தபுராணம் ஒரு
ம், மற்ற பதினேழு புராணங்
கிரந்த எண் மூன்று லட்சம்.
ல் கந்தபுராணத்தின் பெருமை
ு விளங்கும். பரந்து விரிந்து
 நூல் கந்தபுராணம்.



முருகப் பெருமானுக்கு எவ்வளவோ நாமங்கள் இருப்பினும் அவனது சரிதம் 'கந்தபுராணம்' எனப் பெயர் பெற்றது ஏன் எனப் பார்ப்போம்.

ஐயனின் நாமங்களில் கந்தன் என்பது தனிச் சிறப்பு உடையது. 'ஸ்கந்த' என்ற சொல்லுக்குப் பகைவர்களுடைய பராக்கிரமத்தை வற்றச் செய்கிறவன் என்பது பொருள்.

சத்ரூன் சோ்ஷயதீதி ஸ்கந்த :

என்பது நிகண்டு.

பகைவர்களை அழிப்பவனல்ல பரமன். அவர்களின் பகைமையை வற்றச் செய்பவனே அவன். பாகற்காய் கசக்கிறது என்பதனால் அதனை அழித்தா விடுகிறோம்? கருணைக் கிழங்கு காருகிறது என்பதனால் அதனை ஒதுக்கியா விடுகிறோம்? பிற சாதனங்களால் பாகற்காய், கருணைக்கிழங்கு இவற்றின் தன்மையை மாற்றி அதன் பின் சுவைக்கிறோமல்லவா? இவ்வாறேகந்தப்பெருமான் பகைவர்களின் கொடுமையை நீக்கி அவர்களுக்கு உயர் பதவி தந்தாரேயன்றி அடியோடு அழித்து விடவில்லை. சிங்கமுக அசுரனின் கொடுமையை மட்டுமே வதைத்து அவனை எம் பிராட்டி உமையம்மைக்கு வாகனமாகத் தந்தார். சூரபதும அசுரனையோ அடக்கித் தமக்கே வாகனமாகிய மயிலாகவும், கொடியாகிய சேவலாகவும் செய்து கொண்டருளினர்.



தீயவை புரிந்தாரேனும்
குமரவேள் திருமுன் உற்றால்
தூயவராகி மேலைத்
தொல் கதி அடைவர்.....

நல்லவர்கட்கு எப்போதும் பகை உண்டு. மிக மிக நல்லவர்கட்கு ஆபத்துண்டு என்றார் பெர்னார்ட் ஷா. நல்லோருக்கு வரும் பகையை எம்பெருமான் அடக்கியருளுவான்.

மற்றொரு பொருளும் உண்டு. ஆறு திருமேனிகளும் ஒன்றுபட்டவன் கந்தன். ஒன்றுபட்டவன்தான் நம் அ... வரையும் அருளில் ஒன்றுபடுத்துவான். ஒரு பொருள் பலவாகப் பிரிந்தால் ஒ... உண்டாகும். பல பொருட்கள் ஒன்... கூடினாலும் ஒலி உண்டாகும். மு... கனைக் கூவி அழைத்தால் அவன் ந... உள்ளத்தில் ஒன்றுகிறான்.


'கந்து' என்றால் யானை கட்டுந் தூ... 'அன்' என்பது ஆண்பால் ஒரும... விகுதி. ஆன்மாக்களுக்குப் பற்று... கோடானவன் கந்தன். வறுத்த அரிசி... கேழ்வரகு, கம்பு இவைகளை யந்திர... தில் அரைப்பார்கள். அந்தத் தானிய... யந்திரத்தின் இடையில் உள்ள நடு... தறியின் அருகில் இரு... தால் அரைபடாத... நடுத் தறியை விட்... விலகினால் தூள்பட்... விடும்.

அதுபோல் இறை... வனைப் பற்றி நின்ற... அகங்கார மமகா... மான இரு கற்களா... நாம் அரைபட மாட... டோம். ஆன்மா... களுக்குப் பற்று... கோடாக அருள் பு... யும் முதல்வனுடை... புராணம் இது எ... பதைக் குறிப்பிடவே... 'கந்தபுராணம்' என... பெயர் பெற்றுள்ளது... தனக்குப்பற்றுக்கோ... ஏதும் இல்லாது, தா... யாவற்றுக்கும் பற்று... கோடாக உள்ள பர... பொருளைக் கந்த... எனத் தமிழ் மர... கூறும்.

கண்ணனும் விபூ... யோகத்தில், " நா... சேனைத் தலைவருக்கு... ஸ்கந்தனாக இருக்... றேன்" என்பதாக... கந்தன் பெயரை... குறிப்பிடுகிறார்.

"எந்தப் பொருளும் கந்த புராண... துள்ளது", "கந்த புராணத்தில் இ... லாத பொருள் எந்தப் புராணத்திலு... இல்லை" என்ற பழமொழிகளாலும் கந்... புராணத்தின் பெருமையை உணரலாம்.

ஒவ்வொரு புராணமும் ஒரு முக்கி... மான போதனையை அளிக்கிறது. வா... மையின் மேன்மையை விரிவுபடுத்துவ... அரிச்சந்திர புராணம். பெண்ணுசையி... தீமையை முக்கியமாய் விளக்குவ... இராமாயணம். மண்ணாசையி...


CAUVERY
SUPER
SOAP

தந்தை வழி தனயன்



மையை விளக்குவது பாரதம்: எதற்கும் நேரமில்லாத இக்காலத்தில் — த்துள்ள பண்டங்களைச் சுவைத்து உண்ணவும் நேரமின்றி வைடமின் மாத்திரைகளை விழுங்கும் இக்காலத்தில் — கந்தபுராணம் முழுவதையும் பிழிந்து எடுத்து ஒரு வைடமின் மாத்திரையைப் போதனையாகத் தரலாம்.

கந்த புராணம் கூறும் அந்த முக்கியமான படிப்பினை என்ன?

ஒருவன் கள் குடித்தாலும், கொலை புரிந்தாலும், களவு செய்தாலும் குற்றவம் செய்து உய்வு பெறலாம். நன்றி கொன்ற பாவத்துக்கு மட்டும் உய்வு கிடையாது.

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்
உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு

என்கிறார் திருவள்ளுவர். இந்தப் போதனையே கந்த புராணம் முக்கியமாக எடுத்துக் கூறும் தருமமாகும்.

வாழ்வும் வரமும் ஆக்கமும் ஊக்கமும் வாரி வாரி வழங்கிய சிவபெருமானுடைய திருக் குமாரனாகிய முருகப் பெருமானையே எதிர்த்தான் சூரபத்மன். அவன் மறந்த நன்றியே அவனை அழித்து விட்டது. கூற்றுவன் என்று ஒருவன் அவனுக்குத் தேவைப்படவில்லை.

ஒன்றொரு பயன்றனை
புதவினோர் மனங்
கன்றிடவொருவினை
கருதிச் செய்வரேல்
புன்றொழில் அவர்க்கு முன்
புரிந்த நன்றியே
கொன்றிடும் அல்லது
கூற்றம் வேண்டுமோ ?

ஆதலால் நன்றி கோறலால் வரும் விளைவை விரித்துக் காட்டும் தரும நூல் கந்த புராணம். இதனைப் படிப்போர் நன்றி மறவாமையை மேற்கொள்வார்களாக!

கந்த புராணத்தை ஓதுவோர் நன்றி மறவா நற்குண சம்பத்தோடு எல்லா இம்மை மறுமை நலன்களையும் எளிதில் பெறுவார்கள்.

இந்திர ராகிப் பார்மேல்
இன்பமுற் றினிது மேவிச்
சிந்தையில் நினைந்த முற்றிச்
சிவகதி யதனிற் சேர்வர்
அந்தமில் அவுணர் தங்கள்
அடல்கெட முனிந்த செவ்வேற்
கந்தவேள் புராணந் தன்னைக்
காதலித்து ஓதுவோரே

கந்த புராணமாகிய அமுதக் கடலிலே முழுகினால் எத்தனை எத்தனையோ தத்துவ முத்துக்களையும், நீதி ரத்தினங்களையும், பக்தி வளங்களையும் வாரி எடுத்து நாம் இன்புறலாம்.

கனியமுதமான இனிய தனியமுது கந்தவேள் கருணை.

அக்கருணை வெள்ளத்தில் மனித குலம் அனைத்தும் முழுகி இன்புறுமாக !

•

கந்த புராணம் ஆறு சம்மிதைகளை உடையது. சங்கர சம்மிதை, சனற்குமார சம்மிதை, சூத சம்மிதை, பிரம சம்மிதை, விஷ்ணு சம்மிதை, சூர சம்மிதை என்பவை அவை.

இவற்றுள் சங்கர சம்மிதை பன்னிரண்டு கண்டங்களை உடையது. அவற்றில் முதல் கண்டம் சிவ ரகசிய கண்டம். சிவ ரகசிய கண்டத்தில் சம்பவ காண்டம், அசுர காண்டம், மகேந்திர காண்டம், யுத்த காண்டம், தேவ காண்டம், தட்ச காண்டம், உபதேச காண்டம் என்ற ஏழு காண்டங்கள் உள்ளன.

வேத வியாசர் செய்த கந்த புராணத்தின் இந்த ஏழு காண்டங்களில் முதல் ஆறு காண்டங்களைத் தமிழில் தந்த தவக் கவி கச்சியப்ப சிவாசாரியர்.* கந்தன் கதையை அறியுமுன் அதனைத் தந்த இவருடைய கதையைப் படித்து மகிழ்வோம்.

* ஏழாவது காண்டத்தைக் குகனேரியப்ப முதலியார் தமிழில் அருளிச் செய்தார்.

1. சரித நாயகன் சரிபார்த்த கதை

அண்டர் புகழும் தொல் புகழுடைய தொண்டை நன்னாட்டின் திலகமாக விளங்கும் காஞ்சிமா நகரம் முக்தித் தலங்கள் ஏழினுள் ஒன்று என்பது மட்டுமல்ல; தமிழ் செழிக்கும் தவநகரம் அது.

'' செந்தமிழ்க்கு வரம்பெனச்
செப்பிய மூதூர் காஞ்சி ''

என்பது பாடல்.

இம்மாநகரில் ஆதி சைவ வேதியர் குலத்திலே வந்தவர் காளத்தியப்ப சிவாசாரியர். இவர் கல்வி கேள்வி ஒழுக்கத்தில் உயர்ந்தவர். இவர் பலகாலம் மகப் பேறு வேண்டி, காஞ்சியிலுள்ள குமரகோட்டத்துக் கந்தவேளை எந்த வேளையும் போற்றித் தவம் புரிந்தார்.

மாதவத்தின் பயனாக அவருடைய மனைவியார் கருவுற்றார். வலம்புரிச் சங்கில் ஆணி முத்து உதித்தது போல் தமிழகம் உய்ய, சிவநெறி ஓங்க, கந்தன் புகழ் வளர ஒரு மகவு தோன்றியது.

அறிவு, அன்பு, அடக்கம் முதலிய நற்குணங்களுடன் பிறந்த அப்புதல்வர் இனிது வளர்ந்து கச்சியப்பர் என்ற திருப்பெயருடன் விளங்கினார்.* தமிழ், சம்ஸ்கிருதம் என்ற இரு மொழிகளிலும் வல்லவர் ஆனார்.

நாம் எடுத்துக் கொண்டுள்ள கந்த புராணத்தின் ஆசிரியர் என்ற பாரபட்சமின்றி, கச்சியப்பருக்கு உரித்தான ஒரு தனிப் பெருமையை சத்திய வாக்காகவே இங்கு கூறலாம். தமிழகத்தின் திவ்விய நூல்களை ஆக்கித் தந்த கம்பர், சேக்கிழார் போன்ற மகா கவிகள் வைதிக மரபில் நன்கு ஊறியவர்கள் எனினும் அவர்களின் வேத ஞானம் நேர்முகமானதன்று. வேத அப்பியாசத்தில் அதிகாரம் பெற்றிருந்த கச்சியப்பரோ அருமறைகளில் நேர்முகமான அறிவு பெற்றிருந்தார். இருபத்தெட்டு ஆகமங்களிலும் அவர் நீந்தி விளையாடியவர். இதனால் அவரது வாக்குக்கு ஒரு தனி கம்பீரமும், கட்டுப்பாடும் உண்டு. இலக்கண, இலக்கிய ஞானத்தோடு சாஸ்திர ஞானமும் இருந்தால்தான் கச்சியப்பரின் வாக்கைப் பூரணமாகப் புரிந்துகொண்டு அதன் நடையழகு, தொடையழகு, சொல்லினிமை இவற்றோடு பொருளாழத்தையும் அநுபவிக்க முடியும்.

கச்சியப்பர் சமய தீட்சை பெற்றுத் தமிழ் வேதமாகிய தேவார திருவாசகங்களை ஓதினார். விசேட தீட்சை பெற்றுச் சிவாகமங்களில் கிரியா காண்டங்களைக் கற்றறிந்தார். அதன் பின் நிர்வாண தீட்சையும், ஆசாரிய அபிஷேகமும் பெற்றுச் சிவாகமத்தின் பொருளையும், தேவார திருவாசகத்தின் பொருளையும் உய்த்துணர்ந்தார். அப்பொருள் வேதத்தின் ஞான காண்டங்களாகிய உபநிடதங்களின் பொருளோடு அபேதமாக இருக்கக் கண்டார்.

தமது வட மொழி அறிவைக் கொண்டு தமிழ் மொழிக்குத் தாம் செய்ய வேண்டிய தொண்டு ஏதோ உள்ளது என்று உணர்ந்தவராய்க் குமர கோட்டத்து முருகப் பெருமானை மெய்யன்புடன் பூசித்து வந்தார் கச்சியப்பர்.

ஒரு நாள் கனவு கண்டார். நனவுகளைவிட இனிமையான, நனவுகளை விட உண்மையான அற்புதக் கனவு கண்டார். உலகக் கனவிலிருந்து உயிர்களை மீட்கும்கந்தக் கடவுள் கனவில் தோன்றி,

''அன்ப, உலகம் உய்யத் தமிழில் கந்த புராணத்தைப் பாடுதி!'' என்று கட்டளையிட்டருளினார்.

அதோடு அல்லாமல் எம்பெருமான் 'திகடசக்கரம்' என்று தாமே அடியெடுத்துக் கொடுத்தருளினார்.

---

* கச்சியப்பரின் காலம் ஆராய்ச்சிக்குரியது:

கச்சியப்பர் கண் விழித்து எழுந்தார்: கந்தன் கருணையை நினைந்து உருகினார்: மெய் சிலிர்த்தது. ''என்னே எம்பிரான் திருவருள்! மூவருக்கும் தேவருக்கும் எட்டாத முருகப் பெருமான் மிகச் சிறியேனாகிய தமியேனுடைய கனவில் தோன்றி அடியவனாக் கொண்டு ஆட்கொண்டருளிய கருணைத் திறத்தின் எளிமைதான் என்னே!'' எனத் திருவருளை வியந்து வியந்து விதிர்விதிர்த்தார்.

கந்தனின் கட்டளை கவிதையுருப் பெறத் தொடங்கி விட்டது. தினந்தோறும் கந்த புராணத்தைத் தமிழ்ப் பாடல்களாக்கினார். 'வாக்குக்கெட்டாத பொருளை வாக்கில் கொண்டு வந்தாயிற்றா? இதற்குமேல் சொல்ல ஏதுமில்லையா? இதில் சொன்னதெல்லாம் சரிதானா?' என்று எண்ணுவார். யார் சரி பார்க்கவும், திருத்தவும், தீர்ப்புக் கூறவும் முடியும்? 'அவனே துணை' என்று அந்தரங்க சுத்தமாக நம்பிப் பாடல்கள் எழுதிய ஏட்டையும் எழுத்தாணியையும் இரவில் அர்த்த ஜாமத்துக்குப் பின் திருவேலிறைவன் திருவடியில் வைத்துவிட்டுத் திருக்கதவம் சாத்திவிட்டு வருவார்.

நம்பினோர் எங்கேனும் கெட்டதுண்டா? மறு நாள் காலை மணிக்கதவம் திறந்து பார்த்தால், முன்னாள் வைத்துச் சென்ற மடலில் சில இடங்கள் திருத்தப்பட்டிருக்கும். நிகழ் காலத்தில் பத்திரிகை ஆசிரியருக்குக் கதை அனுப்பி அவர் திருத்துவது போல், முருகனே பிழை பார்த்துத் திருத்தியது கந்த புராணம்.

இவ்வாறு புராணம் பாடி முடிந்தது. 10,345 செய்யுள்களுடன் கூடிய அந்நூலை — ஐயனே அங்கீகரித்த நூலை — அறிஞரும் அங்கீகரிக்க வேண்டி அரங்கேற்றக் கருதினார் கச்சியப்பர். எல்லோருக்கும் அழைப்பு அனுப்பினார்.

குறிப்பிட்ட நாளில் காஞ்சிபுரம் இந்திர நகரம் போல் அலங்கரிக்கப் பெற்றது. மன்னர்கள், வேத வித்தகர்கள், சிவாகம பண்டிதர்கள், செந்தமிழ்ப் புலவர்கள், தேவார திருவாசக விற்பன்னர்கள், அடியார்கள் எல்லோரும் கூடினார்கள். எங்கும் இன்ப வெள்ளம் பெருக்கெடுத்தது.

கச்சியப்பர் கந்த புராணத்தைக் குமரகோட்டத்து இறைவர் முன் பீடத்தில் வைத்துப் பூசித்தார்.

அடியார்கள் அவரை உயர்ந்த பீடத்தில் இருக்கச் செய்து, சந்தனமும் மாலையும் புனைவித்தார்கள்.

கச்சியப்பர் முதற் பாடலை எடுத்து, ''திகட சக்கரச் செம்முகமைந்துளான்'' என்று கூறி, ''திகழ் தச கர செம்முகம்

ந்து உள்ளான்'' என்று பதப் பிரிவு ய்தார். ''விளங்கா நின்ற பத்துத் நக்கரங்களும், ஐந்து முகங்களும் டைய சிவபெருமான்'' என்று இவ் டிக்குப் பொருள் கூறினார்.

உடனே சபையில் இருந்த ஒரு புலவர் ழுந்து. ''ஆசாரிய பெருந்தகையே! கம் தசக்கரம் என்ற இரு சொற்கள் திகடசக்கரம்'' என்று புணர்தற்கு தி தொல்காப்பியம் முதலிய இலக் ண நூல்களில் இல்லையே?'' என்றார்.

கச்சியப்பர் ''இது என் வாக்கன்று. து செந்தமிழ்க் குமரனும் முருகனே டியெடுத்துத் தந்தது'' என்றார்.

அது கேட்ட அப்புலவர் புன்முறுவல் செய்து ''முருகன் கருணையை நான் றுக்கவில்லை. ஆனாலும் தாங்கள் கூறுவதை நான் எப்படி நம்ப முடியும்? அதனை முருகனே சபையறிய வெளி ட்டால் ஒப்புக் கொள்வோம். இல்லை யேல் நூலை அரங்கேற்ற விட மாட் டோம்'' என்று கூறி மறுத்தார்.

முதல் நாள் தம் பாடலை ஆண்டவ வின் அடிகளில் சூட்டி மறுநாள் பாடலின் அடிகள் திருத்தப் பெற்றுத் திரும்பப் பெற்ற கச்சியப்பர், இப் போதும் ஒரு நாள் அளவில் அய்யன் அருள்வான் எனத் திடமாக நம்பினார் ''நாளை அது நிகழும்'' என்றார்:

அன்றிரவு பூஜை முடிந்த பிறகு திருக்கதவம் தாளிட்டு உள்ளே வெறும் தரையில் உண்ணாது படுத்தார்.

அடியாருக்கு அடியெடுத்துத் தந்த கந்தவேள் அவருடைய கனவில் தோன்றி, ''அன்ப, சோழ தேயத்தில் வீர சோழியம் என்ற ஓர் இலக்கணம் உண்டு. திகழ், தசம் என்ற இரு பதங்கள் 'திகடசம்' எனப் புணர்தற்கு விதி அந்நூலில் சந்திப் படலத்தில் பதினெட்டாம் செய்யுளில் இருக்கின் றது. சோழ தேயத்துப் புலவன் ஒருவன் நாளை அதனைக் கொணர்ந்து பலரறியக் காட்டுவான்'' என்று அருளிச் செய்தார்.

மறுநாள் சபை கூடியது. கச்சியப்பர் பீடத்தில் அமர்ந்தார். அப்போது ஒரு புலவர் அங்கு வந்து வீர சோழியம் என்ற நூலை நீட்டினார்: அதனை வாங்கிப் பார்க் கச் சந்திப் படலத்தில் பதினெட்டாம் செய்யுளில் 'திகடசக்கரம்' என்பதற்கு விதி இருக்கக் கண்டு அதிசயித்தார்கள். வந்த புலவர் நூலைக் கச்சியப்பரிடம் தந்து சபையோரை நோக்கி, ''மறுப்புரை நீங்கியதா?'' என்று கேட்டார். உடனே ஒளி காட்டி மறைந்தருளினார்.

கச்சியப்பர் கந்தவேளின் கருணைத் திறத்தைக் கருதிக் கண்ணீர் சொரிந் தார். சபையோர் முருகனுடைய திருவருளையும், கச்சியப்பருடைய தவ வலிமையையும் எண்ணி இறும்பூது அடைந்தார்கள். கச்சியப்பரைப் பல முறையும் பணிந்தார்கள். மறுப்புரை கூறியவர் மன்னிப்புக் கேட்டுக்கொண் டார். ''அம்மறுப்புரையினால் தானே அப்பன் அருள் வெளிப்பட்டது?'' என ஆறுதல் கூறினார் கச்சியப்பர்:

இராமாயணத்தின் நாயகனான இராமபிரானே அக் காதையைக் கேட் டருளியது ஆதி காவியத்தின் சிறப்பு. இங்கோ கந்தன் தன் கதையைத் தானே சரி பார்த்து அதனை உலகு ஒப்புமாறும் செய்தான்.

புராண அரங்கேற்றம் தினந் தினம் நடைபெற்றது? தொண்டை மண்டல வேளாளப் பிரபுக்கள் நிரம்ப அன்ன தானம் புரிந்தார்கள். ஓராண்டில் அரங்கேற்றம் முடிந்தது.

புராணத்தையும் கச்சியப்பரையும் சிவிகையில் வைத்து நகர் வலம் வந் தார்கள். குடை பிடித்தார்கள் சிலர். வெண்சாமரம் வீசினார்கள் சிலர். கொடிகள் பிடித்தார்கள் சிலர். மேள தாளங்கள் முழங்கின. தோரணங்கள் நாட்டினார்கள். வாரணங்கள் முன் சென்றன. ஆரணங்கள் ஓதினார்கள். ஹர ஹர என முழங்கிக் கச்சியப்பரை வணங்கினார்கள்; வாழ்த்தினார்கள்.

கந்தபுராணத்தை ஓதி உய்ந்தார்கள். கச்சியப்பர் குமர கோட்டத்து முரு கனைப் பூஜை செய்து கொண்டும் ஞான நிஷ்டையில் அமர்ந்தும், முடி வில் கந்தவேளின் கழலினை நிழலிற் கலந்தனர்.

(தொடரும்)



அன்னையைப் போன்ற அழகொளி படைத்தவள்.




தாயைப் பார்த்தால்
மகளைப் பார்க்கவேண்டாம்.
ஒரே அச்சு! 'சகோதரிகளோ?'
என்றுகூடச் சிலர் சந்தேகிக்கின்றனர்.
தாயின் வழி சென்று தன் அழகைப்
பராமரிக்கிறாள் அவள். ஆண்டுகள் பல
சென்றாலும் அவள் எழில் குன்றாது. காரணம்,
தொடர்ந்து அவள் உபயோகிப்பது 'ஹேஸலின்'
ஸ்நோ. ...தனியாகவோ, பவுடர் படியும்
தளமாகவோ எழிலைப் பாதுகாத்து, அதற்கு
மெருகூட்டுகிறது 'ஹேஸலின்' ஸ்நோ.

'ஹேஸலின்' ஸ்நோ

உங்களுக்கு எழிலூட்டுகிறது.
'ஹேஸலின்' வரிசையில் மேலும் கிடைப்பவை
கோல்ட் க்ரீம், டால்கம்.

பர்ரோஸ் வெல்கம் & கம்பெனி (இந்தியா)
ப்ரைவேட் லிட்.
த. பெ. நெ. 290, பம்பாய்-1




BI-BW-20 TAM



இருபத்தொன்றும் அத்தியாயம்

எது காதல்?

மதுரையில் விழுப்பரையரின் வீட்டில் வந்து தங்கியிருந்த கயல்விழி, பைந்தமிழ்க் குமரனைக் காண முடியவில்லை என்ற செய்தியைக் கேட்டவுடன், அந்த அதிர்ச்சி தாங்காது படுத்த படுக்கையாகி விட்டாள். உணவை மறந்தாள்; உறக்கம் துறந்தாள்; பேச்சையும் இழந்தாள். எந்த நேரமும் விழிகள் ஏதோ ஒரு சூனியத்தில் நிலைக்குத்தி நின்றன. 'அவர் எங்கு சென்றாரோ? எப்படி இருக்கிறாரோ? உயிருடன் மீண்டும் அவரைக் காண முடியுமோ, முடியாதோ? பாண்டிய நாட்டுக்கும் அவர் திரும்பி வர முடியாது. அப்படி அவர் வந்தால் சிறை செய்து சோழ நாட்டுக்கு உடனே அனுப்பிவிட வேண்டும். சோழ நாட்டிலும் அவர் உலவ முடியாது. அவரைப் பிடித்துக் கடுமையான தண்டனை கொடுத்து விடுவார்கள். வேட்டுவர்களின் வேட்டைக்கு இலக்காகும் மானின் கதி நேர்ந்து விட்டதே அவருக்கு!'



கயல்விழி

அகிலன்

பயங்கரமான நினைவுகள் அவளைச் சூழ்ந்து கொண்டு விநாடிக்கு விநாடி அவள் சக்தியை உறிஞ்சி வந்தன. விழுப்பரையரின் மனைவியார் திருவுடைத் தேவி எவ்வளவோ ஆறுதல் கூறிப் பார்த்தார். தோழி உய்யவந்தாள் எப்போதும் அவளுடன் இருந்து அவளைத் தேற்றினாள். பலன் இல்லை.

விழுப்பரையரின் மனச் சுமை இருமடங்காகப் பெருகியது. பைந்தமிழ்க் குமரனுக்காக அவர் அலைந்து கொண்டிருந்ததோடு, கயல்விழியைக் காப்பாற்றும் பொறுப்பும் அவருக்கு வந்து விட்டது. விழுப்பரையரைப் பொறுத்த மட்டில் கயல்விழி இப்போது சாதாரண பாணர் குலப் பெண்மணியல்ல. அவளிடம் மறைந்து கிடந்த ஒரு மகத்தான சக்தியை அவர் முன்னமேயே உணர்ந்துகொண்டு விட்டார். அந்தச் சக்தியால் பைந்தமிழ்க் குமரனுக்கும் பாண்டிய நாட்டுக்கும் கிடைத்து வந்த பலனை அவர் மறக்கவில்லை. கயல்விழியின் உயிர் இப்போது பைந்தமிழ்க் குமரனுடையது. அதை எப்படியாவது காப்பாற்றித் தீரவேண்டும்.

அவனுக்காகவும், நாட்டுக்காகவும், கயல்விழியின் எதிர்கால இன்ப வாழ்வுக்காகவுமே அவளைக் காப்பாற்றித் தீர வேண்டும். சுந்தர பாண்டியனுடன் ஒன்றாக அவள் பாண்டிய நாட்டின் பைம்பொன் சிங்காதனத்தில் அமரும் காட்சியை அவர் தம் கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருகக் கண்டுகளிக்க வேண்டும்! பிறப்பால் அவள் அதற்கு உரியவளல்லவென்று யாரேனும் கூறினால், அவனுடைய உள்ளன்பால், உழைப்பால், தியாகத்தால் அவளே உரியவள் என்பதை விழுப்பரையர் உலகத்துக்கு உணர்த்துவார்!

தென் பாண்டிய நாட்டில் இருந்து அவள் தந்தையாரையும் சுற்றினரையும் மதுரைக்கு வரவழைத்தார். அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்து விட்டு, "கயல்விழியின் உடல் நிலை தேறியபிறகு நாட்டின் மேற்குப் பக்கத்தில் சுற்றி வரலாம்" என்று கூறினார். கயல்விழியின் தந்தை ஆதிச்ச தேவராலும் அவள் உள்ளத்துக்கு உறுதியளிக்க முடியவில்லை.

ஒரு நாள் மாலை விழுப்பரையர் மட்டிலும் தனியாகச் சென்று கயல்விழியின் கட்டிலில் அமர்ந்தார். அன்போடு இன்குரலில் சிறிது நேரம் அவளிடம் பேசினார். அவருக்கு அப்போது இருந்த மன நிலையில் பைந்தமிழ்க் குமரன் யார் என்பதை அவளிடம் மட்டிலும் கூறி விடலாமா என்று தோன்றியது. உடனே அந்த நினைவை மாற்றிக் கொண்டு விட்டார்.

"மகளே! எனக்குப் பெண் குழந்தைகள் இல்லை. நீயும் உய்யவந்தாளுமே இப்போது என் மக்கள். அந்தப் பாசத்தோடு, ஒருசில விஷயங்களை உன்னிடம் வெளிப்படையாகவே பேசலாம் என்று நினைக்கிறேன்......"

கயல்விழி அவரைப் பார்த்துக் கண்ணீருடன் புன்னகை செய்தாள். இவ்வளவு ஒன்றி இது வரையில் அவர் அவளிடம் பழகியதில்லை.

"நீ எதற்காக இப்படி உன்னையே வாட்டிக் கொண்டிருக்கிறாய்? நிதானமாகச் சிந்தனை செய்து பதில் கூறு."

"கங்காபுரிக்கு அவர் புறப்பட்ட போதே ஏதோ ஒரு சக்தி என்னிடமிருந்து அவரைப் பறித்துக் கொண்டு போவது போல் எனக்குத் தோன்றியது. பாதி உயிர் அப்போதே போய் விட்டது. மறு பாதி உயிரும் தாங்கள் கங்காபுரியிலிருந்து கொண்டு வந்த செய்தியால் போய்க் கொண்டிருக்கிறது. என்றாவது அவர் திரும்பி வந்தாரானால், அவரை நினைத்துக் கொண்டே உயிர் நீத்ததாக அவரிடம் சொல்லுங்கள்!"

"நான் சொல்ல மாட்டேன்!" என்று கூறி விட்டுச் சிரித்தார் விழுப்

பரையர். கயல்விழி திடுக்கிட்டாள்:

"நீ அவரை நினைத்துக் கொண்டிருப்பதாக மதி மயக்கம் கொண்டிருக்கிறாய். நினைவில் இருக்க வேண்டிய ஆழம் உன்னிடமில்லை. அதில் அழுத்தமில்லை. ஒரு தலைவி எந்த முறையில் தலைவனை நினைக்க வேண்டுமோ அந்த முறையில் நீ அவரை நினைக்கவில்லை."

"பேசாதீர்கள்!" என்று கதறித் தன் செவிகளைப் பொத்திக் கொண்டாள் கயல்விழி.

"கயல்விழி! உன்னுடைய அன்பில் அணுவளவும் நான் மாசு மறு கற்பிக்கவில்லை. உன்னுடைய அன்பையும் ஆற்றலையும் நாளடைவில் நான் தெரிந்து கொண்டேன். அதனால்தான் நீங்கள் ஒன்றிப் பழகுவதை அனுமதித்தேன். இப்படி உங்கள் அன்பு வளர்ச்சியுறுவதில் என்னைப்போல் யாருக்குமே அவ்வளவு மகிழ்ச்சியிருக்காது."

கயல்விழி வியப்போடு அவர் சொற்களை உற்றுக் கேட்டாள். 'விழுப்பரையருக்கு எல்லாமே தெரிந்து விட்டது போலும்!'

"நீ அவரையே நினைத்துக் கொண்டிருப்பதாகக் கூறுகிறாயல்லவா? அந்த நினைவுக்குப் பெயர்தான், எண்ணத்துக்குப் பெயர்தான், அன்பு என்பது. அந்த அன்பு அவருடைய தோற்றத்தைப் பற்றியதா? உள்ளத்தைப் பற்றியதா? உயிரைப் பற்றியதா? சிந்தனை செய்து சொல்" என்று நேரடியாக அவளிடம் வினவினார்.

சிந்தனை செய்தாள் அவள். அவளைச் சிந்திக்க வைத்து விட்டார் அவர்.

"அவருடைய தோற்றம், உள்ளம், உயிர், நோக்கம் எல்லாவற்றிலுமே என்னுடைய நினைவு துடிக்கிறது" என்றாள் கயல்விழி.

புன்னகை பூத்தார் விழுப்பரையர். "மெய்தான்: முக்கியமாக அவருடைய நோக்கமும் உன்னுடைய நோக்கமும் ஒன்றாகி விட்டன. அதற்காகத்தான் அவர் கூத்துப் புனைந்தார். நீ அதைக் குடி மக்களிடம் பரப்பி அவர்களுக்கும் வியப்பூட்டி வருகிறாய். மக்களுக்கு ஏற்பட்டு வரும் விழிப்பிலிருந்துதான் உங்கள் அன்பு மெய்யான அன்பு என்பதை நான் கண்டுகொண்டேன். ஓர் ஆணும் பெண்ணும் முறையாக ஒருவரிடம் மற்றவர் அன்பு செலுத்துவார்களானால், அந்த அன்பு அவர்களுக்கு மட்டும் இன்பம் தராது. சூழ்ந்திருக்கும் பலருக்கும் அதனால் நன்மை உண்டு. அவர்கள் உடல் அழிந்தாலும் அவர்களுக்குப் பின்னால் நெடுங் காலத்துக்கு அது நிலைத்திருந்து உலகத்துக்கு இன்பம் பெருக்கும். வள்ளுவரது இல்லற வாழ்வின் வெற்றிதான் நமது அழியாச் செல்வமான திருக்குறள்."

மெய் சிலிர்த்தது கயல்விழிக்கு. 'இடுக்கண் வருங்கால் நகுக!' என்று பைந்தமிழ்க் குமரன் அவளுக்கு வள்ளுவரைச் சொல்லிக் கொடுத்திருந்தான். துன்பமும் சோதனையும் வந்த காலத்தில் அலட்சியமாகச் சிரிக்க வேண்டுமாம்! வள்ளுவரையே இவரும் குறிப்பிடுகிறார்.

"சோதனை ஒன்று வந்தவுடன் நீ புலவரையும் அவருடைய லட்சியத்தையும் மறந்து விட்டாய். அதன் மூலம் அவரையே உன் எண்ணத்திலிருந்து அகற்றி விட்டாய்."

"இல்லவே, இல்லை!" என்று தேம்பினாள் கயல்விழி.

"மகளே! உலகத்தில் எத்தனையோ பெண்கள் இப்படித்தான் தொல்லையுறுகிறார்கள். அன்பை வளர்த்துக் கொண்டே, அதை முறைப்படி செயலாக்கத் தெரியாததால் துன்பப்படுகிறார்கள். மன வளர்ச்சியடையாத குழந்தைத்தனமுள்ள அன்பு வாழ்க்கைக்குப் போதவே போதாது. ஒரு சோதனை வந்தவுடன் நீ சிறு குழந்தையாகி விட்டாய். குழந்தைப் பிராயத்திலுள்ள அன்பு வாழ்க்கைக்குப் போதவே போதாது."

"அவர் பிரிவை என்னால் தாங்க முடியவில்லையே!"

"பிரிவு எப்படி ஏற்படும்? உன் எண்ணத்தில் அவர் எப்போதும் இருந்தால், பிரிவுக்கு உன் உயிருள்ள வரையில் இடமேது? நீ குழந்தையாகி விட்டாய். உன்னுடைய கண்கள் அவரைக் காணத் துடிக்கின்றன. உன் செவி அவர் சொல்லைக் கேட்க ஏங்குகிறது. உன்னுடைய புலன்களுக்கு அவர் அருகில் இருப்பதால் கிடைக்க வேண்டிய மகிழ்ச்சி இப்போது கிடைக்கவில்லை. உனக்கு அவை கிடைக்காததால் நீ துன்பப்படுகிறாய். விரும்பியது கிடைக்காததால் தேம்பியழும் குழந்தையாகி விட்டாய் நீ. உன் துன்பமே உனக்குப் பெரிதாகும் போது, அவரையும் அவர் லட்சியத்தையும் நீ மறந்து விடுகிறாய். குழந்தைக்குத் தனக்கு வேண்டும் என்று அழத்தான் தெரியுமே தவிர, தன் மீது அன்பு செலுத்துகிறவர்களுடைய கடமையைப் பற்றிய பொறுப்பு இருக்காது. ஆனால் உனக்குப்



பொறுப்புக்களும் கடமைகளும் நிறைய இருக்கின்றன.''

கயல்விழியின் உள்ளத்தில் ஒளி பாய்வது போன்ற ஒரு புதுமையான அநுபவம் ஏற்பட்டது. விழுப்பரையரின் சொற்களை அவள் திரும்பத் திரும்ப நினைவுக்குக் கொண்டு வந்தாள். அவள் உள்ளத்தில் புகுந்த அந்த ஒளி இப்போது அவள் முகத்திலும் மலர்ந்தது. குழந்தை அன்பு கொண்டிருந்தவள் தலைவிக்குரிய அன்பை உணரத் தொடங்கினாள்.

''கயல்விழி! தலைவன் தலைவிக்குரிய அன்பை அறிய வேண்டுமானால் ராமனையும் சீதையையும் எண்ணிப் பார்க்க வேண்டும். சீதை இராமனை மனப்பூர்வமாக நம்பினாள். அவனுடைய நோக்கத்துக்கு அவனும் பரிபூரணமாகக் கைகொடுத்தான். இராவணனை வென்று அவளை மீட்பதற்குச் சீதையின் துணையும் மகத்தானது.''

''சீதை துணை செய்தாளா?''

''ஆம்!'' என்றார் விழுப்பரையர். ''அவள் இப்படிக் கிடந்து தன்னை மாய்த்துக் கொள்ளவில்லை. பல ஆண்டுகள் இருவரும் பிரிந்திருந்தார்கள். கடல் கடந்த இரு வேறு நாடுகளின் தொலைவு அவர்களைப் பிரித்தது. இருவரைச் சுற்றிலும் எத்தனை எத்தனையோ சோதனைகள். ஆனாலும் சீதை தன் எண்ணத்தால் தன் தலைவனுக்கு ஆற்றல் தந்தாள். கனவிலும், நனவிலும் இராமனின் வெற்றியையே அவள் நாடினாள். எண்ணத்துக்குக் காலமேது, தூரமேது, மழை எது, வெயிலேது ? இராமனின் தோள் வலிமைக்கு வெற்றி தந்தது எது தெரியுமா ? அசோகவனத்தில் சீதை அவனுக்காகச் செய்த தவம்!''

கயல்விழி ஆனந்தக் கண்ணீர் பெருக்கினாள். ''தந்தையே ! நான் குழந்தைதான்; எனக்கு ஏதுமே தெரியவில்லை'' என்றாள் நாத் தழுதழுக்க.

''குழந்தையாக இருந்தது போதும். பைந்தமிழ்க் குமாரனுக்கு ஓர் ஆபத்தும் வந்து விடாதென்று நம்பு. அவர் எப்படியும் வெற்றி பெற்றே தீருவார் என்று நம்பு. வருகிற சோதனைகளை அவருடைய வெற்றியின் வழிகாட்டிகள் என்று நம்பு. அவருடைய வெற்றியில் தான் உன்னுடைய வாழ்வு இருக்கிறது என்பதை மறந்து விடாதே. எண்ணத்தை அவரிடம் நிலைக்கச் செய்து அவருக்குச் செய்யும் பணிவிடையாக உனது நடனத்தைத் தொடர்ந்து நடத்து. உன்னுடைய கூத்துப் பாடலில் அவர் எப்போதும் உன்னுடன் இருக்கிறார். அவர் இட்ட பணியைச் செய். அவர் எப்படியும் உன்னைத் தேடிக் கொண்டு வந்து விடுவார்.''

மந்திரச் சொற்களை அவளுக்குத் தந்து விட்டு, மெல்ல அங்கிருந்து எழுந்து சென்றார் விழுப்பரையர். கயல்விழிக்குப் புதிய உலகம் ஒன்று தென்பட்டது. அப்போதே அவ்விடத்திலேயே எழுந்து அவனுக்குப் பரவசமாக நடனமாட வேண்டும் என்று தோன்றியது. அவனுக்குச் செய்யும் பணிவிடை அது! அவனுடைய பணிகளைத் தொடர்ந்து செய்வதைவிட உயர்வான காதல் எது?

''அவர் என்னை விட்டு என்றுமே பிரிய மாட்டார்; அவர் என் எண்ணத்தில் இருக்கிறார். அவர் வெற்றியே என் பேச்சு; அவர் வெற்றியே என் செயல்; அவர் வெற்றியே என் வெற்றி!''

கயல்விழி குதூகலத்துடன் தன் படுக்கையிலிருந்து துள்ளிக் குதித்தாள். அடுத்த வாரமே அவளும் அவள் குழுவினரும் பாண்டிய நாட்டின் மேற்குப் பகுதிக்குப் புறப்பட்டார்கள்.

குட்டிக் கதை

அமெரிக்காவில் அவர் புகழ்பெற்ற புலவர். அவரது மனைவி ஒரு நாள் துயரமே உருவாக அமர்ந்திருந்தாள். அவள் அப்படியிருந்து அவர் பார்த்ததே இல்லை. காலில் விழாத தோஷமாக அவர் அவளைக் கெஞ்சி வேண்டினார்; துயரத்தின் காரணத்தைக் கூறுமாறு கேட்டார். வெகுநேரம் கழித்து அவள் வாயைத் திறந்தாள். ''சுதந்திரச் சிலை இருக்கிறதே, அதன் கால்களின் நீளம் தெரியுமா உங்களுக்கு?'' என்று கேட்டாள்.

''தெரியுமே! பத்தடி மூன்றங்குலம் ! ஏன் கேட்கிறாய்?'' என்றார் புலவர்.

''அந்தச் சிலையின் இடுப்புச் சுற்றளவு?'' என்று கேட்டாள் அவள்.

''ஏறக்குறைய இருபத்து நான்கு அடி!''

''மூக்கு ஐந்தடி. வாய் மூன்றடி அகலம். தலையின் அளவு எட்டடி! இல்லையா?''

''இம்மிகூடப் பிசகு இல்லை. அதற்கும் நீ வருத்தமாயிருப்பதற்கும் என்ன சம்பந்தம்?''

''என்னவா? உங்கள் கவிதையில் நான் சுதந்திரச் சிலையை நினைவுறுத்துவதாக எழுதியிருக்கிறீர்களே, அப்படி எழுத எப்படிக் கைவந்தது?'' என்று கேட்டாள் மனைவி.

இருபத்திரண்டாம் அத்தியாயம்

இன்ப வேட்டை

குலோத்துங்க சோழ சக்கரவர்த்தியின் வேட்டை தொடங்கி விட்டது. சிறை தப்பிச் செல்லும் குற்றம் அவரால் சிறிதும் மன்னிக்க முடியாத குற்றம். அதற்குத் தண்டனையளிப்பதில் இப்போது அவரைவிட அவருடைய குமாரன் இராஜ ராஜன் துடிதுடிப்பாக இருந்தான்.

சோழ நாட்டு வீரர்களின் சிறு படையொன்று நேரடியாக அமைச்சர் சயங்கொண்ட சோழ வல்லபரிடம் அனுப்பப் பெற்றது. அது அவருடைய ஆணைக்கு அடங்கி நடக்க வேண்டிய படை. அதன் மீது குலசேகர பாண்டியருக்கு எவ்வித அதிகாரமும் கிடையாது. வேண்டிய வசதிகள் செய்து கொடுக்க வேண்டியது அவர் கடமை. அவர்கள் பாண்டிய நாட்டில் பைந்தமிழ்க் குமரன் பிடிபடும் வரையில் இருப்பார்கள் !

ஐம்பது பேர்களைக் கொண்ட அந்தச் சிறு படை ஐந்தாறு பிரிவுகளாகப் பிரிந்து நாடு முழுதும் சுற்றித் திரிந்தது. அதிகார வெறியுடன் தன்னிச்சையாகப் புலவர்களாக இருந்தவர்களையெல்லாம் துன்புறுத்தத் தொடங்கியது. சயங்கொண்ட சோழ வல்லபரின் குரல் மாறியது; பேச்சு மாறியது; நடவடிக்கைகளும் மாற்றமடைந்தன. அதிகார வெறி என்பது மது வெறி போன்றது. அவருடைய அதிகாரம் இப்போது குலோத்துங்க சோழரின் அதிகாரம். அவரது வேட்டைப் படையினரைப் பாண்டியராலும் கட்டுப்படுத்த முடியாது.

பாண்டியர் பொறுத்துக் கொண்டார். அரசுக் கட்டில் என்பது அழகிய பஞ்சணைப்பீடமல்ல என்பதைப் பிள்ளைப் பிராயத்திலிருந்தே கண்டவர் அவர். அமைச்சரிடம் அவர் சிரித்துப் பேசினார். கூடிய வரையில் நிரபராதிகளான புலவர்களுக்குக் கொடுமைகள் நிகழாத வகையில் கவனித்துக் கொண்டார்.

விழுப்பரையரைச் சுற்றிலும் ஒற்றர்கள் சூழ்ந்தார்கள். நிழலாக அவர் எங்கு சென்றாலும் அவரைப் பின் தொடர்ந்தார்கள். மாதங்கள் சென்றன. பைந்தமிழ்க் குமரனை அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. புலவர்களிடம் தமக்கிருந்த வெறுப்பை எப்படியெல்லாம் தீர்த்துக் கொள்ள முடியுமோ, அப்படியெல்லாம் தீர்த்துக் கொள்ள முனைந்தார் சோழ வல்லபர். அவர்களை அமைச்சரின் கொடுமைகளிலிருந்து தப்பச் செய்வதே ஒரு பெரும் கடமையாகப் போய்விட்டது பாண்டியருக்கு.

விழுப்பரையரைப் பற்றிய கவலை வந்து விட்டது அவருக்கு.

''விழுப்பரையர் அவர்களே! தாங்கள் தாம் சோழவல்லபருக்கு நேரடியான பகைவர். அவர் அப்படித்தான் கருதுகிறார். ஆகவே எப்போதும் விழிப்போடிருந்து கொள்ளுங்கள்.''

''என்ன இருந்தாலும் அமைச்சர் சோழ நாட்டிலிருந்து வந்தவர். அவருடைய ஒற்றர்களும் அந்த நாட்டைச் சேர்ந்தவர்கள். எனக்கு இந்த நாட்டிலுள்ள ஒவ்வொரு செடியும் புதரும் குன்றும் மடுவும் தெரியும். அப்படி ஏதேனும் வந்தால், நான் இந்த நாட்டுக்குள் இருந்தாலே அவர்களால் என்னைக் கண்டுபிடிக்க இயலாது.''

''இந்த நிலை ஏற்பட்டதற்காக நான் மிகவும் வருந்துகிறேன். கொடுமைகளுக்கு இடையில் அரசர் என்ற பெயரோடு அதிகாரங்களை இழந்து விட்டு நிற்பதைவிட, இதைத் துறந்து விடுவதே நலமென்று தோன்றுகிறது.''

''அரசே! ஒரு வேண்டுகோள்....'' என்று தயங்கியவாறே அரசரின் முகத்தை நோக்கினார் விழுப்பரையர்.

''என்ன?''

''தங்களால் எனக்குச் சிறிதளவு அதிகாரம் வழங்க முடியுமா? அந்த அதிகாரத்தைத் தங்களது பெருமைக்கு இழுக்கு நேரும்படியாகவோ, குடிமக்களுக்குத் துன்பம் தரும் வகையிலோ நான் பயன்படுத்தமாட்டேன்.''

பாண்டியர் அதிர்ச்சியுறவில்லை. அவர் முகத்தை உற்று நோக்கினார்.

''தங்களால் ஆட்சிப் பொறுப்பிலிருந்து கொண்டு செய்ய முடியாத சில செயல்களை நான் செய்ய முனைந்திருக்கிறேன். என் முயற்சிகளுக்கு இடையூறுகள் நேர்ந்தால் அது என்னோடு போய் விடும். தங்களையோ நாட்டையோ பாதிக்காது.''

''என்ன வேண்டும்?'' என்று கேட்டார் பாண்டியர்.

''அவ்வப்போது எனக்குத் தேவைப்படும் ஆட்களை என்னுடைய பொறுப்பில் தாங்கள் விட்டுவிட வேண்டும். தங்களுக்கே தெரியாமல் அவர்கள் என்னோடு தொடர்பு கொண்டவர்களைப் போல் நடந்துகொள்ள வேண்

டும். என் ஆணைப்படி அவர்கள் நடக்க வேண்டும் என்றும் இரகசியங்களைக் காப்பாற்ற அவர்கள் உயிர் துறக்கவும் சித்தமாக இருக்க வேண்டும் என்றும் தாங்கள் கட்டளையிட வேண்டும். அவர்களுக்கு ஊதியம் கொடுக்க என்னிடம் பொருள் இல்லை. தாங்களே அதையும் கொடுக்க வேண்டும்.''

''காரணத்தை நான் அறியலாமா?''

''காலம் வரும் போது தாங்கள் கட்டாயம் அறிந்து கொள்வீர்கள். இப்போதைக்குத் தாங்கள் அறிந்தால், தங்களையும் சக்கரவர்த்தி தம் ஆணையை மீறிய குற்றத்துக்கு இலக்காக்கி விடுவார். நான் அதற்குத் துணிந்து விட்டேன். பொறுப்பில்லாத வெறும் புலவன் நான்.''

''தங்களை நான் நம்புகிறேன்.''

''தங்களுடைய நம்பிக்கை ஒன்று தான் நான் பெற்ற செல்வங்களிலெல்லாம் தலைசிறந்தது. தங்களது செஞ்சோற்றுக் கடனைத் தீர்ப்பதற்கு இன்னும் நான் ஏழு தலைமுறைகள் பிறவி எடுக்க வேண்டும். தங்களிடமே பணியாற்றும் பேறு பெற வேண்டும்'' என்று தழுதழுக்க குரலில் கூறினார் விழுப்பரையர்.

அவர் பொறுக்கி எடுத்த ஆட்களின் பெயர்களைக் கேட்ட போது அரசருக்கே அதிர்ச்சி தாங்கவில்லை. தம் பதவியையே இந்தப் பெரும் புலவர் பரிசிலாகக் கேட்பது போல் தோன்றியது. பாண்டியர் வழங்கி விட்டார்.

விழுப்பரையருக்குக் கங்கா புரியிலிருந்து அம்பலக் கூத்தன் அவ்வப்போது தகவல்களை அனுப்பிக் கொண்டிருந்தான். பைந்தமிழ்க் குமரனை மட்டும் அவனால் கண்டு பிடிக்க முடியவில்லை. மற்றபடி சோழ நாட்டு நடப்புக்கள் அவ்வப்போது தவறாமல் அவருக்கு வந்து கொண்டிருந்தன. குலோத்துங்க சோழர் நோய்ப் படுக்கையில் விழுந்து விட்டாராம். ''முதுமைப் பருவம் மட்டிலும் காரணமல்ல; குமாரனின் பொறுப்பற்ற தன்மை அவரைச் சீர்குலைத்து விட்டது'' என்று குறிப்பிட்டிருந்தான் அவன்.

அரசு எவ்வழி அவ்வழி மக்கள்! இராஜ ராஜனின் பொறுப்பில் ஆட்சி வந்தவுடனேயே பேராசையும் நாட்டில் பரவி விட்டதாம். களியாட்டம், மண், பெண், பொன் இவையே இராஜ ராஜனின் தேவைகள். இவற்றை அவனுக்குத் தாராளமாக வழங்குகிறவர்களுக்கு அவனும் உதவிகளைத் தாராளமாகச் செய்யத் தொடங்கி விட்டானும். ''பொன்னும் பொருளும் இருந்தால் இங்கு பல ஆட்சி ரகசியங்களைத் தெரிந்து கொள்ளலாம். வணிகரின் துணை இருப்பதால் எனக்குப் பொன் கிடைக்கிறது. விரைவில் பல செய்திகளைத் தங்களுக்கு அனுப்புகிறேன்'' என்று ஓலையில் சொல்லியிருந்தான் அம்பலக்கூத்தன்.

கங்காபுரியிலிருந்து அமைச்சர் சயங்கொண்ட சோழ வல்லபரிடம் வந்து கொண்டிருந்த ஒற்றன் ஒருவனைப் பிடித்துக் கொண்டு வந்து விழுப்பரையரிடம் நிறுத்தினார்கள் அவருடைய ஆட்கள். அவர் அவனை அன்போடு உபசரித்து வரவேற்றார். தனிமையில் அவனிடம் பரிவோடு பேசினார். ஒரு சிறு பை நிறையப் பொற்காசுகளை அவனிடம் நீட்டினார். அவனுடைய ஓலை கை மாறியது. அதைப் படித்தவுடன் அவருடைய இதயத் துடிப்பே நின்று விடும் போலிருந்தது. இராஜ ராஜன் அனுப்பிய ஓலை அது.

''புலவனுக்கும் கயல்விழி என்ற பாணர்குல மங்கைக்கும் நெருங்கிய — தொடர்பு இருப்பதாகத் தெரிகிறது. அவனுக்குக் கட்டாயம் அவளுடைய இருப்பிடம் தெரிந்திருக்க வேண்டும். அல்லது அவளுக்கு ஏதும் துன்பம் நேர்ந்தால் அவன் பொறுத்திருக்கமாட்டான். நமது வீரர்களை அனுப்பி அவனைச் சிறைப் பிடித்து அனுப்பவும்.''

''ஓலையை அமைச்சரிடமே சேர்ப்பித்து விடு!'' என்று கூறிப் பத்திரமாக அவனை அனுப்பி வைத்தார் விழுப்பரையர்.

(தொடரும்)

வெள்ளித்திரை — நேயர் விமர்சனம்

அடுத்து விமர்சனத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும் படங்கள்:

நவராத்திரி – படகோட்டி

விமர்சனம் வந்து சேரவேண்டிய கடைசித் தேதி: **14–11–64**



மனதுக்கினியவள்

மதுரமோகினி, மனதுக்கினியவள்,
மலரன்ன மென்மேனியாள்!
தவிர மல்லிகையின் மணம் கமழும் இவள் அழகே அழகு

இவள் ஜேய் மங்கை...

நீங்களும் ஜேய் சோப் உபயோகியுங்கள். மிருதுவான அதன் நுரை, உங்களுக்குப் புது மலர்ச்சியும், மல்லிகையின் நறுமணமும் அளிக்கிறது. ஜேய் சோப் உங்கள் மேனி எழிலை மேன்மையுறச் செய்கிறது.

★ மிதமிஞ்சிய மல்லிகை மணம்!
★ இளஞ்சிவப்பு நிறம்!
★ பளபளக்கும் ரேக்கு 'ராப்பர்'


உங்கள் மேனி எழில் பெருக
ஜேய் அழகு சாதன சோப்



BI-TJS-73 TA11

டாடா தயாரிப்பு





பண்புப் பண்ணை வளருகிறது!

★

அக்டோபர் 29ந் தேதியன்று பாரதிய வித்யாபவன சென்னை கேந்திரத்தின் விஸ்தரிப்புத் திட்டம் விமரிசையாகத் தொடங்கிற்று. அன்று மாலை மயிலையில் பவனத்துப் புதுக் கட்டடத்துக்கு ராஷ்டிரபதி ராதாகிருஷ்ணன் அவர்கள் அஸ்திவாரம் அமைத்தார்.

ஸ்ரீ ராதாகிருஷ்ணனை பவனத் தலைவர் ஸ்ரீ முன்ஷி அவர்கள் வரவேற்றார்.

செங்காலிபுரம் ஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர் பவனத்துக்கு ஆசி அளித்தார்.



வித்யாபவனத் தலைவர் முன்ஷியும், சென்னை கேந்திரக் காரியதரிசி ஸ்ரீ கெ. பாலசுப்பிரமணிய ஐயரும் மகிழ்ந்து நோக்க, ராஷ்டிரபதி அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

பவன வெளியீடுகளைத் தலைவர் ராஜாஜி வெளியிட்டு, ஸ்ரீ ராதாகிருஷ்ணனுக்குப் பிரதிகள் அளித்தார்.




ஏராளமான பெருமக்கள் இவ் விழாவில் கலந்து கொண்டனர்.

மைசூர் மகாராஜா, டாக்டர் ஸி. பி. ராமஸ்வாமி அய்யர், மந்திரி ஆர். வெங்கட்ராமன் ஆகியோர் பவனம் வளர்ச்சியுற வாழ்த்துக் கூறினர். சென்னை கேந்திர அபிவிருத்தித் திட்டத்தை அதன் தலைவர் டாக்டர் ஏ. எல். முதலியார் விளக்கினார்.

ஸ்ரீமதி எம். எஸ். ஸின் இசை விருந்துடன் விழா நிறைவு பெற்றது.





பாலுஸேரி பெனிபிட் சிட் பண்டு
பிரைவேட் லிமிடெட்

"பாலுஸேரி பில்டிங்ஸ்"

3, சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி

தபால் பெட்டி நெ. 414. மதருஸ்-5

தந்தி : "EVERMANS" போன் : 85834

சேரக் கடைசி தேதி 11-11-1964 ... முதல் ஏலத் தேதி 13-11-1964

25 மாதங்கள்	மாதாந்திரச் சீட்டுகள் (2-வது வெள்ளிக்கிழமை ஏலங்கள்)	25 அங்கத்தினர்கள்

வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை	வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை
B	ரூ. 100/-	ரூ. 2,500/-	E	ரூ. 20/-	ரூ. 500/-
C	ரூ. 50/-	ரூ. 1,250/-	F	ரூ. 15/-	ரூ. 375/-
D	ரூ. 25/-	ரூ. 625/-	G	ரூ. 10/-	ரூ. 250/-

40 மாதங்கள் — நீண்டகால ஏலச் சீட்டுகள் — 40 அங்கத்தினர்கள்

ஏலத் தேதி : 22-11-1964

வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை
A	ரூ. 500/-	ரூ. 20,000/-
B	ரூ. 250/-	ரூ. 10,000/-

விலாசம் தெளிவாக எழுதிக் கேட்பவர்களுக்கு எங்கள் விதிகள் இலவசமாக அனுப்பப்படும். சீட்டில் அங்கத்தினர்களைச் சேர்த்துக் கொள்ளும் உரிமை பண்டைச் சேர்ந்தது.

(போர்டார் உத்திரவுப்படி) எம். வி. சுப்ரமணியம், மானேஜிங் டைரக்டர்

இதர கிளைகள் : புது டெல்லி * பம்பாய் * பெங்களூர் * கல்கத்தா

எங்கள் சேவை உங்களுக்குத் தேவை

டிங்கு

ஜலதோஷம் மற்றும் ஜுரங்களுக்கு ஸ்பென்ஸரின்

ஸி ஏ க்யூ

உபயோகியுங்கள்.

திரவம், மாத்திரை

இரண்டு விதங்களிலும் கிடைக்கும்.

தயாரிப்பாளர்கள்:

ஸ்பென்ஸர் & கம்பெனி லிமிடெட்,

153, மவுண்ட் ரோடு, சென்னை-2.

63/SCL-14A TAM



வாணி தமிழ் இங்கிலீஷ் போதினி

90 நாட்களில் தமிழ் மூலம் ஆங்கிலம் தானே இலக்கணமாகப் படிக்க, பேச, எழுத, சுலபமாகக் கற்க பெரிய புத்தகம்.

விலை தபால் செலவோடு ரூ. 6-25.

ஐசுவரியம் (குடிசைத் தொழில்)

சோப், இங்கி, பத்தி, ஸ்னோ போன்ற 206 புதுத் தொழில்கள் அடங்கியது.

விலை ரூ. 4-00. வி. பி. 0-85

தமிழ் ஹிந்தி சுபோதினி

தமிழ் மூலம் சுலபமாக ஹிந்தி படிக்க பேச, எழுத, கற்க முடியும்.

விலை ரூ. 2-50. வி. பி. 0-85.

குடும்ப இல்லற வைத்தியம்

பச்சிலை மூலிகைகள் கொண்டு நோய் தீரும் பலம்பெற வழிகாட்டும்.

விலை ரூ. 2-50. வி. பி. ரூ. 1-00.

மாட்டு வாகடம் (பசு வைத்தியம்)

கால்நடைகளின் நோய்களைப் போக்கும்.

விலை ரூ. 2-00 வி. பி. 85.

வாணி புக் டிபோ (K)

3. மலையப் பெருமாள் தெரு. ரூம் நெ. 6

சென்னை — 1

1. தேனாம்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி திருப்பணி நிதிக்காக, கரும்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர் அவர்களின் பிரவசனத்தை ராஜாஜி தொடங்கி வைக்கிறார். 2. கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அவர்களின் நினைவு விழா பாலர் அரங்கில் திரு பா. நடராஜன் தலைமையில் விமரிசையாக நடந்தது. விழாவில் ராஜாஜியும் திரு கருணாநிதியும் கலந்துகொண்டு உரையாற்றினார். கவிமணி கவியரங்கத்தில் பல கவிஞர்கள் பங்கு பற்றினார்கள். கவிமணியின் கவிதை வில்லுப்பாட்டும், சூலமங்கலம் சகோதரிகளின் இன்னிசையும் இவ்விழாவில் இடம்பெற்றிருந்தன. 3. லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பரேஷன் ரிக்ரியேஷன் கிளப்பினர் நடத்திய காந்திஜி, அன்னி பெஸண்ட் பிறந்த நாள் விழாவில் ராஜாஜி பேசுகிறார்.







4. ஜான்சன் அண்ட் ஜான்சன் கம்பெனியார் நடத்திய 'மலைவாசஸ்தலங்களில் இளவேனில் விடுமுறை'ப் போட்டியில் ஸ்ரீமதி ரோஷிணி என். தங்கிரிவாலா பரிசு பெறுகிறார். 5. மதுரை திருப்புகழ் ஸ்ரீமதி லக்ஷ்மியம்மாள் பஜனை கோஷ்டியினரால் திருவல்லிக்கேணி மாடவீதியில் நடத்தப்பட்டு வரும் பஜனையின் எட்டாவது ஆண்டுவிழா திரு கி. வா. ஜகந்நாதன் அவர்களின் தலைமையில் சிறப்பாக நிகழ்ந்தது.






ராஜயோகம் / 8
மறுநாள் ராஜயோகத்தின்
வீட்டின் பின் புறம்.
அட நீங்கள் தானா! இதென்ன காரியம்? கறிகாய் கொடுக்க வேண்டுமென் றால் என்னைக் கூப்பிட்டுக் கொடுக்கக் கூடாதா?
உங்களைக் கூப்பிடுவதற்குப் பதிலாகத்தான் இவற்றை விட்டெறிந்தேன். பெயரைச் சொல்லிக் கூப்பிடக் கூடாதென்று நிபந்தனை இருக்கிறதல்லவா?
ஓ சேகரா!


என் உடையைக் கவனித்தீர்களா? நிபந்தனைப்படியே செய்திருக்கிறேன். நிபந்தனைகளை மறந்துபோய்விட்டீர் கள் போலிருக்கிறது. ஞாபகமூட்டுகிறேன்.
நிபந்தனைகள்:
1. கல்யாணம், காதல், கிரகஸ்தாசிரமம், குடும்பம் முதலிய வார்த்தைகளை உபயோகித்துப் பேசக் கூடாது.
2. ஒருவர் பெயரை மற்றவர் சொல்லக் கூடாது.
3. ஒருவர் அனுமதியின்றி இன்னொருவர் அவர் வீட்டிற்குள் திடீரென்று நுழைந்துவிடக் கூடாது.
4. பெண் இனத்தைச் சேர்ந்தவர் உடல் தெரியும்படியான மெல்லிய புடவையையோ, புதுமாதிரி ஜாக்கெட்டையோ அணிந்துகொண்டு கண்முன் வரக் கூடாது.
5. ஆண் இனத்தைச் சேர்ந்தவர்...
ஆமாம், நாய்கள் ஜாக்கிரதை என்று உங்கள் வீட்டில் போர்டு தொங்குகிறதே. அல்சேஷியனா, கோம்பையா? என்ன ஜாதி?
நாய் ஒன்றும் இல்லை. இப்போது கார்ப்பொரேஷன் தேர்தல் வருகிறது. வோட்டுக் கேட்டுத் தொந்தரவு செய்பவர்களைப் பயமுறுத்துவதற்காக அப்படி. ஆமாம். உன் பாட்டி எங்கே?
பாட்டி கிடையாது. உங்கள் மாதிரி நானும் 'பாட்டி ஜாக்கிரதை!' என்று எழுதி போர்டு மாட்டுகிறேன்.
எனக்குக் கூட அத்தைப்பாட்டி கிடையாது. நீ பொய் சொன்னதற்குச் சரியாகப் போய்விட்டது.


அதோ, யாரோ வருகிறார்கள்!
யார் தேவகியா?
என்னைக்கண்டா பயப்படுகிறாய், ராஜா?
சீக்கிரம்!

தி ஷிப்பிங் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா லிமிடெட்

அறிவிப்பு

சென்னை - நாகப்பட்டினம் - ஸ்ட்ரெயிட்ஸ் சர்வீஸ்

டி. எஸ். எஸ். "ஸ்டேட் ஆப் மதராஸ்" கப்பல் வருடாந்திர மாமூலான பராமரிப்புக்காக கல்கத்தாவில் இரண்டு மாதங்கள் நிறுத்திவைக்கப்படுமென்றும் அதற்குப் பதிலாக எஸ். எஸ். "முகம்மதி" என்ற கப்பல் சென்னை - நாகப்பட்டினம் - ஸ்ட்ரெயிட்ஸ் ஆகிய இடங்களுக்கு 1964 டிசம்பர் முதல் 1965 ஜனவரி வரை போய்வரும் என்பதை ஷிப்பிங் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா லிமிடெட் அறிவிக்கின்றனர். எஸ். எஸ். முகம்மதி கீழ்க்கண்ட தேதிகளில் பிரயாணிகளுடனும், சாமான்களுடனும் சென்னையிலிருந்து ஸ்ட்ரெயிட்ஸ்க்கு நாகப்பட்டினம், பினாங்கு மற்றும் சிங்கப்பூர் வழியாகச் செல்லும்.

சென்னையிலிருந்து	நாகப்பட்டினத்திலிருந்து
15-12-1964	16-12-1964
7-1-1965	8-1-1965

ஸ்ட்ரெயிட்ஸ்க்கு செல்ல விரும்பும் பிரயாணிகள் அனைவரும் பிரயாண டிக்கட்டுகள் புக் செய்வதற்குக் கீழ்க்கண்ட ஏஜண்டுகளுடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

K. P. V. ஷேக் முகம்மது ராவுத்தர் & கோ.

41, லிங்கி செட்டித் தெரு, சென்னை-1
தபால் பெட்டி நெ. 1264
போன்: 22761-3 தந்தி: "SHIPINDIA"

பண்டகசாலை
நாகப்பட்டினம்
போன்: 72 தந்தி: "SHIPINDIA"

பாமினிப் பாவை

15. இருவரில் ஒருவர்

யானைகளின் வரவை எதிர் நோக்கி அரங்கத்தினர் அசைவற்றுப் பதுமைகளாகப் பதைப்புடன் காத்திருந்தனர். அரங்கமே அதிரும்படியானதொரு பிளிறல் கேட்டது. ஒருபுறத்திலிருந்து கருங்குன்றை நிகர்த்த தோற்றம் உடைய யானை ஒன்று ஆவேசத்துடன் அரங்கினுள் நுழைந்து தன் துதிக்கையைத் தூக்கியபடி வெறியுடன் வீறிட்டு நின்றது. மறுபுறத்திலிருந்து வரவேண்டிய மற்றொரு யானையோ அரங்கினுள் நுழைய மறுத்து முரண்டு பிடித்தது. 'கேவலம் இந்த மனிதர்களுக்காகத் தன் இனத்தானோடு எவ்விதக் காரணமுமின்றி ஏன் போராட வேண்டும்?' என்ற விவேகத்தின் விளைவோ என்னவோ. ஆனால் அவைகள் இப்படிச் சிந்திக்க ஆரம்பித்தால் செயல் படாது என்றேதான் அவைகளுக்குக் காலையிலிருந்து மதுவைக் கொடுத்துப் போதை ஏற்றியிருந்தார்கள். அப்படி இருந்தும் இந்த யானை மதுவினால் மயங்கி மதி இழக்கவில்லை. அதன் விளைவுதான் இது. அங்குசத்தினால் குத்தி ஆக்ரோஷமூட்டி அதை அரங்குக்குள் விரட்டினார்கள். குடி வெறியிலே பிதற்றிப் பிளிறியபடி ஆட்டம் போட்டு நிற்கும் தன் இனத்தானின் நிலையைக் கண்டு இரக்கங் கொண்டது நிதானமிழக்காத யானை. ஆனால் அந்த யானையோ இதைக் கண்டதும் பயங்கரமான கூச்சலுடன் அதன் மீது பாய்ந்தது. இனி பேசாதிருக்க முடியாது என்ற நிலை ஏற்பட்டு விட்டது. போரிட விரும்பாத யானையும் போருக்குத் தயாராகும்படியாயிற்று.

மலையோடு மலை மோதிக்கொள்வது போல இரண்டு யானைகளும் போரிட்டன. துதிக்கைகளை ஒன்றோடு ஒன்று இணைத்துப் பிணைத்து முறுக்கி ஒன்றை ஒன்று வீழ்த்தப் பார்த்தன. தலையோடு தலையை நெருக்கி மோதி ஹுங்காரமிட்டு உறுமின. நீண்டு வளைந்த தந்தங்களால் ஒன்றை ஒன்று குத்திப் படுகாயப்படுத்த முயற்சி செய்தன. பார்வையாளர்கள் பிரமிப்புடன் மூச்சு விடவும் மறந்து பார்த்துக் கொ டிருந்தனர். பருத்த உடலைக்கொண் யானைகளின் உக்கிரமான போர் யு காணுக்குப் புதிய அனுபவமாயிருந்த மதுவின் போதையினால் வெறி கொண் போரிட்ட யானை விரைவிலேயே கன் படைந்தது. அதைத் தன் கூரிய தந் தினால் குத்தி விரட்டியது போ மறுத்த யானை. தோல்வியுற்ற ஒ



கௌசிகன்

யானை , திறி கெட்டுப் பார்வையாள களின் பக்கம் திரும்பிவிடாமல் வே கொண்டு அதைக் கட்டிப்போட்டு கொட்டாரத்துக்கு விரட்டிப்போனார்க அரங்கினுள் இருந்த வீரர்கள். வெற்ற கொண்ட யானை வீரார்ந்த செருக்குடன் பிளிறிக் கொண்டு நின்றது. மக்களின் ஆனந்த ஆரவாரம் அடங்க வெகு நே மாயிற்று.

கம்பீரமாகத் துதிக்கையை ஆட்டியபடி நாற்புறமும் திரும்பித் திரும்பி நிமிர்ந்

வையுடன் நிற்கும் வெற்றி கொண்ட களிற்றை நோக்கி அழகான குதிரை அமர்ந்து வந்து கொண்டிருந்தான் ஒரு வீரன். பீஜப்பூர் ராஜ்யத்துப் பாதுயுப் படையின் தலைவன் அவன். குதிரைகளை லாகவமாக நடத்திச் செல்லுல் வல்லவன். அவன் ஏறியிருந்த குதிரையோ அசுவ லட்சணங்கள் அத்தனையும் குறைவின்றிப் பொருந்திய அராபியக் குதிரை. மினுமினுவென்ற அதன் உடலின் அழகே காண்பவரின் மனத்தைக் கவரும் வண்ணம் இருந்தது. தன் அருமைக் குழந்தைக்கு விதம் விதமாக அலங்காரம் செய்து பார்ப்பது போல அந்தக்



குதிரைக்கு அவன் அலங்காரம் செய்து அழகுக்கு அழகுபடுத்தியிருந்தான். அந்தக் கம்பீரமான குதிரை ஒசிந்து ஒய்யார நடை போட்டபடி அரங்கினுள் பவனி வந்தது.

வெற்றி கொண்ட வெறியும், வீணுகத் தன்னைப் போரிட வைத்த வெறுப்புக் கலந்த கோபமுமாக ஆக்ரோஷத்துடனும் ஆரவாரத்துடனும் ஜனங்களைப் பார்த்துக் குமுறிக் கொண்டிருந்த யானையின் அருகில் அதைக் கேலி செய்வது போலத் தன் குதிரையைச் செலுத்திக் கொண்டு போனுன் அந்த வீரன். யாருமே தன்னை அணுகாதபடி ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருந்த அந்தக் களிறு தன்னை நோக்கி நாட்டியமாடியபடி வரும் குதிரையைக் கண்டதும் பயங்கரமாகப் பிளிறிக் கொண்டு அதன் மீது பாய்ந்தது. துதிக்கையை முறுக்கிச் சுழற்றியபடி உக்கிரமாகத் தாக்க வரும் யானையைக் கண்டு அந்தக் குதிரை வீரன் கலங்கவே இல்லை. அது மிகச் சமீபத்தில் வரும் வரை காத்திருந்து சடீரென்று குதிரையைத் தட்டிவிட்டு எட்டப்போய் நின்று கொண்டு மறுபடியும் தன் குதிரையை மந்தகாச நடை போட வைத்தான். யானையின் தந்தத்தினுல் குதிரையும் வீரனும் குத்திக் கிழிக்கப்பட்டுக் குதறப்படப் போகிறுர்கள் என்று தவித்தவர்கள் வீரனின் சாகஸத்தைக் கண்டு சந்தோஷக் கூச்சலிட்டார்கள். ஏமாற்றமடைந்த அந்த யானையோ மறுபடியும் குதிரையைத் துரத்தியது. வீரனே அதற்குப் போக்குக் காட்டிக் காட்டி அதன் கோபத்தைக் கொழுந்து விட்டெரியச் செய்தான். ஓரிரு சமயங்களில் யானையின் கொம்புகள் அந்த அற்புதக் குதிரையின் பட்டுடலின் பக்கவாட்டிலே பதிந்து குருதி வழியச் செய்தன.

இப்படி வெகு நேரம் அரங்கினுள் அந்த யானையை அலைக்கழித்து அதன் ஆத்திரத்தையெல்லாம் ஆயாசமாக்கிக் களைப்படையச் செய்தான் அந்தக் குதிரை வீரன். முன்னங் கால்களைத் தூக்கி முகத்துக்கு நேரே குதித்த போதுகூட ஏதும் செய்ய முடியாதபடி யானையைச் செயலிழந்ததாகச் செய்தபின் வீரன் கம்பீர நடை போட்டபடி ஆதில்ஷா வீற்றிருக்கும் விதானத்தின் முன்னே போய் வணங்கி நின்றுன். குதிரையின் பட்டுடலில் வியர்வை வெள்ளத்தோடு யானையின் கூரிய தந்தம் குத்திய இடங்களிலிருந்து வழிந்த ரத்தமும் கலந்து ஓடுவதைக் கண்ட சுல்தான் அந்தக் குதிரை வீரனின் சாகஸத்தைப் பாராட்டித் தாம் அணிந்திருந்த வைர மாலை ஒன்றைக் கழற்றி அவனுக்களித்துத் தம் மட்டற்ற மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார்.

இந்நிலையில் முற்பகல் நிகழ்ச்சிகள் முடியும் கட்டத்தை அடைந்தன. காலை நிகழ்ச்சிகளின் கடைசிக் கட்டமாக மைதானத்தின் மத்தியிலே மற்போர் வீரர்கள் தோள் தட்டித் தொடை தட்டி மண்டியிட்டு மண்ணெடுத்து மன்னருக்குச் சலாம் செய்து, உள்ளங் கையைத் தேய்த்து சவாலிட்டுக் கொண்டு தங்கள் உடல் வலிமையைக் காட்டத் தயாராகிக் கொண்டிருந்தார்கள். பிற்பகல் நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளத் தன்னை தயார்ப்படுத்திக் கொள்வதற்காக யூசப்கான் எழுந்திருந்தான். மல்தாதுகள் ஒருவரை ஒருவர் கட்டிப் பிடித்துக் கீழே உருட்டி முதுகுக்கு மண் காட்டும் முயற்சியில் ஈடுபடும்போது, பார்வையாளர்கள் பசியையும் மறந்த நிலையில் மற்போரின் சுவாரசியத்தில் ஈடுபட்டிருக்கும் போது, யூசப்கான் தன் இருக்கைக்கு வந்தான்.

அன்றைய விழாவிலேயே சிகரமான நிகழ்ச்சி பிற்பகலில் நடைபெறப் போகும் குதிரை வீரர்களின் சாகஸச் செயல்கள்தான். காலை நிகழ்ச்சிகளெல்லாம் வீர விளையாட்டுகளானுலுங்கூட பொழுது போக்குக்காக நடந்தவையே. மாலை நிகழ்ச்சிகள்தான் மன்னரின் பாராட்டையும் பரிசையும் எதிர்பார்த்து நடத்தப்படும் போட்டிப் பந்தயங்கள். அதில் போர்க் கலையில் வல்லவர்கள் கலந்து கொண்டு போட்டியிட விருந்தார்கள். வேலும், வாளும் தாங்கி, உடலின் கனமான கவசம் தரித்துக் கேடயத்தின் பாதுகாப்போடு குதிரை மீது அமர்ந்திருப்பார்கள் வீரர்கள். முகத்தையுங்கூட இரும்புக் கவசம் மூடி மறைத்திருக்கும். கையிலே நீண்ட ஈட்டியை ஏந்தி எதிரியை விரட்டிக் கொண்டு பாய்வார்கள். எதிரெதிராகப் பாய்ந்து வரும் இருவரும் அந்த வேகத்திலே ஒருவரை ஒருவர் ஈட்டியால் தாக்கிக் கீழே தள்ள முயலுவார்கள். எதிரியின் தாக்குதலுக்கு இலக்காகாமல் ஆனால் அதே நேரத்தில் தன் ஈட்டியால் எதிரியைக் குதிரையிலிருந்து கீழே வீழ்த்துவதே வீரனின் திறமையாக மதிக்கப்படும். ஐரோப்பிய நாடுகளில் அந்தக் காலத்தில் வீர விளையாட்டுக்களாகக் கருதப்பட்ட இந்தப் பந்தயங்கள், பாரசீகம், துருக்கி அரேபியா ஆகிய தேசங்களிலும் பரவி புகழ்பெற்றிருந்தன. இஸ்லாத்தின் ஆதிக்கம் இந்தியாவில் வேரூன்றிய போது இந்த வீர விளையாட்டையும் அவர்கள் பாரதத்திலே இறக்குமதி செய்தார்கள். தங்களுக்குப் புதுமையான இந்த வீர விளையாட்டிலே இந்தியர்கள் ஆர்வமும் அக்கறையும் காட்டியதில் வியப்பில்லை.

போட்டிகளில் பங்குபெறும் வீரர்களைத் தயாராக இருக்குமாறு அறிவித்து விட்டுப் போனுன் ஒரு வீரன். யூசப்கானிடம் இந்தப் போருக்கு ஏற்ற கவசமும் கேடயமும் முகமூடியும் கிடையாது. இதை முதல் நாளே தெரிவித்திருந்ததால், அரண்மனையின் ஆயுதச் சாலையிலிருந்து இவைகளை அவனுக்கு அனுப்பியிருந்தார்கள். யூசப்கான் கவசமணிந்து, இடையிலே போர்த்துகீசிய உயர் அதிகாரி அளித்த உன்னதமான வாளைக் கட்டிக் கொண்டு, தான் வாங்கிய ஈட்டியையும் அவர்கள் அளித்த கேடயத்தையும் தாங்கியபடி கிளம்பிய போது அவனது அருமையான குதிரையையும் தயாராகக் கொண்டு வந்து நிறுத்தி இருந்தார்கள். ஒரு நாள் முழுவதும் ஓய்வு எடுத்துக் கொண்ட அந்த வெண் புரவி மிடுக்குடன் கனைத்து வரவேற்றது யூசப்கானை.



எழிலோவியமான
பிரிண்டுகள்
பிரிண்டுகளிலே நாகரீகத்தின் உச்சம். கண்கொள்ளா வியப்பு, பூரிப்பு, கற்பனை கடந்த வனப்பு: அவை தாம் எங்கள் வாயில்கள், சிண்ட்ஸுகள், பாப்ளின்கள், மற்றும் பிற வகைகள். நவீன பாணிகளும், பழம்பெரும் பாணிகளுமாக, பல்வேறு வண்ண வகைகளிலே கொள்ளைகொள்ளும் உங்களை. சால்வார் கமீஸ் உடுப்பாக, நல்லாடையாக, சேலையாக, ஒளிதவழும் விளையாட்டுடையாக, உங்களை நாகரீக எழிலோவியமாக்கக் காத்திருப்பவை. உங்கள் உள்ளம் விரும்பும் வனப்போடு உருப்பெற்ற நெசவு.
சாயாஜி மில்ஸ் நம்பர் 1, பரோடா
அஹமதாபாத், சாயாஜி மில்ஸ் லிமிடெட்டின் ஒரு பிரிவு ● கப்பலட் கமி மில்ஸ் லிட்., கேம்பே.
SI-BP-16 TAM



கால்கேட் டூத் பிரஷ்
மேலும் துப்புரவாக உங்கள்
பற்களை சுத்தம் செய்யும்படி
அமைக்கப்பட்டிருக்கிறது!
ஹார்ட் • மீடியம் • ஸாப்ட்
COLGATE
NYLON TOOTH BRUSH
Colgate
ADULT
HARD
புதியது
மிகவும்
கவர்ச்சியானது!
கால்கேட்
டூத் பிரஷ்
வாய் துர்நாற்றத்தை அகற்ற கால்கேட் காட்டும் வழி



ஜலதோஷத்திற்கும், ஜுரம் போன்ற உணர்ச்சிக்குப்
'ஆஸ்ப்ரோ'
'ஆஸ்ப்ரோ'வைவிடப் பத்திரமான - சிறந்த நிவாரணி எதுவுமே இல்ல
ASPRO
ASPRO
ஒரு நிக்கோலஸ் N தயாரிப்பு

ன் உடலைத் தட்டித் தடவிக் கொடுத்து அமர்ந்தவன் அரங்கை நோக்கி அதைச் லுத்தினான்.

ான்கு வரிசைகளாக வழி வகுக்கப்பட் ந்த அரங்கிலே ஒவ்வொரு திசையிலிருந் நான்கு நான்கு வீரர்களும் எதிர்நோக்கி வேண்டும். இந்த நான்கு ஜோடிகளும் வரை யொருவர் தாக்கி வீழ்த்த முயலு ர்கள். அதில் நிலைகுலையாமல் யார் நிற் ர்களோ அவர்களுடன் அடுத்த நான்கு ர் போட்டியிடத் தயாராக வேண்டும். தப் போட்டியிடும் வீரர்கள் எண்ணிக்கை குறைந்து கொண்டே வந்து முடிவாக ங்கத்திலே நான்கு பேரே மிஞ்சுவார்கள். த நான்கு பேரும் இரண்டு இரண்டு ராகப் போட்டியிட்டு மோதி அதில் ண்டு பேர் மிஞ்ச, முடிவாக அந்த நவரும் ஒருவரை ஒருவர் வெற்றி ாள்ள முனைந்து ஒருவரே வெற்றி வீரராக லை சூடி நிற்பார். அவருக்கே மன்னரின் ராட்டும் பரிசும் உரித்தாகும். இதுவே ந்த விளையாட்டின் விதிமுறைகள். இருவ ஒருவர் என்ற கடைசிக் கட்டத்திலேதான் ரத்தின் வியப்பூட்டும் சாகஸங்களைக் ணப் பிரமிப்பாக இருக்கும். அதுவே அந்த ாவின் முத்தாய்ப்பாகவும் அமையும்.

பீரங்கிகள் முழங்கி அரங்கத்திலே மன் ர்கள் மறுபடியும் வந்து அமர்ந்து விட் ார்கள் என்பதை அறிவித்தன. கூட்டத் ல் பெரும் பகுதியினர் ஓய்வு பெறவோ வு கொள்ளவோ அரங்கத்தை விட்டு வளியேறவோ இல்லை. வசதியாகப் பெற்ற டம் போய் விட்டால் என்ன செய்வது ? த்தனை ஆர்வம் அவர்களுக்கு. வெளி றியவர்களும் விரைவிலேயே வந்து கூடி ர்கள். போட்டியிடும் வீரர்கள் இரு பகுதி ாகப் பிரிந்து நிற்கும் காட்சி கம்பீரமாக ருந்தது. கவசமணிந்து ஈட்டி தாங்கி ன்றார்கள் வீரர்கள். ஒவ்வொரு வீரனின் ட்டி முனையின் கழுத்திலேயும் கட்டப்பட்ட ஞ்சமோ கொடியோ காற்றிலே அசைந் ாடுவது அழகாக இருந்தது.

தங்கள் இரும்பையொத்த குளம்புகளால் ரையைக் கீறிக் கனைத்தபடி தயாராக நின் ன குதிரைகள். போட்டிகள் ஆரம்பமாவ ற்கடையாளமாகக் கொம்பு வாத்தியத்தை ழக்கினார்கள். இரு பிரிவிலும் முன் வரிசையி ருந்த நான்கு வீரர்கள் முன் வந்து உயர்த்தி ருந்த தங்கள் ஈட்டிகளைத் தாழ்த்திப்பிடித்த டி தயாராக நின்றார்கள். அரங்கத்தில் பூதில்ஷாவின் பிரதிநிதியாக இந்த விளை ாட்டுக்களின் விதிமுறைகளை அறிந்தவராக நாயகமாக உருவிய வாளை உயர்த்திப் டித்தபடி நின்ற ஒருவர் தமது வாளைத் ாழ்த்தி அனுமதி அளிக்கவே இடியோசை ண்டாயிற்று. எட்டுக் குதிரைகளின் முப்பத் ரண்டு கால்களும் பூமியைக் கிடுகிடுக்க வைத்தபடி காற்றெனப் பறந்தன. பீரங்கியி லிருந்து வெளிப்பட்ட பெரு நெருப்பைப் போலத் தங்களை நோக்கி வரும் வீரனின் பார்வை, தலையைக் குறி பார்த்தபடியே பாய்ந்து கொண்டிருந்தார்கள் வீரர்கள். லை வினாடிகள்தான். அடுத்த நிமிஷம் ஒருசில வீரர்கள் குதிரையிலிருந்து அப்படியேகொத்தி எறியப்பட்டார்கள்; அல்லது நிலைகுலைந்து நிலத்தில் சரிந்தார்கள். வெற்றி பெற்ற வர்கள் எதிர்ப்புறத்தில் போய் நின்றார்கள். அடுத்து வரும் வீரனை எதிர்நோக்கி — அவனை வீழ்த்தவோ அவனால் வீழ்த்தப்படவோ !

இப்படி நடைபெற்ற விறுவிறுப்பான போட்டியின் ஒரு நிலையிலே நான்கு குதிரை வீரர்கள் மட்டும் தன்நிகரற்றுத் தனித்து நின்றார்கள். இந்நால்வரில் ஒருவன் பூசப் கான். மற்றொரு வீரன் பீஜப்பூரின் சேனதி பதியாகிய சித்திஜாலன். ராட்சத உருவ மும் நிகரற்ற பலமும் பொருந்திய சித்தி ஜாலன் பீஜப்பூர் ராஜ்யத்தின் உயர் அதி காரியாக இருந்தும், இந்தப் போட்டியில் தன் திறமையை வெளிப்படுத்தவும் தனக்கு மேலாக யாவரையும் வர விடக் கூடாது என்பதற்காகவுமே கலந்து கொண்டிருந்தான். மன்னரின் அபிமானத்தைப் பெற்றிருந்த அந்த அபிசீனியனுக்குப் பீஜப்பூரின் பெருங் குடி மக்களும் பிரபுக்களும் விரோதிகளாக இருந்தனர். மூன்றாவது, காலை நிகழ்ச்சிகளில் யானையைக் களைப்படையச் செய்த குதிரை வீரன். நான்காவது வீரன் டில்லியின் மன்ன ரான அக்பர் சக்கரவர்த்தியின் படைகளை நடத்திப் புகழ்பெற்ற மொகலாய வீரன்: போட்டியிலீடுபட்ட வீரர்களை எல்லாம் வென்று வெற்றிக் கொடி நாட்டி நின்றார்கள் இந்த நால்வரும். இந்நால்வரிலும் சிறந்த ஒருவர் யார் என்பதை முடிவு கட்டும் இந்தக் கட்டமே விழாவின் சிறப்புமிக்க சிகரம் போன்ற அம்சம். அதைதயும் அறிந்து கொள் வதில் மக்கள் ஆர்வம் காட்டினார்கள்.

பாதுகாப்புப் படைத் தலைவனும் யானை யைக் களைப்படையச் செய்தவனுமான குதிரை வீரனையும், மொகலாயக் குதிரை வீரனையும் சித்திஜாலனும் பூசப்கானும் எதிர்க்கத் தயாரானார்கள். முதலில் சித்தி ஜாலன் ஜோடி தங்கள் இருவரில்ஒருவர் யார் என்று முடிவு கட்டுவதில் முனைந்தது. உருவத் திலே ஒப்பிடும் போது சித்திஜாலனின் முன் னால் அந்த வீரன் சிறு துரும்பேதான். குதிரை களும் அப்படியே. சித்திஜாலனின் கருப்பு நிறக் குதிரை பார்வைக்கே பயங்கரமான தோற்றமும் ஆகிருதியும் கொண்டது. அந்த வீரனுடையதோ உருவிவிட்டது போன்ற உடலமைப்பும் அழகும் வேகமும் கொண்ட அராபியக் குதிரை. எதிரெதிராக நின்ற இவ்விருவரும் உத்தரவு கிடைத்ததும் தாழ்த் திப் பிடித்த ஈட்டிகளுடன் தங்கள் குதிரை களை விரட்டிக் கொண்டு பாய்ந்தார்கள். சித்திஜாலனின் கேடயத்தைத் துளைத்துக் கொண்டு அந்த வீரனின் ஈட்டி பாய்ந்தாலும், சித்திஜாலனுடைய ஈட்டியின் அசுர வேக மும் பலமும் அந்த வீரனை அப்படியே ஆகாயத்தில் தூக்கி எறிந்து விட்டன. சித்தி ஜாலனோ தன் எதிரியின் தாக்குதலைத் தன் உடலில் மோதிய கொசுவாக எண்ணிக் குலை யாமல் நின்றான். சித்திஜாலன் வெற்றி பெற்றது கூட்டத்தினரிடையே ஓர் அதிருப் தியையே உண்டாக்கிற்று. காரணம் அவ்விரு வருக்குமுள்ள பொருத்தமற்ற தன்மை மட்டுமல்ல, காலையில் அந்த வீரன் பார்வை

யாளரின் பாராட்டுதலைப் பெற்றவனுதலால் அவன் தோல்வி அடைந்ததினால் ஏற்பட்ட அநுதாபமாகவும் இருக்கலாம்.

ஆரவாரம் அடங்கியதும் பூசப்கானும் மொகலாய வீரனும் அரங்கத்திலே எதிர் எதிராக நின்றார்கள். ஆலிவ்ஷாவின் பிரதிநிதி தனது உருவிய வாளை உயர்த்தித் தாழ்த்தியதும் குதிரைகள் இரண்டும் ஒன்றைநோக்கி ஒன்று பாய்ந்தன. மொகலாய வீரனின் ஈட்டி பூசப்கானின் கேடயத்தைத் துளைத்துக் கவசத்திலே மோதி முறிந்தது. மொகலாயனின் தலையை மூடியுள்ள இரும்பு முகமூடியைக் குறி வைத்துப் பாய்ந்தான் பூசப்கான். பூசப்கானின் வேகமும் பலமும் மொகலாயனின் தலைக்கவசத்தைத் தட்டி விட்டதோடு அவனைக் குதிரையிலிருந்து நிலைகுலைந்து கீழே விழும்படியும் செய்து விட்டது. எதிரி எதிர் விழுந்ததும் பூசப்கான் தன் குதிரையிலிருந்து கீழே குதித்துத் தரையில் விழுந்தவனுக்குக் கைகொடுத்து உதவ ஓடி வந்தான். வெற்றி தோல்வி ஒருபுறம் இருந்தாலும் மனிதாபிமானத்துடன் நடந்து கொண்ட பூசப்கானின் செய்கை பார்வையாளரின் பாராட்டுதலைப் பெற்றது. பொறி கலங்கிப் போன மொகலாய வீரன் சமாளித்து எழுந்திருக்க உதவினான் பூசப்கான். ஆதரவுடன் அவனை அணைத்தபடி மெள்ளத் தாங்கிப் பிடித்து நடத்திச் சென்று உதவிக்கு ஓடி வந்த வீரர்களிடம் ஒப்படைத்து விட்டுத் திரும்பினான் பூசப்கான். இப்போது அரங்கத்திலே இரண்டு பேர்கள்தான். பூசப்கானும் சித்திஹாஸனும்! தன்னுடன் போட்டியிடத் தகுதி பெற்று நிற்கும் அந்த அந்நியனை அலட்சியமாக மதிக்க முடியவில்லை சித்திஹாஸனால். பொதுஜனங்களின் பரிவையும் பாராட்டுதலையும் பெற்ற பூசப்கானின் செய்கை அவன் சினத்தைக் கிளறி விட்டிருந்தது. பொறாமையும் ஆத்திரமும் பொங்கலாயின அவன் உள்ளத்தில்.

பெருத்த ஆரவாரத்தினிடையே சித்திஹாஸன் ஒருபுறமும் பூசப்கான் மறுபுறமும் ஒதுங்கலானார்கள். போட்டியின் உச்சகட்டமான இருவரில் ஒருவர் என்ற முடிவை அறிய மக்கள் மூச்சை அடக்கிக் கொண்டு காத்திருந்தனர். அப்போது பூசப்கானால் வெற்றி கொள்ளப்பட்ட மொகலாய வீரன் தன் கேடயத்துடன் ஓடி வந்தான். அவனது ஈட்டி துளைத்து பூசப்கானின் கேடயம் பழுதடைந்திருந்தது. ஆகவே அதற்குப் பதில் தனது கேடயத்தை அவனுக்கு அளிக்கவே அந்த மொகலாயன் ஓடி வந்தான். தோல்வியுற்ற தன்னிடம் பூசப்கான் காட்டிய பெருந்தன்மையின் விளைவே அவ்விருவரிடையேயும் அப்படி ஒரு நட்பை, அன்பை வளர்த்து விட்டது. மொகலாய வீரன் விருப்பமுடன் அளித்த கேடயத்தை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டான் பூசப்கான். குதிரைகள் குறிப்பிட்ட இடத்தை அடைந்து தாக்குதலுக்குத் தயாராகி நின்றதும், 'தாலே தோ!' என்று உரக்கக் கூவி உத்தரவிட்டார் அதிகாரி. பீரங்கி வாயிலிருந்து புறப்பட்ட நெருப்புப் பந்தமே போல இரண்டு குதிரைகளும் மைதானத்தை அதிரச் செய்தபடி கிளம்பின. வத்தில் குறைவானாலும் சித்திஹாஸை வலிமைக்குக் குறைந்தவனல்ல பூசப்கான்

இருவருடைய ஈட்டிகளின் குறி தலையே இல்லை. குதிரைகள் இரண் நிலைகுலைந்து தடுமாறின. அதன் மீது இரு வர்களும் நிதானம் இழந்தார்கள். கேட களில் தாக்கி ஈட்டிகள் இரண்டும் முறிந்த தாக்குண்ட வேகத்தில் சித்திஹாஸன் புறமாகச் சரிந்தான். கனத்த உடல் கொண்ட அவனது பளுவைத் தாங்க இடது கால் வைக்கப் பயன்படும் இரு வளையம் இணைக்கப்பட்ட தோல் கயிறு சேணத்திலிருந்து பிய்ந்து அறுபட தடாம் புரண்ட பார வண்டியைப் போல புழுதியில் மூட்டையாக உருண்டான் அவ

பூசப்கான் அபிசீனியனின் தாக்குதலி அசைந்து போனாலும் குதிரையிலிருந் கீழே விழாமல் சமாளித்துக் கொண்டு வி டான். எதிரி தரையில் விழுந்து விட்டதை உணர்ந்த பூசப்கான் முன் போலவே ச டென்று தன் குதிரையிலிருந்து குதித்து உ விக்கு ஓடி வரலானான். ஆனால் குதிரை லிருந்து உருண்டு விழுந்ததுமே அந்த அபிசீ யனின் ரத்தம் அவமானத்தினால் கொதிக் லாயிற்று. வெற்றியையே இறுமாப்புட எதிர்பார்த்திருந்தவனுக்கு இந்தத் தோல் ஏமாற்றத்தையும் ஆவேசத்தோடு கூடிய ஆ திரத்தையும் உண்டாக்கியது. உதவிக்கு வந் பூசப்கானைச் சித்திஹாஸனின் உருவிய வா தான் வரவேற்றது. தற்காப்புக்காக பூச கானும் தனது உடைவாளை உருவ வேண் வந்தது. ஆத்திரத்தின் அடிமையாகி ஆவே மாகச் சுழன்ற சித்திஹாஸனின் வாளுக் பூசப்கான் முதலில் விலகிக் கொடுத்துப் பி வாங்கத்தான் வேண்டியிருந்தது. ஆனா அது சிறிது நேரம்தான். வாள் வீச்சிே வல்லவனான அவன் சித்திஹாஸனின் மூர்க்க தனமான தாக்குதலை லாகவமாகச் சமாளிக் லானான். தோல்வி மனப்பான்மையிலே ஏ பட்ட குரோதத்தின் விளைவாகச் சித்திஹாஸ கண்மண் தெரியாமல் தன் வாளைச் சுழற்றி கொண்டிருந்தான். பூசப்கானோ நிதான மாகவும் அலட்சியமாகவும் அவனது தாக்கு தல்கள் ஒவ்வொன்றையும் தடுத்து அவனது ஆத்திரத்தை அதிகரிக்கச் செய்து, அதனால் அவன் களைத்துப் போகும்படி செய்து கொண்டிருந்தான்.

வாளெடுத்துப் போர் புரியும் அவனது முறைகேடான நடத்தையைத் தடுத்துநிறுத்த யாராவது வருவார்கள் என்று பூசப்கான் எதிர்பார்த்தது ஏமாற்றமாகவே முடிந்தது. நீதி வழங்க வேண்டியவர்கள் செயலற்று விட்ட நிலையில் தான் செய்ய வேண்டியதைப் பற்றி ஒரு முடிவுக்கும் வந்தான்.

ஆவேச வெறி கொண்ட தன் அந்நியன் வாள் வீச்சுகளையும் அலட்சியமாகத் தாங்கித் தடுத்துக் கொண்டிருக்கும் பூசப்கானின் மீது அடங்காச் சினம் கொண்ட சித்திஹாஸன் தன் பலத்தை யெல்லாம் ஒருங்கே சேர்த்துத் தப்ப முடியாதபடி ஓங்கி ஒரு போடு போட்டான். ஆத்திரக்காரனின் கடைசி அடியின்



பனமா
இழுக்க இழுக்க இன்பம் இறுதிவரை
Panama
20
CIGARETTES
Specially blended for a cool and pleasant smoke from selected Virginia Tobacco leaves.
செழுமையான
வர்ஜீனியாப் புகையிலே
சீர்திரவிய கலவை
புதுமை மயமானது
விசேஷக் கலவை செய்வோர்:
கோல்டன் டொபாக்கோ கம்பெனி பிரைவேட் லிட். பம்பாய்.58
பாரதத்தில் இத்தகைய தேசிய ஸ்தாபனங்களில் மிகப்பெரியது

தன்மையை உணர்ந்த யூசப்கானே அதையும் தக்கபடி தனது கேடயத்தினால் தாங்கிக் கொண்டான். மொகலாய வீரன் அளித்த கேடயத்தின் உறுதியை அப்போதுதான் உணர்ந்தான் யூசப்கான். அதே சமயத்தில் தனது வாளின் உறுதியையும் பரிட்சித்துப் பார்த்து விட்டான் யூசப்கான். போர்த்துகீசிய உயர் அதிகாரி அளித்த அந்த ஒப்பற்ற வாள், சித்திஹாஸனின் இரும்புத் தலைப் பாகையை உடைத்துக் கொண்டு உருக்குத் தலையிலுள்ளும் பதிந்து தன் ரத்தப் பசியைத் தணித்துக் கொண்டது. ஆக்ரோஷமும் கோபமும் சித்திஹாஸனின் திறமைகளையும் சக்திகளையும் பங்கு போட்டுப் பாழாக்கி இருந்த நிலையில் யூசப்கானின் வலுவான அடி அவனை அந்த விநாடியே நினைவிழந்து விழச் செய்து விட்டது. மக்கள் வெள்ளத்தின் மகிழ்ச்சி அலைகளிடையே யூசப்கான் வெற்றிவீரனாக அறிவிக்கப்பட்டான். அத்துடன் அன்றைய விழாவும் முடிவு பெற்றதால், முடிவே இல்லாமல் கைதட்டிக் கரகோஷமிட்டும் உற்சாக மிகுதியால் உரக்கக் கூவியும் ஜனக் கூட்டம் ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தது. யூசப்கான் தன் நன்றியை அவர்களுக்குத் தெரிவித்தபடியே ஆதில்ஷாவின் முன் போய்த் தலை வணங்கி நின்றான். ஆதில்ஷாவின் முகத்தில் மகிழ்ச்சியில்லை. அவரது மதிப்புக்குரிய சித்திஹாஸன் படுகாயமடைந்ததை அவரால் தாங்க முடியவில்லை. ஆனால் அதை வெளிக் காட்டிக் கொள்ளாமல் முறைப்படி வெற்றி பெற்ற வீரனான யூசப்கானுக்கு வீர வாளையும் விருதுகளையும் அளித்தார். அவரது மகிழ்ச்சியையும் சேர்த்து வெளிப்படுத்தினார்கள் கோல்கொண்டாவின் குதப்ஷாவும் அகமதுநகர் நிஜாம்ஷாவும். வெல்ல முடியாத சித்திஹாஸனை வென்ற யூசப்கானின் வீரத்தை வெகுவாகப் புகழ்ந்த குதப்ஷா தான் கழுத்தில் அணிந்திருந்த விலை உயர்ந்த வைர மாலையை எடுத்து அவனுக்கு அணிவித்தார்.

''ஆதில்ஷா அவர்கள் அனுமதி அளித்தால் இந்த வீரனின் சேவையை அகமதுநகர் ஏற்றுக் கொள்ள விரும்புகிறது'' என்றார் ஹுசைன் நிஜாம்ஷா.

''சபாஷ்! வெற்றி வாகை சூடிய வீரனுக்கு ஏற்ற பரிசுதான். அகமது நகரின் சேனாதிபதியாகவே ஆக்கி விடுங்கள் அவனை'' என்று உற்சாகமூட்டினார் குதப்ஷா.

''தாங்கள் விரும்பிக் கேட்கும் போது நான் மறுத்துச் சொல்வேனா? அப்படியே ஆகட்டும்'' என்று கூறி எழுந்தார் ஆதில்ஷா. சித்திஹாஸனை வென்றதினாலோ என்னவோ யூசப்கான் மீது ஒரு வெறுப்பேகூட ஏற்பட்டிருந்தது ஆதில்ஷாவுக்கு.

நகரெங்கும் வெற்றி வீரன் யூசப்கானின் திறமையையும், சாகஸத்தையும் அன்று வாள் வீச்சிலே அவன் காட்டிய வல்லமையையும், தோல்வியடைந்த வீரனிடம் பெருந்தன்மையோடு நடந்து கொண்டதையும் பற்றியே மக்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். சித்திஹாஸனின் ரத்தப்பெருக்குக்கு ரணசிகிச்சை நடந்து கொண்டிருந்தது. அரண்மனையின் ஓரிடத்திலே, தன் நினைவிழந்து கிடந்தான் அந்த அபிசீனிய வீரன்.

மறு நாள் அகமதுநகர் சுல்தான் ஹுசைன் நிஜாம்ஷாவின் முன்னிலையில் அவரது அழைப்பின்பேரில் ஆஜராகி இருந்தான் யூசப்கான். பத்தாயிரம் குதிரைப் படையின் தலைமைப் பொறுப்பை அளித்து அவனைத் தம் தளபதிகளில் ஒருவனாக்கிக் கௌரவித்தார் நிஜாம்ஷா. குதப்ஷாவும் அவனைப் பாராட்டுவதற்காக ஒரு விசேஷ விருந்தே வைத்தார்.

''இந்திய நாட்டில் இஸ்லாத்தின் ஏற்றத்துக்காகவே உங்கள் வீர வாழ்வு பயன்பட வேண்டும். உங்கள் திறமையையும் வீரத்தையும் வெளிப்படுத்த விரைவிலேயே ஒரு வாய்ப்பு ஏற்படப் போகிறது. சரியான சந்தர்ப்பத்தில்தான் அல்லாஹ் உங்களை இங்கு அனுப்பி இருக்கிறார்'' என்று அந்த விருந்திலே யூசப்கானைப் பாராட்டிப் பேசினார் குதப்ஷா. மன்னர்களின் பரிவு நிறைந்த பாராட்டுரைகளின் பொருள் புரியாது போனாலும் ஏதோ ஒரு பெரிய செயலை நோக்கித் தன்னை விதி தள்ளிக் கொண்டு போகிறது என்பதை மட்டும் யூசப்கானின் உள் மனம் உணர்ந்தது. (தொடரும்)

நியூடன் அதிபர் மறைவு

இன்று நன்கு வளர்ந்துள்ள அச்சுக் கலையில் பிளாக் தயாரிப்பது முதன்மை ஸ்தானம் வகிக்கிறது. சித்திரக் கலையின் சிறப்பு இந்தப் பிளாக் தயாரிப்பின் சிறப்பில் தான் மிளிரும். 'கல்கி' பத்திரிகையின் ஆரம்ப காலத்தில் அழகிய முறையில் பிளாக்குகள் தயாரித்துக் கொடுத்து 'கல்கி'யை அழகுபடுத்துவதில் நியூடன் கம்பெனியார் செய்த சேவையை மறக்க இயலாது. இந்தப் பிளாக் தயாரிக்கும் தொழிற்சாலையை முதலில் சிறுகத் தொடங்கிய திரு ஏ. முருகேச முதலியார் தம் இடைவிடாத ஊக்கத்தினாலும் முயற்சியினாலும் பெரிதாக வளர்த்துப் பிறகு அச்சு எழுத்துக்கள் தயாரிப்பிலும் ஈடுபட்டார். அச்சுத் தொழில் துறையில் முன்னேறிக் கொண்டு வரும் நியூடன் கம்பெனியின் அதிபர் திரு முதலியார் அக்டோபர் 15ந் தேதி இவ்வுலகை விட்டு மறைந்தார் என்று கேள்விப்பட்டுத் துயரில் ஆழ்ந்தோம். அவரது மறைவால் வருந்தும் அவரது குடும்பத்தாருக்கும், நியூடன் கம்பெனி சிப்பந்திகளுக்கும் நம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தட்டெழுத்தும் தளராத உழைப்பும்

தங்கள் இலாகா வேலைகளுடன் எப்போ ம் இரண்டறக் கலந்து நிற்கும் ஊழியர்கள் ர் உண்டு. வீடு, மனைவி, மக்கள் நண்பர் டம் காட்டும் அக்கறையைவிடத் தங்கள் ரியாலய வேலை முறைகளிலும் அதற்கான ட்ட திட்டங்களைப் பற்றிப் பேசுவதிலுமே ங்கள் கவனத்தைச் செலுத்துவோர் உண்டு. "ஓய்! மணியார்டர் பட்டியல் பாரம் நந்துக்குக்கூட இல்லை. உம்ம ஆபீசில் ருந்தால் நாலு புத்தகம் அனுப்பி வையும். ஸேவிங்ஸ் பாங்கு. பணம் வாங்கும் பாரத் க்கு ஒரே பஞ்சம். ஹெட் ஆபீஸ்காரன் ணற்றில் போட்ட கல்லாக இருக்கிறான். தையும் கொஞ்சம் தள்ளும்" என்று மூச்சு டாமல் முழக்கி விட்டுப் பிறகு சாவகாச ாக, "உம் பெண்ணுக்குக் கல்யாணம் ந்ததாமே?" என்று விசாரிக்கும் தீவிர ஞ்சல் அலுவலக பக்தர் ஒருவரைக்கூட னக்கு நன்கு தெரியும்.

இந்த ஆர்வம் சர்க்கார் காரியாலயங் ளில் ஆதாயத்தை உண்டாக்காத போதும், தனிப்பட்ட வியாபாரத் துறையில் ந்த ஆர்வத்தை மனோதத்துவ முறையில் ற்று மாற்றி அமைத்துப் பிரயோகித்தால் ல்ல ஆதாயமும் பாராட்டும் கிடைக்கும் ன்பதைத் திரு ராமையா அவர்களிடம் பசியபோது தெரிந்து கொள்ள முடிந்தது.

சுமார் நாற்பத்தி ஐந்து வருடங்களுக்கு ன்னால் நடந்தது இந்தச் சம்பவம். அந்த ாலை தொழில்துறை டைரக்டராகப் பணி ாற்றிய காட்டன் என்னும் ஆங்கிலேயர் ால்டேரிலிருந்து சென்னைக்கு ரயிலில் வந்து கொண்டிருந்தார். ரயில் எண்ணூருக்கு அருகில் வரும்போது சிறு விபத்துக்குள்ளா யது. காட்டன் துரைக்குக் காயம் ஏதும் இல்லாத போனால் கூட, காட்டன் துரையின் டட்டெழுத்துக் குமாஸ்தாவுக்குப் படுகாயமும், அவருடைய டைப்ரைட்டிங் யந்திரத்துக்கு ரிப்பேர் என்ற பேச்சுக்கே இடமில்லாத படுசேதமும் ஏற்பட்டு விட்டன.

இந்தச் செய்தி ரிமிங்டன் ராண்டு டைப் யந்திர ஸ்தாபனத்தின் சென்னைக் கிளைப் பிரதிநிதி திரு ராமையாவின் செவிகளில் விழுந்தது. அவசரம் அவசரமாக எண்ணூரிலிருந்து விபத்துக்குள்ளான பிரயாணிகளை ஏற்றி வரும் பிரத்தியேக ரயிலைச் சந்திக்க சென்ட்ரல் ஸ்டேஷனை நோக்கிக் கிளம்பினார்.

காட்டன் துரையைப் பார்த்து அவர் சௌக்கியமாக வந்து சேர்ந்ததைப் பாராட்டி விட்டு,



திரு ராமையா

"உங்கள் டைப் யந்திரம் உடைந்துபோய் விட்டது என்று கேள்விப்பட்டு வருத்தப்படுகிறேன். உங்கள் வேலைக்கு ஒரு நிமிடம்கூட டைப் யந்திரம் இல்லாமல் முடியாதே? எங்கள் கம்பெனியிலிருந்து ஒரு புது மிஷினை அனுப்பி வைக்கிறேன். நீங்கள் சர்க்கார் அனுமதி பெற்று ஒரு மிஷின் வாங்கும் வரை அது உங்களிடமே இருக்கட்டும். எங்களிடமிருந்துதான் நீங்கள் மிஷின் வாங்க வேண்டும் என்பது அவசியமில்லை. உங்களிடம் மிஷின் தேவைக்கு எப்போதும் இருக்க வேண்டும் என்பதுதான் எங்கள் லட்சியம்" என்று சொல்லி விட்டுத் திரும்பினார்: சூட்டோடு சூடாகக் காட்டன் துரை காரியாலயத்துக்கு ஒரு புது ரிமிங்டன் ராண்டு மிஷினும் போய்ச் சேர்ந்தது.

காட்டன் சர்க்கார் ஸ்டோர் இலாகாவுக்குப் புது மிஷின் வேண்டிக் கடிதம் எழுதினார்; ரிமிங்டன் கம்பெனி செய்திருக்கும் உதவி பற்றியும் குறிப்பிட்டார். பதில் உடனே வந்தது. அந்த டைப் மிஷினையே வாங்கிக் கொள்ளலாம் என்றும் கண்டிருந்தது.

திரு ராமையா எதிர்பார்த்ததும் அந்த முடிவுதானே! கம்பெனி மேலதிகாரிகள் அந்த விற்பனையாளரின் திறமையையும் சாமர்த்தியத்தையும் சந்தர்ப்பமறிந்து வியாபாரத்தைப் பெருக்கும் சாதனை பற்றியும் வானுயரப் புகழ்ந்தார்கள். இது வியாபார மனத் தத்துவம். அதில் வெற்றி கண்டு முன்னேறியவர் திரு ராமையா.

இன்றைக்கு அவர் எண்பத்தைந்து வயதை எட்டிப் பிடித்த இளைஞர். ஆம்! இளைஞர்தான். இன்னும் தினசரி கர்லாக் கட்டைகள் சுற்றும் பழக்கத்தைக் கைவிடவில்லை. காலை ஐந்து மணிக்கு எழுந்து நடந்து போய் ஹோட்டலில் ஒரு கப் காப்பி குடித்து வரும் பழக்கத்தையும் விடவில்லை! ஒரு பல்கூட அவருக்கு இன்னும் சேதமாகவில்லை. சொல்லையும் அவர் அதிகம் சேதப்படுத்துவதில்லை. கட்டு செட்டாகவே பேசுகிறார்.

"வியாபாரத் துறையில் மனோ தத்துவத்துக்கும் இனிமைக்கும் தான் இடம் அதிகம்: அதை எப்போதும் மனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். வாடிக்கைக்காரர்களின் நலத்தில் அதிக அக்கறை காட்டினால் நம் வியாபாரம் தானாகவே முன்னேறும். வாடிக்கைக்காரரை மறந்தும் சரக்கின் நயத்தையும் தரத்தையும் மாத்திரம் பற்றிப்பேசிக் கொண்டு

போனுல் வெற்றி நிச்சயம் என்று நினைக்கக் கூடாது;" என்ருர் திரு ராமையா.

1879ம் ஆண்டில் பெல்லாரிப் பிராந்தியத்தில் பிறந்த இவர் ஆரம்ப நாள் கல்வியைப் பெல்லாரி வார்ட்லா உயர்நிலைப் பள்ளியிலும் சென்னை தொண்டைமண்டலம் உயர்நிலைப் பள்ளியிலும் பெற்ருர். குடும்பச் சூழ்நிலை அவரை மெட்ரிகுலேஷனைக்கூடத் தாண்ட விடவில்லை. ஆனுல் அதிர்ஷ்டச் சூழ்நிலை அவரை அண்டர்வுட் டைப்ரைட்டிங் யந்திர விநியோக ஸ்தாபனத்தின் பிரதான அதிகாரியின் பதவிக்கு உயர்த்திப் பல ஆங்கிலேய சிப்பந்திகளையும் அவர் கீழ் வேலை செய்ய உதவியது.

1908ம் ஆண்டு. திரு ராமையா சென்னையில் ஒரு டைப்ரைட்டிங் வகுப்பைச் சிறிய அளவில் வாழ்க்கை வசதிக்காக ஆரம்பித்து நடத்தி வந்த காலம். அப்போதுதான் அமெரிக்க ஸ்தாபனமான ரிமிங்டன் ராண்டு கம்பெனியார் சென்னையில் ஒரு கிளை திறக்கத் தீர்மானித்தார்கள். அதற்கு நிர்வாகியாக ஒரு சரியான ஆள் தேவையாக இருந்தது. ராமையாவுக்கு ஏற்கனவே டைப் யந்திரங்கள் சம்பந்தப்பட்ட வகையில் பரிச்சயமான பியர்ட்ஸன் கம்பெனியார் ரிமிங்டன் ராண்ட் ஸ்தாபனத்துக்கு ராமையாவைச் சிபாரிசு செய்தார்கள். உடனடியாக நியமனமும் ஆகிவிட்டது. சம்பளம் என்னவோ நூற்றி இருபத்தைந்து ரூபாய்தான். ஆனுல் மிஷின் விற்பனை மூலம் கிடைக்கும் கமிஷன் தொகை ஆயிரத்தை எட்டுமாம். இந்த ஸ்தாபனத்தில் இருக்கும் போதுதான் காட்டன் துரைக்கு மிஷின் கொடுத்து நல்ல பெயர் தட்டிக் கொண்டார்.

1920ல் இவருக்கும் ரிமிங்டன் ராண்ட் ஸ்தாபனத்துக்கும் அபிப்பிராய பேதம் ஏற்பட்டது. விலகினுர். ஆனுல் இவருடைய அனுபவம் விரயமாவதை அண்டர்வுட் ஸ்தாபனம் விரும்பவில்லை. உடனடியாக ஒரு விசேஷ தூதுவரைச் சென்னைக்கு அனுப்பி ராமையாவைத் தம் ஸ்தாபனத்தில் சேர்த்துக் கொண்டது. "சென்னைக் கிளையைப் பொறுத்தவரை நான் வைத்ததுதான் சட்டமாக இருக்க வேண்டும். சம்மதமா?" என்ற அவருடைய நிபந்தனையையும் அந்த ஸ்தாபனம் ஏற்றுக் கொண்டது. இருபத்திஞன்கு ஆண்டுகள் தொடர்ந்து அதில் பணியாற்றி, மற்றும் பம்பாய், கல்கத்தா, டில்லி கிளைகளிலும் பணிபுரிந்து, பின்னர் ஜெனரல் மானேஜராக இருந்துவிட்டு ஓய்வு பெற்ருர்.

யானைக்கும் அடி சறுக்கும் என்பார்களே! அப்படியும் ஒரு நிகழ்ச்சி நடந்தது. ஆனுல் கடைசி நிமிஷத்தில் யானை கால் சரியாக ஊன்றிக் கொண்டு விட்டது.

பத்து டைப்ரைட்டிங் மெஷின்களுக்கு ராமையா ஆர்டர் கொடுத்தார். அந்த ஆர்டரில் டைப்ரைட்டிங் தவறு நேர்ந்து கவனத்துக்குத் தப்பியது. சாதாரண மிஷின்களுக்குப் பதிலாக இருபத்திரண்டரை அங்குல ரோலர் பொருத்தப்பட்ட இயந்திரங்கள் வந்து சேர்ந்து விட்டன. அவைகளுக்கு அப்போது சென்னைப் பிராந்தியத்தில் தேவையே இருக்கவில்லை.

மெஷின்களைப் பார்த்த ராமையா திகை
தார். அவைகளை மூடக்கிப் போட்டா
கம்பெனிக்கு நஷ்டமாயிற்றே! உடனடியாக
பல வியாபார ஸ்தாபனங்களுக்கு அத்தகை
பெரிய மிஷின்கள் தேவையா என்று கேட்டு
கடிதங்கள் தயாரிக்கச் செய்தார். அவை
களில் கையெழுத்துப் போட்டுக் கொண்டிரு
கும் போதுதான் ஓர் அற்புதம் நிகழ்ந்தது
அன்று தபாலில் வந்த கடிதத்தைச் சிப்பந்
ஒருவன் கொண்டு வந்து கொடுத்தான்.

அந்த நாளைய தென்னிந்திய ரயில்வே
கம்பெனி நிர்வாகத்திடமிருந்து வந்
கடிதம் அது. இருபத்தி இரண்டரை இஞ்
மெஷின்கள் பத்து உடனடியாக சப்ளை
செய்ய முடியுமா என்று கேட்டிருந்தது
முந்திய திகைப்பைவிட இப்போது ஏற்பட்ட
வியப்பு லட்சம் மடங்கு அதிகமாக இருந்தது
உடனடியாக மிஷின்களை அனுப்பி வை
தார். 'ஆஹா! எத்தனை முன்யோசனை
யுடன் ஆர்டர் கொடுத்தார்!' என்று க
பெனி பாராட்டு மாலை சூட்டியது.

கிளை ஸ்தாபனத்தின் பிரதம அதிகா
யான அவர் கண்டிப்புக்குப் பெயர் போனவர்
ஹேவார்ட், பிரெயன் என்னும் இரு ஆங்
லேயர்கள் அவருக்குக் கீழ் வேலை செய்
வந்தார்கள். அவர்களில் பிரெயனுக்கு உ
ளத்திலே கொஞ்சம் தாபம். ஒரு கறுப்
ரின் கீழ் வேலை செய்வதா என்ற வருத்தம்.

"மிஸ்டர் பிரெயன்! உங்களுக்கு என் கீ
வேலை செய்ய விருப்பமில்லாவிட்டால் நீங்க
உங்கள் இனத்தவர் நிர்வாகம் செய்யும் வேறு
கிளைகளுக்குப் போய் விடலாம். இங்
உங்களுக்காகத் தனிப்பட்ட சலுகைக
கிடைக்காது" என்று பட்டென்று சொல்
விட்டார் ராமையா. பிரெயன் அவரை
புரிந்து கொண்டார். அப்புறம் வாயை
திறக்கவில்லை.

மற்றொரு பெரிய கிளை நிர்வாகியை
கண்காணித்துப் பிடித்துக் கொடுக்கு
பொறுப்பும் ராமையாவுக்கு வந்தது. அந்
நிர்வாகி ஓர் ஆங்கிலேயர். கிளை கல்கத்தாவி
இருந்தது.

அண்டர்வுட் ஸ்தாபனம் 'மல்டிகிரா
பிரிண்டர்' என்னும் மற்றோர் அலுவல
அச்சு யந்திரங்களையும் விற்பனை செய்தது
ஒரு யந்திரத்தின் விலை கிட்டத்தட்ட மூவா
யிரம் ரூபாய். இதை விற்பனை செய்வத
மூலம் கிளை நிர்வாகிகளுக்கு நல்ல கமிஷன்
கிடைக்கும்.

கல்கத்தா கிளையில் இந்த யந்திரங்க
மடமடவென்று விற்பனையானதாகத் தெரி
தது. அதாவது பெரிய பெரிய வர்த்தக
கம்பெனிகளுக்குக் கடனில் இந்த யந்திர
களை சப்ளை செய்துவிட்டு உடனடியாகக் கிளை
நிர்வாகி தம் கமிஷனுக்கு வவுச்சர் எழுதிக்
கொடுத்துப் பணம் பெற்றுக் கொண்டார்.
புது யந்திரங்களுக்கு ஆர்டர் கொடுத்துக்
கொண்டிருந்தார்.

பம்பாய் தலைமைப் பீடம் கொஞ்சம்
உஷாரானது. 'புது மிஷின்களுக்கு ஆர்டர்
வருகிறது. ஆனுல் விற்பனையான மிஷின்
களுக்கான பணம் வருவாரும் வேகம் மிக
குறைவாக இருக்கிறது. இதில் என்ன சிக்க
இருக்கிறது என்று கண்டுபிடிக்க வேண்டும்


இப்பொழுது நடைபெறுகிறது
சென்னை
ஸ்டார்
பிரபாத்
சரஸ்வதி
மற்றும்
தென்னாடெங்கும்
பத்மினி
பிக்சர்ஸ்
முரடன் முத்து
தயாரிப்பு
டைரக்‌ஷன்
பி.ஆர்.பந்துலு
ARUNA

...ன்ற எண்ணத்தில் சென்னைக் கிளை நிர்வாகி ராமையாவை ரகசிய உத்தரவின் மூலம் கல்கத்தாவுக்கு அனுப்பி வைத்தது.

இந்த மல்டிகிராப் மிஷின் வாங்கியதாகக் குறிப்பிடப்பட்டிருந்த ஒன்றிரண்டு ஸ்தாபனங்களில் போய் விசாரித்ததும் அவருக்கு உண்மை புலப்பட்டது. யாருமே அந்த மிஷின்களை வாங்கவில்லை. கிளை நிர்வாகி செய்மூர் என்பவர் அவ்வப்போது இந்த யந்திரங்களை ஸ்டாக்கிலிருந்து எடுத்து ஒளித்து வைத்துவிட்டு ஏதாவது கம்பெனிகளுக்குக் கொடுத்ததாகப் பொய் ஆர்டர் பாரம் ஒன்று தயாரித்துக் கம்பெனியின் பணத்தைச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார். கம்பெனிச் சிப்பந்திகளில் பலர் அவருக்கு உடந்தையாயிருந்தனர்.

திரு ராமையா தம் ரகசிய ரிப்போர்ட்டை அனுப்பிவிட்டுக் கல்கத்தாவில் காத்திருந்தார். தலைமைப்பீடம் உடனடியாக கம்பெனி வக்கீல்களிடம் இந்த வழக்கை ஒப்படைத்து நடத்த உத்தரவிட்டது.

ராமையா இந்த முடிவை ஏற்றுக்கொள்ளவில்லை. 'நான் விசாரித்த மட்டில் செய்மூர் கெட்ட வழக்கங்களால் பெரிய கடனாளியாகித் தவித்துக் கொண்டிருந்தார். அவர் மேல் வழக்குப் போட்டால் கம்பெனிக்குத்தான் மேற்கொண்டு நஷ்டமே தவிர, அவரிடமிருந்து ஒரு பைசாக்கூட வசூலிக்க முடியாது. பேசாமல் ஆசாமியை வேலையிலிருந்து நீக்கி அனுப்பிவிடலாம்' என்றார். கம்பெனி அவர் முடிவை அப்படியே ஏற்றுக் கொண்டது. வேலை நீக்கத்துக்கு ஆளான செய்மூரே 'ராமையாவின் தீர்ப்பை நான் ஏற்றுக் கொள்கிறேன்' என்று மகிழ்ச்சியுடன் சொல்லிவிட்டுப் போனாராம்.

வேலை நேரம் முடிந்த பிறகு தினசரி, காரியாலயத்தில் தம் சிப்பந்திகளைக் கூப்பிட்டுத் தம் முன் அமரச் செய்து வியாபார நுணுக்கங்களைப் பற்றி உபன்யாசமே நிகழ்த்து வாராம். அவரால் இந்த விதத்தில் தயாராக்கப்பட்ட ஐந்நூறு நபர்கள் இன்று வியாபாரத் துறையில் வெகு பிரசித்தி பெற்றிருக்கிறார்கள்.

ஒரு சமயம் கல்கத்தா கிளையின் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுமாறு திரு ராமையா அழைக்கப்பட்டார். ஆனால் குடும்ப நிலை அவரைச் சென்னையை விட்டுக் கிளம்ப அனுமதிக்கவில்லை. ஆகவே தம் கீழ் உதவியாளராக இருந்த திரு ராமன் என்பவரைச் சிபாரிசு செய்து அனுப்பினார். அந்த ராமன் நாளடைவில் தலைமைப் பீடத்திலேயே பெரிய பொறுப்பு ஏற்று ராமையாவுக்கு மேலேயே போய் விட்டாராம். ராமையாவுக்கு இது மிகவும் பெருமைப்படக்கூடிய விஷயமாக இருக்கிறது.

அந்தக் காலத்தில் எல்லாம் டைப் யந்திரத்தில் பெரிய எழுத்து, சின்ன எழுத்து அடிக்க எழுத்து வரிசை ஏறி இறங்காமல் ரோலர் கட்டையே ஏறி இறங்குமாம். இயந்திரங்களிலும் பல வகை உண்டாம்: ஒரு நாள் ஆங்கிலேய நிர்வாகி ஒருவருடன் பேசிக் கொண்டிருக்கும்போது 'சில வருடங்களுக்குள் எல்லா ரக டைப் யந்திரங்களும் ஏறத்தாழ ஒரே பாணியில் வந்துவிடக்கூடும்.



''ரேஷன் கார்டு வந்தால் நம் குடும்பத்துக்கு என்ன கிடைக்கும்?''
''ஒரு ரேஷன்கார்டு கிடைக்கும்!''

அப்போது எழுத்து வரிசை ரோலருக்குப் பதிலாக ஏறி இறங்கும்'' என்றார் ராமையா. அந்த ஆங்கிலேயர் அலட்சியமாகச் சிரித்தார். ''சுத்த பைத்தியக்கார யோசனை! நீர் என்ன பெரிய என்ஜினியரோ? இதைப் பற்றி மேலிடத்துக்குத் தெரிவித்தால் நம்மைப் பற்றி மட்டமாக நினைப்பார்கள்'' என்றாராம்.

ஆனால் வெகு விரைவிலேயே திரு ராமையா எதிர்பார்த்த மாற்றங்கள் எல்லா இயந்திரங்களிலும் தோற்றுவிக்கப்பட்டன.

''நீங்கள் கல்லூரியில் காலடி எடுத்து வைக்கவில்லையே! முழுக்க முழுக்க மேல் நாட்டவர்களுடன்தான் தொடர்பு கொண்டிருக்கிறீர்கள். உங்களுக்குச் சிரமம் ஏதும் ஏற்படவில்லையா?'' என்று கேட்டேன்.

''திறமைக்கு வேற்றுமை இல்லாமல் மதிப்புக் கொடுக்கும் நாட்கள் அந்த நாட்கள். அனுபவம்தான் சிறந்த கல்லூரி. அந்த நாளையில் மெயில் பத்திரிகை ரிப்போர்ட்டராக இருந்த காமத்தும், சர் முகம்மது உஸ்மான் வீட்டில் பிரைவேட் ஆசிரியராக இருந்த கந்தசாமி செட்டியாரும் என் ஆப்த நண்பர்கள். எனக்கு நடைமுறை ஞானம் அவர்கள் உதவியால் நிறைய வளர்ந்தது'' என்றார் திரு ராமையா.

''இன்றைய இளைஞர்களுக்கு — குறிப்பாக வியாபாரத் துறையில் இருப்பவர்களுக்கு நான் சொல்வது இதுதான். நீங்கள் விற்பனை செய்யும் சரக்கைப் புகழ்ந்து பேசுங்கள். ஆனால் போட்டியாக இருக்கும் மற்ற சரக்குகளின் தரத்தைக் குறைத்துப் பேசாதீர்கள். மற்றவர்களைக் குறை கூறும் பணியில் இறங்கும்போது நீங்கள் இருக்கும் இடத்திலேயே இருக்கிறீர்கள். ஆனால் உங்களைப் பற்றி மாத்திரம் சொல்லும்போது நீங்கள் உயருகிறீர்கள். இதில்தான் வாடிக்கைக்காரரின் மனோதத்துவத்தைப் புரிந்துகொள்ளும் ஆற்றல் இருக்கிறது'' என்றார் திரு ராமையா.

வாழ்க்கையில் உயர கல்லூரிப் படிப்பு அவசியம் என்று இல்லை; கடின உழைப்பும் பரந்த மனமும் அந்தக் குறையை ஈடுகட்டிவிடும் என்று தெரிந்து கொள்ள முடிந்தது.

—கோமதி ஸ்வாமிநாதன்





அரு. ராமநாதன்

அத்தியாயம் அறுபத்திநான்கு

முடிவு தெரியாத கதை

வசந்தி வழக்கம்போல் நர்ஸ் உடுப்பு அணிந்து கொண்டு டாக்டர் ஜகந்நாதனின் நர்ஸிங் ஹோமுக்குள் நுழைந்த போது அங்கு விசித்திரமான ஒரு பரபரப்பு உறைந்திருப்பதையும் ரகசியமான பேச்சுக்கள் புரள்வதையும் கண்டு கொண்டாள்.

அதன் காரணத்தைச் சக நர்ஸ் ஒருத்தியிடம் வசந்தி விசாரித்தாள். அதற்கு அந்த நர்ஸ், ''ஸிஸ்டர்! நேற்றிரவு அவசரக் கேஸ் என்று ஒரு பேஷண்டை ஆபத்தான நிலையில் இங்கேகொண்டுவந்து 'அட்மிட்' பண்ணினார்களாம். அது ஒரு பெண் நோயாளி! அவளை 'ஸ்பெஷல் வார்டில்' மூன்றும் 'நம்பர்' அறையில் கிடத்தியிருக்கிறார்கள்!'' என்று அறிவித்தாள்.

வசந்தியின் நெஞ்சு திக்திக்கென்று அடித்துக் கொண்டது, ''நம் டாக்டர் எங்கே?'' என்று அவள் மிகுந்த பரபரப்புடன் கேட்டாள்.

''அந்தப் பெண் பேஷண்டின் அறைக்குள்தான் இருக்கிறார். நேற்றிலிருந்து அங்கேதான் உட்கார்ந்து கொண்டிருக்கிறார். வேறு யாரையும் உள்ளே அனுமதிக்கவும் இல்லை. இது எல்லோருக்கும் ஒரே ஆச்சரியமாக இருக்கிறது!''

அதற்கு மேல் வசந்தியால் எதையும் கேட்டுக் கொண்டு அங்கு நிற்க முடியவில்லை. வில்லிலிருந்து புறப்பட்ட அம்பைப் போல் அவள் விரைந்தோடி ஸ்பெஷல் வார்டை அடைந்து, மூன்றும் நம்பர் அறைக் கதவை ஒருமுறை தட்டிவிட்டு, ''டாக்டர்!'' என்று குரல் கொடுத்தாள்.

அவளுடைய குரலை உணர்ந்ததும், ''உள்ளே வா!'' என்று டாக்டர் ஜகந்நாதனின் குரல் அமைதியாகவே அழைத்தது.

வசந்தி அந்த அறைக் கதவைத் தள்ளித் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தாள். அங்கே நோயாளிக்குரிய கட்டிலின் மீது ஒரு பெண்ணின் உருவம் எலும்பும் தோலுமான உடலுடன் கிடந்தது. அந்தக் கட்டிலின் அருகே அந்தப் பெண்ணைப் பார்த்துக் கொண்டே ஜகந்நாதன் ஒரு நாற்காலியில் அமைதியாக உட்கார்ந்து கொண்டிருந்தார்.

அவர் அருகில் வசந்தி மெல்ல நடந்து வந்து நின்று கட்டிலைக் கூர்ந்து பார்த்தாள். அதில் கிடந்த பெண்மணியின் தலையிலும் முழங்கையிலும் இருதயத்





நின் மீதும் பலமான அடிகள் விழுந்திருக்கின்றன என்பதை உணர்த்தும்விதமாகக் காயக்கட்டுகள் போடப்பட்டிருந்தன. அவள் சுய நினைவு இழந்த நிலையில் கண்களை மூடியபடியே கிடந்தாள். என்றாலும் அவளுடைய உதடுகள் மிகவும் பலஹீனமான ஸ்தாயியில் ஏதோ முணுமுணுத்துக் கொண்டே இருந்தன. ''உங்களுக்காகவே போகிறேன். அவ்வளவு தூரம் உங்களை நான் காதலிக்கிறேன்! அதை நீங்கள் என்றாவது ஒரு நாள் உணர்ந்து எனக்காக ஒரு சொட்டுக் கண்ணீர் வடிப்பீர்களா?'' என்ற வார்த்தைகளைத்தான் டேப் ரிகார்டரின் வாசகங்களைப்போல் அவள் தன்னை மறந்த நிலையிலும்







திருப்பித்திருப்பிக் கூறிக்கொண்டேயிருந்தாள். அவள் நோய்களுக்கு இரையாகி, ரத்தமெல்லாம் சுண்டிப் போய், மிகவும் பலவீனமாகவும் நிறம் வெளிறியும் கிடந்தாள் என்றாலும் அவள் ஒரு காலத்தில் மிகவும் அழகாக இருந்திருப்பாள் என்பதற்கான சின்னங்கள் அவளிடம் ஒட்டிக் கொண்டிருந்தன. வசந்தியையும் விட மிக அழகாகவும் சிவப்பாகவுமே இருந்திருப்பாள்!

''டாக்டர்!'' என்று தழுதழுக்கும் குரலில் கூப்பிட்ட வசந்தி, ''இவள்தான் உங்கள் மல்லிகாவா?'' என்று கேட்டுவிட்டு விம்மினாள்.

டாக்டர் ஜகந்நாதன் தமக்கே இயல்பான புன்முறுவலுடன், ''ஆமாம்; அவள்தான் என் பழைய காதலி குண்டு மல்லிகை!'' என்று கூறிவிட்டு மல்லிகாவைக் கூர்ந்து பார்த்தார். ஒரு காலத்தில் அழகாக விளங்கிப் போதை மணம் வீசிய அந்தக் குண்டுமல்லிகை இப்போது வாடி வதங்கி விட்டதென்றாலும் அதன் மணம் முழுதும் அழிந்து விடவில்லை. இன்னும் இலேசாகக் கமழ்ந்து கொண்டுதானிருந்தது.

பிறகு அவர் வசந்தியின் பக்கம் திரும்பி, ''வசந்தி! பல வருஷங்களுக்கு முன்னால் என்னை விவாக பந்தத்தில் மாட்டி வைத்திருக்கும் சட்டபூர்வமான மனைவி! இப்போது நீ என்னைத் திருமணம் செய்துகொள்வதற்குத் தடையாக வந்திருப்பவள்!'' என்று அழுத்திக் கூறினார்.

அவரையும் மல்லிகாவையும் வசந்தி ஒரு கணம் மாறி மாறிப் பார்த்துவிட்டு, ''டாக்டர்! அவள்... அவள்...'' என்று ஏதோ கேட்க முயன்றாள்.

''அவள் இப்போது சுயநினைவிழந்து கிடக்கிறாள். அவள் மறுபடியும் கண் விழித்துப் பார்த்தாலும் எதுவும் தெரியாது. எந்த ஞாபகமுமே இராது! நிகழ் காலத்தை மறந்துவிட்டுக் கடந்த காலத்திலே அவளுடைய உள்ளம் சதா சஞ்சரித்துக் கொண்டிருக்கிறது. என்னைப் பற்றிய வார்த்தைகளே அவளுடைய உதடுகளில் பொங்கி வழிந்து கொண்டிருந்தாலும், என் நினைவே அவள் உள்ளத்தில் அழுத்திக்கொண்டிருந்தாலும் இப்போது அவள் கண் விழித்து என்னை உற்றுப் பார்த்தால் கூட என் உருவத்தை அடையாளம் புரிந்து கொள்ள மாட்டாள். நாம் எது பேசினாலும் அவள் காதில் விழாது. தன் நினைவில்லாத ஜடமாகவே அவள் இயங்குவாள். இது ஒரு விசித்திரமான நோய்க் கோளாறு!'' என்றார் டாக்டர் ஜகந்நாதன்.


''அவள் எப்படி இங்கே வந்து சேர்ந்தாள்?'' என்றாள் வசந்தி வியப்போடு.

''அதைத்தான் விதியின் விசித்திரமான விளையாட்டு என்று நான் ஒரு கதாசிரியன் என்ற முறையிலே வர்ணிக்க வேண்டும்!'' என்று சொல்லிவிட்டு, சிரிக்க முயன்ற ஜகந்நாதன் தம்மிடம் மல்லிகா வந்து சேர்ந்த விதத்தைச் சுருக்கமாகக் கூறலானார்.

''பல வருஷங்களுக்கு முன்னால் சிங்கப்பூரில் என்னை விட்டுப் பிரிந்ததும் மல்லிகா தன் பாட்டியோடு இந்தியாவுக்குப் புறப்பட்டு வந்து விட்டாள். அதீதமான உணர்ச்சிகளுக்கு உறைவிடமான அவளுக்கு அதிசீக்கிரமாகப் பித்துப் பிடித்து விட்டது; அரைக் கிறுக்குப் போலவே அவள் அலைந்தாள். மூளைக் கோளாறோடு நரம்புத் தளர்ச்சி, இருதய பலவீனம் முதலான பலவித நோய்களும் அவளை நிலையாகப் பிடித்துக் கொண்டன. எல்லாம் கூடி வளர்ந்து, வைத்தியத் துறையிலேயே அதி விசித்திரமாகக் கருதப்படும் ஒரு புது வியாதியையும் அவளிடம் உண்டாக்கி விட்டது. அவளுடைய பாட்டி மிகவும் அழுது புலம்பி அவளை வேலூருக்குக் கொண்டு வந்து அங்கு டாக்டர் ராமசாமி என்பவரின் நர்ஸிங் ஹோமில் ஒப்படைத்தாள். டாக்டர் ராமசாமி தம்மால் முடிந்தவரையில் பலவிதமான சிகிச்சை முறைகளைக் கையாண்டும் கூட, அமெரிக்காவிலிருந்து புது விதமான மருந்துகளை வரவழைத்துப் பிரயோகித்துங் கூட மல்லிகாவை அவரால் குணப்படுத்த முடியவில்லை. அவருடைய கையில் அவளை ஒப்படைத்து விட்ட பிறகு அவளுடைய பாட்டி சில நாட்களுக்குள்ளேயே நிம்மதியாகக் காலமாகிவிட்டாள். மல்லிகாவுக்குப் பாட்டியைத் தவிர வேறு யாருமே இல்லை! அந்தப் பாட்டியும் காலமாகி விட்ட பிறகு அவளைத் தம் நர்ஸிங்ஹோமில் வைத்துக்கொண்டு என்ன செய்வது என்றே டாக்டர் ராமசாமிக்குப் புரியவில்லை. இந்த நிலையில் மல்லிகா டாக்டரின் தடையுத்தரவுகளையும் ஆஸ்பத்திரியின் கட்டுக் காவல்களையும் மீறித் தன் மாடியறையிலிருந்து தப்பிச் செல்லப் பல தடவைகள் முயன்றாளாம். கடைசியில் முந்தாநாள் இரவு அவள் ஜன்னல் வழியாகக் கீழே குதித்திருக்கிறாள். ஆனால் தவறிக் கீழே விழுந்து தலையிலும் இருதயத்திலும் கையிலும் பலமான அடிபட்டு அப்படியே மூர்ச்சித்துவிட்டாள். அதைக் கண்டு டாக்டர் ராமசாமி பெரிதும் குழம்பினார்.

என் வீட்டுப் பாடங்களை எல்லாம் முடிச்சுட்டேம்மா ...






அப்படியா! மிக இனிப்பான பரிசு
அவனுக்குத் தரவேண்டியதுதான்-
காட்பரீஸ் சாக்கலேட்தான் அது-
பாலின் குணங்கள் அடங்கியதாயிற்றே!

Cadbury's காட்பரீஸ் சாக்கலேட்

மிட்டாய் மட்டுமல்ல ... ஒரு உணவும்கூட!


தீபாவளி வெளியீடு
சென்னை
காஸினோ · மஹாலக்ஷ்மி · பிரைட்டன்
மற்றும் தென்னகமெங்கும்..
சேலம் மூவீஸ்
உல்லாசப் பயணம்
டைரக்ஷன்
சதயம்
கதை வசனம்
க. தேவராசன்
பாடல்கள்
திருச்சி தியாகராசன்
இசை
K.V.மகாதேவன்
ஸ்டுடியோ
ரத்னா·சேலம்·
ELEGANT

மல்லிகாவின் அருகில் விழுந்து கிடந்த அவளுடைய கைப்பையை அவர் சோதித்துப் பார்த்தபோது, அந்தப் பைக்குள் ஒரு காகிதத் துணுக்கில் ான் பெயரும் விலாசமும் குறிக்கப் பட்டிருந்ததைக் கவனித்தாராம். மல் லிகாவின் பாட்டிதான் எங்கெங்கோ வெல்லாம் அலைந்து என்னைப் பற்றி விசாரித்துக் கடைசியில் என் விலா சத்தைக் கண்டுபிடித்துத் தன் பேத் திக்குக் கொடுத்திருக்கிறாள். அதற்கு டாக்டர் ராமசாமி வேறு விதமான அர்த்தம் கற்பித்துக் கொண்டார். அதாவது அவருடைய நோயாளி அவ ரிடமிருந்து தப்பியோடி என்னிடம் அடைக்கலம் புகுந்து சிகிச்சை பெற விரும்பியிருக்கிறாள் என்று அவர் நினைத் தாராம். அவளுக்குப் பிடித்திருக்கும் நோயைக் குணப்படுத்துவதில் நான் ஸ்பெஷலிஸ்ட் (விசேஷ நிபுணன்) என் பதும் அப்போதுதான் அவருடைய ஞாபகத்தில் வந்திருக்கிறது. உடனே அவர் தர்மசிந்தனையுடன் மல்லிகாவைத் தூக்கி வானில் போட்டுக்கொண்டு வந்து நேற்றிரவு என் கையில் ஒப்ப டைத்து விட்டுப் போய்விட்டார்.''

''இப்போது மல்லிகாவின் உயிருக்கு ஆபத்து ஒன்றுமில்லையே?'' என்று வசந்தி பதறினாள்.

''இப்போதுதான் அவளுடைய உயி ருக்கு அபாயகரமான கட்டம்! ஏற் கெனவே நோய்களுக்கு உறைவிடமான அவளுடைய உடம்பு மிகவும் பலவீன ஸ்திதியை அடைந்திருக்கிறது. இப் போது தலையிலும் இருதயத்திலும் பலமான அடிபட்டிருப்பதால் அதன் அதிர்ச்சிகளோடு உள்ளுக்குள் முறிவு களும் ஏற்பட்டிருக்கின்றன. உடனே அவளுக்கு ஆபரேஷன் செய்து சிகிச்சை அளிக்க வேண்டும். இல்லாவிட்டால் ரத்தக் குழல்கள் வெடித்து மரணக் கோளாறாக மாறி நாளைக் காலைக் குள் அவளுடைய உயிர் நிச்சயம் போய் விடும். ஆனால் அவளுடைய உடல் நிலையையும் இருதய பலவீனத்தையும் யோசிக்கும்போது இந்த நிலையில் அவ ளுக்கு ஆபரேஷன் செய்தால் அதுவே அவளுடைய உயிருக்கு ஆபத்தாகவும் முடிந்துவிடுமோ என்று டாக்டர் ராம சாமி பயந்தார். ஆபரேஷன் செய்யா விட்டாலும் அவளுடைய உயிருக்கு ஆபத்து. இந்தத் தர்ம சங்கடமான நிலையில் என்ன செய்வது என்று டாக்டர் ராமசாமி தத்தளித்தார். அதனால் மல்லிகாவின் முடிவை என் கையில் ஒப்படைத்து விட்டுப் போய்விட்டார். அதோடு, அவருடைய கடமை தீர்ந்து விட்டது. இனிமேல் என் கடமைதான் ஆரம்பமாக வேண்டும்!'' என்றார் டாக் டர் ஜகந்நாதன் ஒரு பெருமூச்சோடு.

''நீங்கள் இப்போது என்ன செய் யப்போகிறீர்கள், டாக்டர்?'' என்று வசந்தி பரபரப்போடு கேட்டாள்.

''என் விசேஷத் திறமையால் நான் இவளுக்கு ஆபரேஷன் செய்தால் இவளுடைய உயிரை இந்த நெருக் கடியிலிருந்து நிச்சயம் காப்பாற்றிவிடு வேன். எனக்குப் பெயரும் புகழும் பெருகும். ஆனால்...''

''ஆனால் என்ன? டாக்டர்?''

''அந்த ஆபரேஷன் வெற்றியளித் தாலும் இவளுடைய உயிரை இவள் உடலில் பிடித்து நிறுத்தி வைத்தாலும் இவளுக்குத் தன் நினைவு இரும்பி வரவே வராது! நிகழ்கால உணர்வே இவளுக்கு இராது. இவள் கண் திறந்து பார்த்தாலும் தன் எதிரில் உள்ள எதையும் தெரிந்து கொள்ள மாட்டாள். என்னையும் உன்னையும் புரிந்து கொள்ள மாட்டாள். இவ ளுடைய மூளையும் சரியாக வேலை செய் யாது. இருதயமும் சரியாக இயங்காது. இவளுடைய ஆயுட்கால பரியந்தம் தன் நினைவு இல்லாத ஜடமாகவே, உபயோகப்படாத பாத்திரமாகவே, இதே படுக்கையில் கிடக்க வேண்டியது தான்!'' என்று டாக்டர் ஜகந்நாதன்



கூறிவிட்டு வசந்தியின் முகத்தை மிகவும் கூர்மையாகப் பார்த்தார்.

"டாக்டர்...." என்ற வசந்திக்குக் கண்ணீர் பொங்கிக் குரலை ஏதோ ஒன்று அடைத்தது.

"வசந்தி! இந்த மல்லிகாவைப்பற்றி ஒரு முக்கியமான விஷயத்தையும் இப்போது நான் சொல்லுகிறேன். இவள் பல வருஷங்களுக்கு முன்னால் என்னிடம் இறுதி விடைபெற்று என்னைப் பிரிந்து செல்வதற்கு முன்னால் என்னிடம் ஒரு வரம் கேட்டாள். அதாவது அவள் உயிரோடு இருக்கும் காலம் வரை நான் வேறு எந்தப் பெண்ணையும் கல்யாணம் செய்து கொள்ளக் கூடாது என்று ஒரு வாக்குறுதி கேட்டாள். பைபிள் மீதும் திருக்குர்ரான் மீதும் கைவைத்துச் சத்தியம் வாங்கிக் கொள்வது போல் என் மருத்துவப் புத்தகத்தின் மீதே கைவைத்து அவள் அந்தச் சத்தியத்தை வாங்கிக்கொண்டாள். பலவந்தமான சத்தியங்களுக்கு நான் கட்டுப்படாதவன்தான் என்றாலும், அப்போது என் மனப்பூர்வமாகவே அவளுக்கு அந்த வாக்குறுதி அளித்திருந்ததால் கடைசி வரையில் அதை நிறைவேற்றியே தீருவது என்று தீர்மானித்திருக்கிறேன். என் மனச்சாட்சிக்கு இதமான என் வாக்குகள் தான் என்னை விட எனக்குப் பெரிது!"

வசந்தியின் கருவிழிகளில் கண்ணீருக்கிடையே ஒரு பக்தொளி வீசியது.

"வசந்தி! இந்த மல்லிகா உயிரோடு இருக்கும்வரை அந்த வாக்குறுதியிலிருந்து என்னால் விடுபடவே முடியாது. உன் ஆசைப்படி என்னை நீ கல்யாணம் செய்து கொண்டு என் வாழ்க்கைத் துணைவியாவதற்கு ஒரே தடையாக இருப்பவள் இந்த மல்லிகா ஒருத்திதான்! இவளுடைய உயிரோ நம் கையில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அவளுக்கு உடனே நான் ஆபரேஷன் செய்யாமல் இவளுடைய உயிர் தானாகவே பிரிந்து போகும்படி செய்தால் என்மீது எந்தப் பழியும் வரப்போவதில்லை! அதாவது இவளுடைய உயிரையும் நம்முடைய எதிர்கால வாழ்க்கையையும் நிர்ணயிக்கும்படியான விதி நம் கையில்தான் இருக்கிறது. இந்தமாதிரியான அபூர்வமான கட்டத்தில் நாவல்களிலும் சினிமாக்களிலும் கதையை எப்படி முடிப்பார்கள்? யோசித்துப் பார்!" என்று ஜகந்நாதன் அர்த்த புஷ்டியுடன் வசந்தியின் முகத்தை ஆழ்ந்து பார்த்துக்கொண்டே கேட்டார்.

வசந்தி அவருடைய முகத்தை அமைதியாக ஏறிட்டுப் பார்த்து, தன்
கண்ணீருக்கிடையே அலாதியான ஒ
புன்முறுவலுடன், "நீங்கள் என்
முடிவு செய்திருப்பீர்கள் என்று என
குத் தெரியும், டாக்டர்! பகையாளியி
உயிராக இருந்தாலும் தன் கையி
ஒப்படைக்கப்பட்டால் அந்த உயிரை
காப்பாற்றுவதுதான் டாக்டரி
கடமை! அதுதான் உங்கள் மன
சாட்சிக்குக் காணிக்கையாக அளிக்கு
ஆத்ம திருப்தி! நீங்கள் விரும்பும் பல
பும் பயனும் அதுதான்!" என்று
உணர்ச்சிப் பெருக்கோடு.

"இவளுக்கு நான் ஆபரேஷ
செய்து இந்த நெருக்கடியான நிலை
லிருந்து இவளுடைய உயிரை இ
போதைக்கு நான் காப்பாற்றிவிட்ட
லும் கூட, இவளுடைய உயிரின் நீடி
புக்கு உத்தரவாதம் அளிக்கவோ, இ
ளுடைய ஆயுட்காலத்துக்கு ஜோ
யம் கூறவோ என்னால் முடியாது
ஆயுளை நிர்ணயிக்கும் சக்தி ஆண்டவ
ஒருவன் கையில்தான் இருக்கிறது
அடுத்த வாரமோ அல்லது அடுத்
மாதமோ எமதர்ம ராஜன் திடீரென்று
விஜயம் செய்து இந்த மல்லிகாவி
உயிரைக் கொண்டு போய் விடலாம்.'

"நம்முடைய கடமையை நாம் செ
வோம் டாக்டர்! உடனே மல்லிகா
வுக்கு ஆபரேஷன் செய்வதற்கான
ஏற்பாடுகளைச் செய்யுங்கள். அதற்கு
நானும் உதவி செய்கிறேன்!" என்று
வசந்தி பரபரப்போடு கூறினாள்.

"வசந்தி! இன்னொரு முக்கியமான விஷயம். இந்த மல்லிகா என் சட்டபூர்வமான மனைவி என்பது வேறு யாருக்கும் தெரியாது. இவளுக்கே கூடத் தெரியாது. அதனால் இவளை வெறும் பேஷண்டாகக் கருதி இவளுடைய உயிரை இப்போதைக்குக் காப்பாற்றுவது மட்டுமல்ல, இவளை என் மனைவியாகவும் விளம்பரப்படுத்தி இதே படுக்கையில் இவளுடைய ஆயுட்காலம் முழுவதும் வைத்து இவளுக்கு ஓயாமல் சிகிச்சை அளித்துக்கொண்டேயிருப்பேன். இவள் என் வாழ்க்கைக்கு எந்த விதத்திலும் உபயோகமில்லாதவள் என்றாலும் அதையே முகாந்திரமாகக் காட்டி இவளை நான் விவாகரத்துச் செய்யப் போவதில்லை! என்னுடைய வைத்தியத் திறமையையெல்லாம் காட்டி என்னால் முடிந்த வரை இவளுடைய உயிரை நீடிக்கச் செய்துகொண்டுமிருப்பேன்!"

"அதுதான் டாக்டர் உங்கள் கடமை, தனிப் பண்பு, தனிப் பெருமை எல்லாம்!" என்று வசந்தி சொன்ன போது அவளுடைய முகம் அதிகமாகப்

இவர்களுடைய
வளமான வருங்காலம்
இப்பொழுதே
திட்டமிடப்படுகிறது



இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்கின் ரெக்கரிங்
டிபாஸிட் திட்டத்தின் சேமிப்பைக்கொண்டு.

குறைந்த பட்சம் ரூ. 5/-லிருந்து அதிக பட்சமாக அதன் பெருக்குத் தொகை ரூ. 500/- வரையில், டிபாஸிட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

பிரதிமாதம் டிபாஸிட் செய்யும் தொகையான :

ரூ. 5/- ரூ. 10/- ரூ. 50/- ரூ. 100/- ரூ. 500/-

கீழ்க்கண்டபடி பெருகும் :

	ரூ. 5/-	ரூ. 10/-	ரூ. 50/-	ரூ. 100/-	ரூ. 500/-
12 மாதங்களில்	ரூ. 61.00	ரூ. 122	ரூ. 610	ரூ. 1,220	ரூ. 6,100
24 மாதங்களில்	,, 124.50	,, 249	,, 1,245	,, 2,490	,, 12,450
36 மாதங்களில்	,, 192.00	,, 384	,, 1,920	,, 3,840	,, 19,200
48 மாதங்களில்	,, 262.00	,, 524	,, 2,620	,, 5,240	,, 26,200

இந்தியன் ஓவர்சீஸ் பாங்க் லிட்.

தலைமைக் காரியாலயம் : 151, மவுண்ட் ரோட், சென்னை-2

உங்களுக்கு சேவை செய்வதற்காக 100 க்கு மேற்பட்ட கிளை அலுவலகங்கள் இந்தியாவின் முக்கிய இடங்களில். இதில் தமிழ் நாட்டில் மட்டும் 60 க்குமேற்பட்ட கிளை அலுவலகங்கள் உள்ளது.


எம். ஸிடி. முத்தையா
சேர்மன்

கே. எம். நஞ்சப்பா
ஜெனரல் மானேஜர்

IOB-17-SA

உங்கள் கேசம் உதிருகிறதா

இந்த மாதிரி அபாயக் குறிகள் அதை அறிவிக்கின்றன.



கேசம் உதிருதல்

உங்கள் ரோமம் உதிருகிறது, ஏனெனில், ரோமக்கால்களுக்குப் போதிய ஊட்டமில்லாததுதான்.



இளமையில் வழுக்கை

இந்நிலையை நீங்கள் அநேகமாகத் தவிர்த்திருக்கக்கூடும்

பொடுகு, ரோமம் உதிருதல் மற்றும் கேசம் குறைதல் முதலிய உபாதைகளால் நீங்கள் சிரமப்பட்டால் இன்றே ப்யூர் சில்விக்ரீன் உபயோகிக்கத் தொடங்குங்கள். ப்யூர் சில்விக்ரீனில் உங்கள் ரோமத்தின் வளர்ச்சிக்குத் தேவையான எல்லா பதினெட்டு 'அமினோ ஆஸிட்'களும் தீவிரமான வகையிலிருக்கின்றன. தலையில் நன்றாக அழுத்தித் தேய்ப்பதன் மூலம் ப்யூர் சில்விக்ரீன் ரோமக்கால்களில் புகுந்து அவைகளுக்குத் தேவையான இயற்கையான ஊட்டத்தையளித்து, கேசத்தை மறுபடியும் ஆரோக்கியமாக இருக்கச் செய்கிறது.



ப்யூர் சில்விக்ரீன்

கேசம் சம்பந்தமான உபாதைகளுக்குக் குணமளிக்கும் ஓர் மிகத் தீவிரமான தயாரிப்பு. ஒரு மாத கால வைத்தியத்துக்குப் போதுமானது.

'ஆல் எபௌட் ஹெயர்' (All About Hair) என்ற, படங்கள் கொண்ட, இலவசப் புத்தகத்தை நீங்கள் பெற விரும்பினால் தயவுசெய்து கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்: டிபார்ட்மெண்ட் K-2, சில்விக்ரீன் அட்வைஸரி சர்வீஸ் தபால் பை 10022, பம்பாய்-1

சில்விக்ரீன் ஹேர் டிரெஸிங்


உங்கள் கேசத்தை நாள் பூராவுக்கும் நன்கு சீவியபடி வைக்கிறது. பொடுகு ஏற்படாமல் தடுப்பதற்குப் போதுமான ப்யூர் சில்விக்ரீன் கலந்துள்ளது.



Silvikrin

சில்விக்ரீன்—கேச ஆரோக்கியத்துக்கான வழி

SP/1/P/7/64



பிரகாசித்தது. டாக்டர் ஜகந்நாதனைப் பற்றிய ஒரு தனிப்பட்ட பெருமையும் அவளுடைய உள்ளமெல்லாம் நிறைந்து அவளுடைய கண்ணீரின் கசிவில் கனன்று ஒளிர்ந்தது.

''அப்படியானால் உன் நிலை?'' என்று டாக்டர் ஜகந்நாதன் மிகவும் பரிவோடு கேட்டார்.

''என்றாவது ஒரு நாள் உங்களுக்கு நான் வாழ்க்கைத் துணைவியாவேன் என்ற நம்பிக்கையோடு உங்கள் அருகிலேயே முழு நேர நர்ஸாகப் பணிபுரிந்து உங்கள் முகத்தைச் சதா பார்த்துக் கொண்டேயிருப்பேன்.''

''ஒருவேளை நாம் எதிர்பார்ப்பதற்கு மேலாக டாக்டர்களின் கணக்கையெல்லாம் மீறி இந்த மல்லிகா அதிக காலம் உயிர் வாழக் கூடும். பலப்பல வருஷங்கள் கூட வாழக் கூடும்.''

''எத்தனை வருஷங்களானாலும் உங்களுக்காக நான் காத்திருப்பேன், டாக்டர்!''

''நீ என் வாழ்க்கைத் துணைவியாவதற்குள் ஒருவேளை நீ கிழவியாகிவிட்டால்....?'' என்று ஜகந்நாதன் சிரித்துக்கொண்டே கேட்டார்.

வசந்தியும் சிரித்துக்கொண்டே, ''அப்போதும் என் இருதயத்தில் உள்ள காதல் இளமையாகவே இருந்துவரும்! அதன் சுவாரசியம் ஒருபோதும் குன்றாது!'' என்றாள் ஆத்மீக லயிப்போடு.

''இதை அசட்டுத்தனம் என்று மற்றவர்கள் சொல்வார்கள். உன் அக்கா உமாவும் உன் உற்றார் உறவினர்களும் உன்னுடைய முடிவை ஒப்புக்கொள்ள மாட்டார்கள்.''

''மற்றவர்களைப் பற்றி எனக்குக் கவலை இல்லை. என் முடிவிலேயே கடைசிவரை நிற்பேன். என் அக்காவும் மற்றவர்களும் வாழ்க்கையைப் பார்க்கும் விதம் வேறு. நானும் நீங்களும் வாழ்க்கையைப் பார்க்கும் விதம் வேறு. நம் மன நிலையை அவர்களால் புரிந்து கொள்ள முடியாது டாக்டர்! அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்கிற அவசியமும் எனக்கு இல்லை'' என்றாள் வசந்தி.

''அது உண்மைதான் வசந்தி!'' என்று வெகு ரசனையோடு கூறியபடி அவளுடைய முகத்தைத் தன்னிரு கைகளாலும் தூக்கி, ''நாமிருவரும் ஒன்றுகூடி, நம் வாழ்க்கையையே ஒரு நாவலாக எழுத வேண்டும் என்று ஆசைப்பட்டோம். வேதாளஇலக்கியத்தில் வரும்முறைதெரியாக் கதை போலவும், நவீன மர்ம இலக்கியங்களில் வரும் முடிவில்லாத கதை போலவுமே நம்முடைய கதையும் ஆகிவிட்டது!'' என்று சொல்லிச் சிரித்தார்.

வசந்தியின் உதடுகள் உணர்ச்சிப் பெருக்கோடு ஏதோ சொல்லத் துடித்தன. ஆனால் அதைச் சொல்வதற்குள் ஜகந்நாதனின் வாயிதழ்கள் புன்முறுவலுடன் மூடிவிட்டன.

அத்தியாயம் அறுபத்தைந்து

மல்லிகையின் மணம்

ஒரு நாள் வெள்ளிக்கிழமை மாலை நேரத்தில் மூன்று பெண்கள் கலகல வென்று தங்களுக்குள் ஏதேதோ பேசிச் சிரித்தபடி பூக்கடைக்கு நடந்து வந்தார்கள். அவர்கள் உமாவும் வசந்தியும் லலிதாவும்தான்!

''நல்ல பூவாகக் குண்டு மல்லிகை மூன்று முழம் கொடு!'' என்றாள் லலிதா. மூன்று முழமும் அவளுடைய கூந்தலோடு அவளது கணவன் சம்பத்குமார் முகர்ந்து பார்ப்பதற்கு. வசந்தி இரண்டு முழம் பூ வாங்கினாள். ஒரு முழம் தன்னை உணர்ந்த ஜகந்நாதனின் கண் ரசனைக்கு! இன்னொரு முழம் தன் நினைவற்று நோய்ப் படுக்கையில் கிடக்கும் மல்லிகாவின் கூந்தலுக்கு!

உமாவும் இரண்டு முழம் குண்டு மல்லிகை வாங்கினாள். ஒரு முழம் பிச்சுமணியின் கைகளால் தன் கூந்தலில் சூடிக்கொள்வதற்கு! இன்னொரு முழம் அவளுடைய பிள்ளையாருக்கு!

குண்டுமல்லிகையின் நறுமணம் கமழ்ந்து கொண்டேயிருந்தது!

முற்றிற்று



தாயும் சேயும்

11-ம் நூற்றாண்டின் மகத்தான கலைச் சிறப்புக்கோர் இலக்கணமாக, மத்திய பாரதத்திலுள்ள கஜுராஹோவை சிற்ப மண்டலத்தைச் சார்ந்த சாதனை இதோ: தாய்ப் பாசத்தின் உயிர்த் துடிப்பைக் கல்லிலே வடித்துவிட்ட ஒரு கைதேர்ந்த சிற்பியின் கலை நுட்பம்.

வரலாற்றுச் சிறப்புடைய அரும்பெரும் கலைச் செல்வங்களை நம் விழிகளில் காணப்பெற்றுள்ளோம். கைவினைத் திறன் மகிழ்ந்துபோய் எந்திர உற்பத்தி பெருகியுள்ள இக் காலத்திலும்கூட, தொழில்துறையானது கலையோடு உறவுபூண்டு செயல்படுவது தெரிகிறது.

சிற்பக் களஞ்சியங்களுக்காக மட்டுமின்றி, கைவினைத் தொழில்களுக்காகவும் புகழ்பெற்றிருந்தது பழங்கால பாரத நாடு; நெசவுக் கலை நிபுணர்களும், சாயம் தோய்ப்போரும், உலோக வார்ப்படக் கம்மாளர்களும் அப் பழங்காலத்திலேயே எய்திருந்த கலைத்தேர்ச்சி என்றும் வியப்புக்குரியது.

அப் பழம்பெரும் கைவினைக் கலைஞர்களின் குறைதளத்தைப் போற்றுவோராகிய ராய்ப்பூர், கீர்த்திமிக்க நெசவுகளையும் உயர்தரத் துணி வகைகளையும் உற்பத்தி செய்து வருகின்றனர்.

கோடுபோட்ட & கட்டம்போட்ட ஷர்ட்டிங்கு
வெள்ளை & சாயம்தோய்த்த பாப்ளின்
ப்ரின்டெட் லான் & வாயில்
புட்டா—வீலே
ஸைப்பர்:: பைன் வேஷ்டி
கேபர்டின்—கோட்டிங்கு

"SANFORIZED"

ராய்ப்பூர் மில்ஸ் அஹமதாபாத்.

சதுராசாரி வந்தானே!

அலுவலகத்தை விட்டுக் கிளம்பும் போது மணி ஏழு இருக்கும். தெருவில் விளக்குகள் எரியத் தொடங்கிவிட்டன. புண்ணியமூர்த்தி கையில் மூட்டை ஒன்றுடன் அலுவலகத்தை விட்டு வந்து கொண்டிருந்தார். புண்ணியமூர்த்தி எப்போதும் அந்த நேரத்துக்குத்தான் கிளம்புவார். காலை ஒன்பதரை மணிக்கு அவரை மேஜையடியில் பார்க்கலாம். தம் கடமையைச் செவ்வனே ஆற்றி இருபது வருஷங்களைக் கடத்தி விட்டார். வெள்ளைக்காரன் காலத்தில் ஒரு குமாஸ்தாவாகப் புகுந்தவர். சுதந்திரம் வந்து முஸ்லிம்கள் பாகிஸ்தானுக்கு ஓடியதில் அவருக்குப் பதவி உயர்வு விரைவாகக் கிடைத்தது. செக்ஷன் ஆபீஸர் என்ற ஒரு நிலையில் வந்து நங்கூரம் பாய்ச்சி விட்டார். அவர் அதற்கு மேல் பதவி உயர்வை எதிர்பார்க்கவில்லை. குடும்பத்தில் அவரை நம்பி ஆறு ஜீவன்கள் வாழ்ந்தன. சீக்குக்கார மனைவி. படிப்படியாகக் குழந்தைகள். மூத்தவள் பெண். பதினெட்டு வயதை எட்டிவிட்டாள். ஹையர் செகண்டரிக்கு மேல் படிக்க வைக்கச் சக்தியின்றி வீட்டிலேயே இருந்து அம்மாவுக்கு உதவி செய்தாள். அவளது கல்யாணம் அவரது முதல் பிரச்னை. குறைந்தபட்சத் தேவைகூட அவர் சேமிப்பில் கிடையாது. சேம நிதியிலிருந்து கடன் வாங்கினால்தான் உண்டு. பின்னே கிடைத்தால்தானே அதைப் பற்றி யோசிக்க வேண்டும்? பின்னே தேடுவதற்கு நேரம் எங்கே இருக்கிறது?

அன்று புண்ணியமூர்த்தியின் பக்கத்தில் இளைஞன் ஒருவன் வந்து நின்று அவரைச் சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தான்.

"என்ன பார்க்கிறாய்?" என்று கேட்டார்.

"எங்கேயோ உங்களைப் பார்த்த முகமாக இருக்கிறதே!"

"ஒரே ஊரில் இருந்தால் அடிக்கடி சந்திப்பது சகஜம்தானே?"

"இருந்தாலும் சில முகங்களை நாம் மறப்பதற்கில்லை, அல்லவா?"

"ஆமாம்!"

"நீங்கள் எந்த மினிஸ்ட்ரி? இத்தனை நேரம் கழித்துப் போகிறீர்களே!"

"நான் எப்போதும் இப்படித்தான் போவது வழக்கம். காலையில் முன்னதாகவே வந்து விடுவேன்!"

"குடும்பம் ஏதும் கிடையாதா?"


"அதுபாட்டுக்கு அது. அன்றன்றைய வேலையை அன்றன்றைக்கே முடிக்க வேண்டும் என்ற கருத்துடையவன் நான்."

"உங்கள் மாதிரி ஒவ்வொருவரும் இருந்தால் சிவப்புநாடா என்ற சொல்லே ஏற்பட்டிராது. ஆமாம், வீட்டுக்குக் கூட வேலை கொண்டு போகிறீர்கள் போலிருக்கிறதே!"

"ஹி....ஹி...."

"ஏன் சிரிக்கிறீர்கள்?"

"அது வேலை இல்லை. ஒன்சைடு பேப்பர். பசங்களுக்கு நோட்டு வாங்கிக் கட்டுப்படியாகவில்லை. ஒண்ணாங்கிளாஸ் படிக்கிற



இழந்தைக்குக் கூட ஒன்பது நோட்டுக் கொண்டா என்கிறார்கள். சர்க்காருக்காக உழைக்கிறோம். சர்க்கார் காரியாலயங்களில் வீணாகும் பேப்பர்களுக்குக் கணக்கு வழக்குக் கிடையாது. வீணான பேப்பரைத்தான் எடுத்துப் போவோமே என்று கட்டிக்கொண்டு போகிறேன்.''

''சிறு துரும்பாயிருந்தாலும் அதைச் சொந்த உபயோகத்துக்கு எடுத்துச் செல்வது குற்றம் ஸார்! இவ்வளவு நேர்மையாக வேலை செய்யும்போது நடுவில் ஏன் இந்த அற்பக் குற்றத்தைச் செய்கிறீர்கள்?''

''அரசாங்க பைல்களையே 'கபாடிவாலா' விடம் (பழைய பேப்பர்க்காரன்) போட்டு விடுகிறார்கள். நான் என்னமோ பயன்படாத காகிதத்தை எடுத்துப் போவதைக் குற்றம் என்கிறீர்களே!''

''எதுவும் கண்டுபிடிக்கப்படாதவரைதான் தப்பிக்க முடியும். கண்டுபிடித்து விட்டால் தண்டனையுடன் அவமானம் வேறல்லவா?''

''ஊம்... இதை எவனப்பா கண்டுபிடிக்கப் போகிறான்?...''

''நீங்கள் எங்கே போக வேண்டும்?''

''நான் பண்டாரா ரோட்டுக்குப் போக வேண்டும்.... நீ...''

''நானும் அந்தப் பக்கம்தான். ஒரு ஸ்கூட்டர் பிடிக்கிறேன். உங்களை இறக்கி விட்டுப் போகிறேன்...''

''எதற்கப்பா? பஸ் வந்து விடும்.''

''பஸ் வர நேரம் ஆகும் போலிருக்கிறது'' என்று சொல்லி இளைஞன் ஸ்கூட்டரைக் கொண்டு வந்தான்.

புண்ணியமூர்த்தியை அவர் வீட்டில் இறக்கி விட்டு அவன் போய் விட்டான்.

மறுநாளே புண்ணியமூர்த்தி அலுவலகத்துக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார். அப்போது இரண்டு போலீஸ் அதிகாரிகள் அங்கு வந்ததைக் கண்டதும் புண்ணியமூர்த்தி திகைத்துப் போனார்.

''உங்கள் மீது ஒரு புகார் வந்திருக்கிறது. வீட்டைச் சோதனை போட வேண்டும்.''

''என்ன, என்மீதா புகார்?''

''ஆமாம், சார்!''

இருவரும் வீட்டைச் சோதனை போட்டார்கள். சர்க்கார் அலுவலகக் காகிதங்களை யெல்லாம் கட்டுக் கட்டாக எடுத்து வந்து போட்டார்கள்.

''இதெல்லாம் எப்படி உங்களுக்கு வந்தன?''

''இவையெல்லாம் வீணான குப்பைகள்.''

''அரசாங்கக் குப்பைக் கூடைக்குள் அல்லவா அவை இருக்க வேண்டும்? உமது வீட்டுக்கு எப்படி வந்தன? அரசாங்கச் சொத்தைக் களவாடியதாக உம்மீது குற்றப் பதிவு செய்யப் போகிறேன்.''

''ஐயா! நான் பிள்ளை குட்டிக்காரன். என்னை வம்பில் இழுத்து என் பிழைப்பில் மண்ணைப் போட்டு விடாதீர்கள். இந்தக் காகிதத்தை யெல்லாம் திருப்பி எடுத்துப் போங்கள்....''

ஆனால் அந்த அதிகாரிகள் இருவரும் விடவில்லை. அவர்மீது குற்றப் பதிவு செய்து கொண்டுதான் போனார்கள். நேற்று தம்முடன் வந்த இளைஞன்தான் இதற்குக் காரணம் என்று புண்ணியமூர்த்திக்குப் புரிய அதிக நேரமாகவில்லை. அவனைச் சபித்துக் கொண்டே அலுவலகத்துக்குப் போனார். அதற்குள் செய்தி அங்கு போய்ப் புண்ணியமூர்த்தியை 'ஸஸ்பெண்ட்' செய்துவிட்டார்கள். 'கோடிக் கணக்கில் மோசடி நடப்பதை யெல்லாம் கண்டுபிடிக்க முடியவில்லை. கேவலம் வீணான காகிதம் போனதைக் கண்டுபிடித்துத் தண்டித்து விட்டார்களா?' என்று அவர் குமுறினார்.

புண்ணியமூர்த்தி தமது குற்றத்தை ஒப்புக்கொண்டு மன்னிக்குமாறு கேட்டுக் கொண்டார். அவரது வேலையில் எவ்வித மாசு மறுவும் கிடையாது. ஆதலால் மேலதிகாரிகளின் கருணையினால் ஒரு வருஷ இன்கிரிமென்ட் நஷ்டத்துடனும் எச்சரிக்கையுடனும் திரும்பவும் வேலைக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டார். இத்தனை வருஷ ஸர்வீஸில் இம்மாதிரி ஓர் அவமானம் நேர்ந்து விட்டதே என்று மனம் ஒடிந்து போனார்.

இந்தச் சமயம் பார்த்து அவரது மனைவி மூத்த பெண்ணின் கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்யுமாறு நச்சரிக்கத் தொடங்கினாள்.

''கல்யாணத்துக்குப் பணத்துக்கு எங்கே போவது?... பெண்ணுக்கு வயது ஒன்றும் ஆகி விடவில்லை.''

''ஏன் ஆகவில்லை? பதினெட்டு வயது ஒரு வயதில்லையா? பிராவிடென்ட் பண்டில் கடன் வாங்குங்கள். வேறு என்ன செய்வது?''

''இன்றைக்கெல்லாம் இருந்தால் நாலாயிரம் ரூபாய் வாங்க முடியும். அதற்கு மேல் ஆகும் செலவை யார் கொடுப்பார்கள்?''

''வெளியே....''

''என்ன சொன்னே? இந்தப் புண்ணியமூர்த்தி இன்னொருவனிடம் போய் ஒரு பைசா கொடு என்பானா? பட்டினி கிடந்து செத்தாலும் சரி, பிறரிடம் கடன் வாங்கும் பேச்சை என்னிடம் பேசாதே!''

''வேறு என்னதான் வழி?''

''உன் பெண் வேலைக்குப் போய்ச் சம்பாதிக்கட்டும். டிசம்பரில் ஸ்டெனோ டைப் பரீட்சை வருகிறது. எழுதச் சொல்.''

''இத்தனை நாட்கள் இல்லாமல் இது என்ன யோசனை?''

''எத்தனையோ பெண்கள் வேலைக்குப் போகிறார்கள். அவளும் போகட்டும். அவள் கல்யாணத்துக்கு அவளே சம்பாதித்துக் கொள்ளட்டும்.''

பெண் சியாமளாவுக்கு இந்த ஏற்பாட்டில் பரம திருப்தி. வீட்டுக்குள் அடங்கிக் கிடப்பதை விட வேலை என்று வெளியே போய் வருவதை அவள் மனம் விரும்பியது. உற்சாகத்துடன் பரீட்சைக்குப் படிக்க ஆரம்பித்தாள். இந்த மாதிரி உத்தியோகப் பரீட்சைக்கு மாணவர்களைத் தயாரிக்கும் கல்வி நிலையங்கள் மலிந்து கிடக்கும் தலைநகரிலே சியாமளாவைப் பயில்விப்பதற்குத்தானா இடம் கிடைக்காது?

ஜனதா டுடோரியல்ஸில் சியாமளா சேர்ந்தாள். அவளுடன் நூற்றுக் கணக்கான

ணவ மாணவிகள் பல்வேறு பரீட்சைகளுக்காகச் சேர்ந்திருந்தார்கள்.

ஸினார்க் பரீட்சை போதகர் ஒருவர் தராளி இளைஞன். அவனுடைய உச்சரிப்பிலிருந்து தென்னாட்டவன் என்பதைச் சியாமளா புரிந்து கொண்டு விட்டாள்.

வகுப்பு முடிந்து பஸ் நிலையத்தில் சியாமளா காத்திருந்தபோது அந்த இளைஞனும் வந்து நின்றான்.

"நீ எங்கே போக வேண்டும்?"

"பண்டாரா ரோடு."

"உங்கப்பா எந்த ஆபீஸில் வேலை பார்க்கிறார்..."

சியாமளா பதில் சொல்லவில்லை.

"நான் கேட்ட கேள்விக்கு...."

"பதில் சொல்லத் தேவையில்லை. ஸினார்க் பரீட்சைக்கு வரப்போகும் கேள்வியாக அது நிச்சயம் இராது."

இளைஞன் முகம் சிறுத்துவிட்டது.

"நான் இந்தத் தில்லியில் பிறந்து வளர்ந்தவள். என்னிடம் இந்த வித்தையெல்லாம் வேண்டாம்" என்றாள் மறுபடியும்.

"மன்னிக்கவும். என்னைத் தவறாக எடுத்துக்கொண்டு விட்டாய் நீ. உனக்கு ஆசிரியனாக இருப்பவன் போக்கிரியாக இருக்க முடியுமா?"

"அது 'பார்ட் டைம்' வேலைதானே?"

"முழு நேரத்திலும் நான் யோக்கியன் தானம்மா. நான் ஒரு சதாசாரி."

"அதென்ன புதுசாரியாக இருக்கிறது?"

"நம் நந்தாஜி அமைத்திருக்கிறாரே சதாசார் சமிதி. அதில் ஓர் உறுப்பினன். ஒழுக்க நெறியைப் பராமரிப்பதற்கு உதவி செய்யும் நிறுவனம்."

"யாருடைய ஒழுக்க நெறியைப் பராமரிக்கப் போகிறீர்கள்?"

"அரசாங்க ஊழியர்கள் நேர்மையுடன் நடந்து கொள்ளச் செய்து, அவர்கள் மீது லஞ்ச ஊழல் புகார்கள் வந்தால் அதை விசாரித்து நியாயம் வழங்க உதவுவது. இதெல்லாம்தான் எங்கள் பணி."

இளைஞன் மீதிருந்த கோபம் ஒரு வழியாகத் தணிந்துவிட்டது.

"பஸ் நிலையத்தில் பெண்களிடம் பேசுவதால் அந்த நெறியை எவ்வளவு தூரம் நீங்கள் பராமரிக்கப் போகிறீர்கள்?"

"இப்போது உன்னுடன் பேசுவதற்கும் அதற்கும் சம்பந்தமில்லையம்மா. தமிழ்ப் பெண்ணாக இருக்கிறாயே என்று பேச்சுக் கொடுத்தேன். ஜனதா டுடோரியலில் நீ ஒருத்திதானே தமிழ்ப் பெண். ஸினார்க் பரீட்சைக்கு இதில் வந்து சேருவானேன், வீட்டிலேயே படித்துக் கொள்ளலாமே என்று சொல்ல நினைத்தேன். அதற்குள் என்னை நீ தில்லி ரௌடி என்று நினைத்துப் பேச ஆரம்பித்துவிட்டாய்."

"சார்! மன்னிக்கவும். நான் பள்ளிப் படிப்பை விட்ட பிறகு இப்போதுதான் வெளியே தனியாக வருகிறேன். அதனால் எவரையும் நம்ப என் மனம் துணியவில்லை."

இருவரும் பிறகு சிநேகமாகி விட்டார்கள்.

சியாமளா பரீட்சை எழுது முன்னரே சொந்தத்தில் ஒரு வரன் நிச்சயமாகி விட்டது. புண்ணியமூர்த்தி நாலாயிரம் ரூபாய் ஆபீஸில் கடன் வாங்குவது என்றும், அதில் வரதட்சிணையாக இரண்டாயிரம் கொடுப்பதென்றும் பாக்கி இரண்டாயிரத்துக்குள் கல்யாணத்தை முடித்துக் கொள்வது என்றும் ஏற்பாடு.

ஒருநாள் சதாசாரியிடம் சியாமளா தனது கல்யாணம் நிச்சயமாகப் போவதையும் பாக்கு வெற்றிலை வாங்க இன்ன தேதியில் பிள்ளை வீட்டுக்காரர்கள் வரப்போகிறார்கள் என்றும் சொன்னாள். தான் பரீட்சை எழுதுவது அன்று தீர்மானமாகும் என்றும் சொன்னாள்.

"கல்யாணமானால் என்ன? பரீட்சையை எழுதி வை. வேலை கிடைத்தால் இருவரும் சம்பாதிக்கலாமே?" என்று அந்த இளைஞன் யோசனை சொன்னான்.

சியாமளாவுக்கும் அது உவப்பாகப் பட்டது. அப்பாவிடம் சொல்வதாகச் சொல்லிவிட்டு, பாக்கு வெற்றிலை மாற்றும் தினத்தில் தம் வீட்டுக்கு வருமாறு அவனுக்கு அழைப்பும் விட்டுச் சென்றாள்.

பிள்ளை வீட்டாரிடம் பாக்கு வெற்றிலை மாற்றி, இரண்டாயிரம் பணத்தையும் புண்ணியமூர்த்தி கொடுத்து விட்டார். அப்போது அந்த இளைஞனும் வேறு இரண்டு பேரும் அங்கு தோன்றினார்கள்.

இளைஞனைப் பார்த்ததும் புண்ணியமூர்த்தியின் முகம் மாறியது. அன்று பஸ் நிலையத்தில் அவரது பையில் இருப்பதைத் தெரிந்து கொண்டு போன இளைஞனும் சியாமளாவின் போதனை ஆசிரியரும் ஒரே ஆள்தான்.

"அப்பா, இவர்தானப்பா என் ஆசிரியர் சதாசாரி."

"ஏனப்பா மறுபடியும் என்ன கலகம் செய்ய வந்தாய்?"

"என்னப்பா இது அவரைப் போய்..."

"சியாமளா. இவன்தானம்மா எனக்கு உத்தியோகத்தில் 'தண்டனை' வாங்கி வைத்தவன். அன்று போலீசுக்குத் தகவல் கொடுத்து ..."

"ஹா! இவர்தானா அது?" என்று சியாமளாவும் வெகுண்டாள்.

இளைஞன் அமைதியுடன் பதில் சொன்னான்:

"மிஸ்டர் புண்ணியமூர்த்தி! அன்று பஸ் நிலையத்திலேயே அந்த அற்பக் குற்றத்தை ஏன் செய்கிறீர்கள் என்று எச்சரித்தேன். எவ்வளவோ நேர்மையுடன் உழைக்கும் நீங்கள் ஒரு சிறு குற்றத்துக்காகத் தண்டனை அனுபவிக்க நேர்ந்தது எனக்கு வருத்தமாகத்தான் இருக்கிறது. ஆனால் இன்று அற்பக் குற்றங்கள் செய்வது நாளை பெருங் குற்றங்களுக்குத் தூண்டுகோலாகி விடுகிறது. அதை முளையிலே கிள்ளி எறிவது நமது நிர்வாகம் தூய்மை பெறுவதற்கு அவசியமில்லையா? இதோ இப்போதும் நீங்கள் ஒரு குற்றத்தைச் செய்திருக்கிறீர்கள். அதற்காக உங்களை அரெஸ்ட் செய்யவே 'மப்டி'யில் இவர்கள் வந்திருக்கிறார்கள்."

"என்ன குற்றம் செய்தேன் இப்போது?" என்று முகம் வெளிறக் கத்தினார்.

"பெண்ணுக்கு வரதட்சிணை கொடுப்பதும் வாங்குவதும் சட்டப்படி குற்றமில்லையா?"

"அட பாவி! எவ்வளவு கஷ்டப்பட்டு என் பெண்ணுக்கு என் சக்திக்கு உட்பட்ட

வரனைத் தேடியிருக்கிறேன். அதில் மண்ணைப் போட்டு, என் பெண்ணை வாழ விடாமல் அடிக்க வந்து விட்டாயே! சட்டத்தை மீறு மல்பார்த்துக் கொள்வதற்குப் பாடுபடும் நீ வரதட்சிணை வாங்காத ஒரு மாப்பிள்ளையைக் கொண்டுவந்து நிறுத்துவதுதானே?''

''நிறுத்துகிறேன். நீங்கள் கொடுத்த பணத்தைத் திருப்பி வாங்குங்கள். அவர்கள் உமது பெண்ணைப் பணமில்லாமல் மணம் செய்துகொள்கிறார்களா என்று கேளுங்கள்.''

பணம் வாங்கியவர்கள் திருப்பிக் கொடுத்து விட்டு, பிறகு பதில் சொல்வதாகப் போய் விட்டார்கள்.

இளைஞன் புண்ணியமூர்த்தி, ''இவர்கள் இருவரும் என் நண்பர்கள். உங்களைப் பயமுறுத்து வதற்காகப் போலீஸ் என்று சொன்னேன். பிறகு பதில் சொல்வதாகப் போனார்களே, அவர்கள் வர மாட்டார்கள். ஏனெனில் அந்தப் பையன் இந்நேரம் ஒரு வஞ்ச குற்றத்துக்காக ஆபீஸில் கைதாகியிருப்பான். அப்படிப்பட்டவனுக்கா பெண்ணைக் கொடுப்பது? ஒரு பைசா செலவில்லாமல் அவளை நான் மணம் செய்து கொள்கிறேன். எனக்குத் தாய் தந்தை கிடையாது. என் நண்பர்கள் என் சார்பில் பாக்கு வெற்றிலை வாங்குவார்கள். பணத்தை மற்றக் குழந்தைகளின் படிப்புக்குச் செலவிடுங்கள்.''

''நீதான் உண்மையான சதாசாரியப்பா?'' என்று புண்ணியமூர்த்தி அவனைக் கண்களில் நீர் மல்கத் தழுவிக் கொண்டார்.



தேவி கீதம் இசைத்தெழு!

கோமுகி வேலன்

அற்புதத்திரு வாய்மலர்ந்துயர்
ஆன்மகீதம் இசைத்தெழு :
அகிலமெங்கணும் அமைதிஅன்புற
ஆன்மகீதம் இசைத்தெழு.

கற்பனைக்குள் வளர்ந்துலாவிடு
கனவுமாய்ந்து கலைந்திடக்
காட்சிமாயை கரைந்துவீழ்வுது
கருணைகீதம் இசைத்தெழு.

உற்பவித்திடு மோனவானிடை
உதயசோதி முளைத்தெழ
ஒன்றுயாவையும் ஒன்றெனும்உயர்
உண்மைவேதம் இசைத்தெழு.

சிற்பரத்தெழு மோனமன்றில்
சிலம்பொலித்து முழங்கிடச்
செல்விமாதவ வல்லிபாரத
தேவிகீதம் இசைத்தெழு!

வீறுகொண்டு முழங்கிடு
வென்றிகொண்டு முழங்கிடு ;
வெறுங்கனவில் மிதந்திடாது
விழித்தெழுந்து முழங்கிடு :

ஈறிலாத கனவிளைந்தெழ
இந்தமண்ணில் பிறந்தனை :
எண்ணமென்றிடு மலர்விரிந்திட
ஈடுகூட்டும் வினைப்பொழில்.

வேறுபட்டது மாறுபட்டது
விந்தையான மலர்ச்செடி ;
வேரிலாதது தண்டிலாதது
வித்தெழுந்தது பாழிலே.

தேறும்உள்ளொளி தென்றல்வீச்சில்
திரும்ப மீண்டும் ஒடுங்கிடும்
சித்தமென்ற அறிவிவானிடை
தேவிகீதம் இசைத்தெழு!

ஊனமின்றி நடந்திடு
ஊக்கமொன்றி நடந்திடு :
உண்மைகண்டு புறங்கொடாதே
உறுதிகொண்டு நடந்திடு :

ஞானமொன்றிடு வானுயர்த்தி
நடுக்கமின்றி நடந்திடு ;
ஞாலமெங்கணும் ஒளிபரப்பிடு
ஞாயிறென்ன நடந்திடு.

ஆனமாயை தொடர்க்கனவின்
அவத்தைவிட்டு விழித்தெழு ;
அல்லையேல்உயர் ஞானமென்ற
அருட்கனவில் உறங்கிடு.

தானவிழ்ந்திடு பணிபுரிந்து
தழைக்கும்அன்பு செழிக்கவே
தருமபேரி முழங்கி பாரதி,
தலைவி,கீதம் இசைத்தெழு!

குறிப்பு : சுவாமி விவேகானந்தரின் 'To The Awakened India' என்ற கவிதையைத் தழுவியது.

அயல்நாட்டு நாணயமாற்றுப் பிரச்சினைகளுக்கு உள்நாட்டுத் தலத்திலேயே உதவி பெறுங்கள்.



டெலிபோன்மூலம் கூப்பிடு தூரத்திலேதான் உள்ளார் ஸ்டேட் பாங்க் ஏஜெண்டு!

ஏற்றுமதி, இறக்குமதி சம்பந்தமான உங்கள் பிரச்சினைகளுக்கு உதவியளிக்கும் பொருட்டு, ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவுக்கும் அதன் துணைபங்குகளுக்கும் உள்நாட்டிலே 1700 கிளைகள் உண்டு. தவிர, அனேக கிளைகள் வெளிநாடுகளிலே.

அவை அளிக்கும் பணிகளில் சில :-

நாணயமாற்றுக் கட்டுப்பாட்டு நடைமுறைமை • அயல்நாட்டு உண்டியல்கள் • நாணய உறுதிக் கடிதங்கள் • உத்தரவாத, நஷ்ட ஈடுகள் • வியாபார முன்னேற்றுக்கு நாணயமாற்று • பணம் செலுத்தல்கள் • அயல்நாட்டுப் பயண ஒழுங்கமைப்போடு வசதி வழங்குகை • பாக்கிங் க்ரெடிட் வசதிகள் • உலகில் எங்கெங்கும் பரவியிருக்கும் நிருபர்கள் துணை.

ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா

எங்களது விசேஷ இன்பர்மேஷன் ஸர்வீஸ்

கீழ்க்கண்டவைபற்றி நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கு விடையளிக்கும் :

(அ) வெளிநாடுகளிலே வாணிபம் நடத்தும் வசதிகள், மற்றும் வாங்கல் வழங்கல்களுக்கு வாய்ப்புள்ளோரின் பெயர்கள்;

(ஆ) உலகின் எந்தப் பகுதியிலும் உள்ள வாணிபத் துறையினரின் நிதிநிலைமை பற்றியும், ஒப்பந்தக் கட்டுப்பாடுகளை அவர்களால் நிறைவேற்றும் ஆற்றல் பற்றியும் அறிக்கைகள்,

(இ) நீங்கள் வாணிபத் தொடர்பு கொள்ளும் நாட்டின் செலாவணியும், வர்த்தக நடைமுறைகளும்.

மேலும் அலுவலகங்களிலும் நிருபர்களும் உலகின் எந்த மூலையில் [illegible] [illegible] [illegible] நீங்கள் பெறுவதற்கான [illegible]

[illegible]



''நன்றாகப் படித்துப் பதில் எழுதத் தயாராக இருப்பவர்களுக்குக் கூடப் பரீட்சைகள் என்றால் கஷ்டமாகத்தான் இருக்கும். ஏனென்றால், மிகப் பெரிய முட்டாளும், சிறந்த புத்திசாலியாலும் பதிலளிக்கப் பட முடியாத கேள்விகளைக் கேட்கக் கூடும்.''

—சார்லெஸ் கோல்ட்டன்.

'சீன அணுகுண்டை வெடித்தது!' என்ற செய்தியைக் கேட்டபோது திடுக்கிட்டேன். ஆனால் இப்போது இதைப் பற்றிய பயமே போய்விட்டது.

''அது ஓர் அணுகுண்டா?'' என்று ஓர் இராணுவ நிபுணர் கூறுகிறார்.

''தாவாந்தரக் குண்டு'' என்று அமெரிக்கத் தூதர் செஸ்டர் பௌல்ஸ் பரிகசிக்கிறார்.


''ஐய! சுத்த மோட்டா தயாரிப்பு!'' என்று ஒரு தலைவர் அதைப் பற்றி ஏகத்தாளமாகப் பேசினார்: ''அதில் யுரேனியம் 235ஆல் தயாரிக்கப்பட்டதல்ல. கேவலம் புளுட்டோனியத்தை உபயோகித்துத் தயாரிக்கப்பட்டது'' என்று ஒருவர் சிரிக்கிறார்.

''அப்படியே சீன அணுகுண்டு தயாரிப்பதில் வெற்றி பெற்றுவிட்டதென்று வைத்துக்கொள்வோம். அது குண்டை எப்படித் தூக்கிக் கொண்டு போய் எதிரி தேசங்களின் மீது போடுகிறதாம்? அதனிடம் சின்னச் சின்னப் பழைய கால விமானங்கள்தானே இருக்கின்றன'' என்று ஒரு யுத்த நிபுணர் கூறுகிறார்.

இதையெல்லாம் கேட்கும்போது தைரியம் ஏற்படுகிறது. ஆனால் ஒரு விஷயம். ஆபத்து உணர்ச்சி என்பது ஆபத்து நிகழவிருக்கும் இடத்தைப் பொறுத்து ஏற்படுவது.

'கியூபாவில் ஒரு விமானம் விழுந்து நூறு பேர் இறந்தனர்' என நாம் செய்தியை மேலெழுந்தவாரியாகப் படிக்கிறோம். 'டெல்லியில் விமானம் நொறுங்கி இருபது பேர் மரணம்' என்றால் கவலையுடனும், சிரத்தையுடனும் படிக்கிறோம். 'மீனம்பாக்கத்தில் விழவிருந்தது' என்று செய்தி இருந்தால் போதும். அதைப் பற்றி விவரமாக ஒரு முறைக்கு இரு முறை படிக்கிறோம்.

சீனக் குண்டைப் பற்றிச் சீனாவிலிருந்து தொலைவில் உள்ள அமெரிக்கர்களும், ஐரோப்பியர்களும் மேற்கண்ட முறையில் அபிப்பிராயம் சொல்லிக்கொண்டிருக்கலாம். ஆனால் சீனாவுக்குப் பக்கத்து வீட்டில் இருக்கும் நாம் அவர்களைப்போல் கவலையற்றிருக்க முடியாது. சீனர் அணுகுண்டு மோட்டாவாகத் தயாரித்தது போலவே அதை மோட்டாத்தனமாய் இந்தியா மீதுபோட முயற்சி செய்யலாமல்லவா? குண்டை இமயமலையில் வைத்து அதன் சாரலில் கூட



அவர்கள் உருட்டி விட்டு விடலாமே!

ஃ ஃ ஃ

இங்கிலாந்தில் புதிதா ஏற்பட்டுள்ள தொழி கட்சி அரசாங்க 'தொழில் விஞ்ஞான இலாகா' என்று புதி இலாகா ஏற்படுத்தி யிரு கிறது. இதற்கு மந்திரி நி மனமும் புதுமையான. தான். சம்பந்தப்பட்ட மந்திரி ஸ்ரீ ஸி.பி.ஸ்நோ ஒரு விஞ்ஞான அறிவுள்ளவர் மட்டுமல்ல புகழ் பெற்ற நாவலாசிரியருங்கூட. 'ஒளியு இருளும்', 'நம்பிக்கைக் காலம்', 'யஜமானர்கள்', 'புதிய மனிதர்கள்', 'பணக்கார மனச்சாட்சி' என்ற பல நாவல்கள் எழு யிருக்கிறார். அவை தனித்தனி நாவல்க போல் அமைந்திருந்தாலும் சில குறிப்பிட்ட நபர்களே திரும்ப அவற்றில் வருகிறார்கள் அவர்களது வாழ்க்கையின் மூலம் தற்கால நாகரிக சமூகத்தைச் சித்திரித்துக் காட்டு கிறார். மிக மிக எளிய நடையில் அழகா எடுத்துக் காட்டப்பட்டுள்ள தற்கால வாழ் கையைப் பற்றிப் படித்துக் கொண்டு போகும்போது நாமே அவற்றை எழுதி யிருப்போமோ என்றுகூடத் தோன்றும். நமது தேசத்தில் மந்திரி பதவி ஏற்றவர்கள் சிலர் சிறுகதைகள், ஹாஸ்யக் கட்டுரைகள், நாடகங்கள், பிரயாணக் கட்டுரைகள் எழுதியிருக்கிறார்கள். நமது தேசத்தில் மந்திரியாயிருந்த ஒரே நாவலாசிரியர் ஸ்ரீ கே. எம். முன்ஷி அவர்கள். அவர் மந்திரியாக இருந்தபோது எப்படி நடந்துகொண்டார் என்பதைக் கவனிக்கும்போது நாவலாசிரியரான ஸ்ரீ ஸி. பி. ஸ்நோவும், கனவானாகவும் கமுகத் தன்மையுடனும் நடந்து கொள்வாரென்று எண்ணத் தோன்றுகிறது.

ஃ ஃ ஃ

ஒரு வியாதியஸ்தர் ''எனது வைத்தியர்கள்'' என்ற தலைப்புடன் எழுதியுள்ள புத்தகத்தில் ஒரு ருசிகரமான சம்பவத்தைப் பற்றிக் கூறுகிறார்.:

எனக்கு இருதயம் பலவீனமாக இருக்கிறது என்று எனது குடும்ப வைத்தியர் சொன்னார். இந்த இருதய வியாதியில் ஒரு வேடிக்கை. அதுபாட்டில் இருந்து கொண்டிருக்கும். நாம் பாட்டில் எல்லாக் காரியங்களையும் செய்து கொண்டிருப்போம். திடீரென்று ஒரு நாள் அது நமக்கு 'நோட்டீஸ்' கொடுக்காமலே நின்று விடும்.

''இந்தப் பயம் எனக்கு உள்ளூற இருந்துகொண்டு தூக்கமில்லாமல் செய்து வந்தது. ஓர் இருதய வியாதி நிபுணரிடம் சென்றேன். அவர் இரண்டு மூன்று நாட்கள் தொடர்ந்து என் இரு

யத்தைச் சோதனை செய்தார். என் தின
ிப் பழக்க வழக்கங்களைப் பற்றி விசாரித்
ார். பிறகு, ''நீங்கள் 'ஷவர் பாத்' எடுத்
ுக் கொள்வதுண்டா?'' என்று கேட்டார்.
இல்லை' என்றேன்:

''அது உடம்புக்கு நல்லது. வாரத்துக்கு
ஒரு முறை, இரண்டு முறை அப்படி ஸ்நா
னம் செய்து வாருங்கள்'' என்றார்.

பிறகு எனக்குத் தைரியமூட்டி அனுப்பி
விட்டார். மூன்று மாதங்கள் கழித்து மறுபடி
யும் அவரிடம் சென்றேன். அவர் என்னைச்
சோதனை செய்து பார்த்துவிட்டு 'இனிமேல்
ஆபத்தில்லை' என்று கூறினார். பிறகு 'தாங்கள்
நான் சொன்னபடி 'ஷவர்பாத்' ஸ்நானம்
செய்துவந்தீர்களா?' என்று விசாரித்தார்.

''தாங்கள் சொன்னபடி செய்தேன்.''

டாக்டர் சிரித்துக் கொண்டே சொன்னார்:
''தங்கள் இருதயத்தை முதன் முதல்
சோதனை செய்த போதே அது சரியாக இருக்
கிறதென்று எனக்கு நிச்சயமாகத் தெரியும்.
அது பலவீனமுள்ளதா யிருந்திருந்தால்,
தாங்கள் முதல் முறை 'ஷவர் பாத்'
செய்யும்போது உயிர் துறந்திருப்பீர்கள்!''

ஃ ஃ ஃ

பிரபஞ்சத்துக்கு யார் தலைவராக இருப்பது என்பதைப் பற்றித் தேர்தல் நடக்கிறது என்று வைத்துக் கொள்வோம். அதற்குப் பரமசிவனும், விஷ்ணு பகவானும் போட்டி யிட்டு நிற்கிறார்கள் என்றும் கற்பனை செய்து கொள்வோம். தற்கால உலக முறைப்படி அவர்கள் பிரசாரம் செய்தால் அது கிட்டத் தட்ட பின்வருமாறு இருக்கும்:

''இந்த விஷ்ணு பகவான் வெண்ணெய் திருடித் தலையில் மத்தால் அடிபட்டார். அவருக்கா உங்க வோட்டு?'' என்பார் சிவன்.

''பிட்டுக்கு ஆசைப்பட்டுப் பிரம்பாலடி பட்டவர் இந்தச் சிவபெருமான். இவருக்கா உங்கள் வோட்டு?'' என்பார் விஷ்ணு.

இப்படி இவர்கள் ஒருவரை யொருவர் ஏசிக் கொண்டே போகும் பக்தி ரஸப் பாடல்கள் இருக்கின்றன.

தலைவர் பதவிக்குப் போட்டியிட்டு நிற்பவர்கள் கொள்கைகளைப் பற்றிப் பேசுவதை விட்டு நபரின் குண இழுக்குகளைப் பற்றிக் கூறுவது சர்வ சாதாரணமாகி வருகிறது.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலுக்கு நிற்கும் கோல்ட் வாட்டர், தமக்குப் போட்டியாக நிற்கும் லிண்டன் ஜான்ஸன், சட்ட வரம்பை மீறி அறுபது மைல் வேகத்தில் மோட்டாரை ஓட்டிச் சென்றார் என்பதை எடுத்துக் காட்டத் திரைப்படங்கள் காண்பிக்கிறார். ஜான்ஸனின் உதவி அதிகாரி ஒருவர் ஒரு பெண் விஷயமாகத் தண்டனை அடைந்ததைப் பற்றிப் பிரசாரம் செய்கிறார்.

பாகிஸ்தானிலோ அயூப்கான் தமக்குப் போட்டியாய் நிற்பவர்களின் குறைகளை எடுத்துச் சொல்லும் விதமே தனி.

சில உதாரணங்கள்:

''சௌதரி முகம்மது அலி, ஓர் அறைக்குள் தான் ஒளிந்து கொள்ள வளை தேடப் பாடு பட்டுக் கொண்டிருக்கும் ஓர் எலி.



''எங்க ஓட்டல்லே இந்தப் பேப்பர் மசாலாவெல்லாம் மீந்துபோச்சு. இலே என்ன விலைக்கு எடுத்துக்கறேப்பா!''

''க்வாஜா நாஜிமுதீன், பிரதம மந்திரியா யிருந்தபோது அவரை அவரது காரியாலய அறைக்குள் தேடிக் கண்டுபிடிப்பது சிரமம். ஏனென்றால், அவர் பேப்பர்க் கட்டுகளின் நடுவில் இருப்பார். அவருடன் முக்கியமான விஷயங்களைப் பற்றிப் பேச ஆரம்பித்தால் அப்படியே தூங்கிப் போய் விடுவார்.''

பாகிஸ்தான் ஜனாதிபதி இத்துடன் நிறுத்திக் கொண்டார்: நாஜிமுதீன் கட்டை குட்டை யாய், பருமனாய் இருப்பார் என்று பரிகசிக்க ஆரம்பிக்கவில்லை, பாபம்! அந்த நிஜா முதீன் சென்ற வாரம் திடீரென்று மாரடைப்பால் இறந்து விட்டார். இந்த ஏச்சுப் பேச்சின் கொடுமையை அவரால் தாங்க முடியவில்லை போலும்!

ஃ ஃ ஃ

அரிசியும், சர்க்கரையும் மட்டும் 'நியாய விலை'க்குக் கொடுத்து என்ன பிரயோசனம்? நல்லெண்ணெய் வீசை விலை சுமார் நாலு ரூபாய். புளி, மிளகாய் எல்லாமே விலை அதிகம். ஸ்டவ் அடுப்பு மூட்டுவதற்கான மண்ணெண்ணெய் விலையை அரசாங்கமே அதிகப்படுத்தி விட்டது. கறிகாய்களைப் பற்றியோ சொல்ல வேண்டியதில்லை. எல்லாச் சாமான்களையுமே சர்க்காரும், காரியாலயங் களும் விற்க ஏற்பாடு செய்வதற்கில்லை. இந்தச் சங்கடங்கள் தீர ஒரு யோசனை!

அரசாங்கம் 'ரெடிமேட் உணவு இலாகா' என்று ஒன்று ஆரம்பித்து, அதற்கு அமெரிக்கா வுக்குச் சென்று மூன்று வருடங்கள் விமான நிர்மாணப் பயிற்சி பெற்று வந்த ஒருவரைக் கண்ட்ரோலராக நியமிக்கலாம். அந்த இலாகா 'பட்டைச் சாதம்' தயாரித்து விற்றால் எல்லாருக்கும் பல விதத்தில் சௌகரியமாக இருக்கும்.

— என். ஆர்.



கதாபாத்திரங்கள்

பேராசிரியர் குப்புராவ்
அவர் மனைவி யமுனாபாய்
மகள் சக்குபாய்
பேராசிரியர் பீமராவ்
அவர் மகன் பிந்துமாதவ ராவ்
கருங்குரங்கும் குரங்காட்டியும்

காட்சி 1

யமுனாபாய்: தட்டிலிருக்கும் உப்புமா அவலாக ஆறிவிட்டதே. நீங்கள் ஏன் இன்னும் சாப்பிடவில்லை? உடம்பு கிடம்பு சரியில்லையா?

குப்புராவ்: ரோமாபுரி தீப்பிடித்து எரிந்து கொண்டிருந்த போது எவனோ பிடில் வாசித்தானாம். ஆயிரம் பாடுபட்டு நான் செய்த ஆராய்ச்சி அத்தனையும் நாசமாகிக் கொண்டிருக்கையில் உப்புமா நினைப்புத்தானா எனக்கு?

யமுனா: உங்க ஆராய்ச்சியை யா என்ன பண்ணிணு? அதான் குடும் நினைவு கொஞ்சம்கூட இல்லாம கதவைச் சாத்திண்டு இராப்பக எலியோடேயும், பெருச்சா யோடேயும், பன்றியோடேயும் ம யுத்தம் பண்ணிண்டிருக்கேளே அந்த வாயில்லா ஜீவன்களுக்கு கண்ட கண்ட மருந்தை யெல்லா குத்தி ஏற்றிக் கொலை பண்றது தானே உங்கள் ஆராய்ச்சி? ஒரொ சமயம் அதுகள் போடற கூச்ச மனசை என்னமோ பண்றது மாடு சாபமும் ஆடு சாபமும் பொ லாததுன்னு நான் படிச்சுப் படிச்சு சொல்லியும் என்ன பயன்?

குப்பு: இதோ பார் யமுனா, ஒரு பிரபல விஞ்ஞானியின் மனை யாகவா பேசறாய்? கறவை வ றின மாட்டை மீண்டும் கறக் வைக்க முடியும்னு நான் நிரூபி ததை உலகமெல்லாம் மெச்சறது.. நீதான் இகழ்ந்து பேசறே.

யமுனா: அந்த மாடு கறக்கவா செய்தது? கதறவல்லவா செய்தது உங்கள் ஆராய்ச்சி முடிஞ்சு சொட் டுப் பால் வருவதற்குள் அந்த மாட்டின் உயிர் ஈரேழு லோகத் துக்கும் போய்விட்டு வந்துவிட்டதே... அது கிடக் கட்டும், உப்புமாவை ஏன் சாப்பிடவில்லை? நிறைய முந்திரிப் பருப்புப் போட்டிருக்கிறேனே.

குப்பு: என் வயிற்றெரிச்சலை ஏன் அனாவசியமாகக் கொட்டிக் கொள்கிறாய்? நான் பண்ணும் ஆராய்ச்சிகளை எத்தனை இரகசியமாக வைத்துக் கொண்டாலும் எப்படியோ கண்டுபிடித்து விடுகிறான் பக்கத்து வீட்டுப் பீமராயன். அது மட்டுமா? என் ஆராய்ச்சியின் விளைவுகளை நான் வெளியிடுவதற்குள் அவன் வெளியிட்டு விஞ்ஞான உலகம் அளிக்கும் பரிசுகளைத் தட்டிக் கொண்டுபோய் விடுகிறான்.

யமுனா: அவருக்கு எப்பவுமே கொஞ்சம் மோப்ப உணர்ச்சி அதிகம். அதற்கு நாம் என்ன பண்ண முடியும்? நான் இங்கே மைசூர்பாகு பண்ணினால்கூட அவர் அங்கே கண்டுபிடித்துத் தம் மனைவியிடமும் பண்ணச் சொல்கிறார்.... அவர் மூக்கு நீளம் அப்படி.

குப்பு: போன மாதம் தவளைக்கு இளமை திரும்பு வதற்காக ஒரு வில்லை தயாரித்துக் கொண்டிருந்தேன். எப்படியோ மோப்பம் பிடித்துவிட்டான் ராயன். அது மட்டுமா? உடனே வில்லை தயாரித்து அரை டஜன் கிழத் தவளைகளுக்கு இளமையூட்டி அமெரிக்காவிலிருக்கும் விஞ்ஞான சங்கத்துக்கு அனுப்பிவிட்டான். அடித்தது ஐயாயிரம் டாலர். எனக்குக் கிடைக்க வேண்டிய பரிசு அவனுக்குப் போய்ச் சேர்ந்தது.

யமுனா: போதுமே இந்தப் பைத்தியக்கார ஆராய்ச்சி. தவளைகளுக்கு இளமை திரும்பினால் என்ன, திரும்பாவிட்டால் என்ன?... நாளைக்கே மனுஷனுக்கு இளமை திரும்பற ஒரு வில்லை கண்டுபிடிப்பேள்... அப்புறம்... அப்புறம் என்னையெல்லாம் உங்கள் கண்ணுக்குப் பிடிக்குமா என்ன?

குப்பு: அசடு! ஏன் கவலைப்படுகிறாய்? நான் இளமை ஆராய்ச்சியைக் கைவிட்டு எத்தனையோ நாட்களாகி விட்டன. இப்பொழுது மிகப் புரட்சிகரமான ஒரு பொருளைப் பற்றி ஆராய்ச்சி செய்யப் போகிறேன். (மெதுவாக) இங்கே பக்கத்தில் வா. பீமராயன்

குரங்கு பிடிக்கப் போய்...!

ஜி.எஸ்.பாலகிருஷ்ணன்



எங்கேயாவது கவர் ஓரமாக நின்று ஒட்டுக் கேட்டுக் கொண்டு இருந்தாலும் இருப்பான்.... காதில் இரகசியமாகச் சொல்லுகிறேன். (முணுமுணுக்கிறார்).

யமுனா: என்னது? கருங் குரங்குகளுக்குப் பிரசவ வேதனை குறைவதற்கு ஒரு மருந்தா? உங்கள் மூளை ஏன் இப்படி வேலை செய்கிறது?

குப்பு: இரையாதேடி. ஒரு வார்த்தை காதில் விழுந்தால்கூட பீமராயன் பிடித்துக் கொண்டுவிடுவான். ஒரு கருங்குரங்குக்குப் பிரசவமே பண்ணி, குட்டியை அமெரிக்காவுக்கு அனுப்பிப் பெரிய பெரிய பரிசுகளை யெல்லாம் அடித்துக் கொண்டு போய் விடுவான். பாவி. பேச்சு வாக்கிலே கூட அந்த ராயன் மனைவியிடம் 'கருங்குரங்கு' என்ற வார்த்தையை மூச்சு விட்டு விடாதே.

[குரங்காட்டி ஒருவன் ஆள் உயரம் கருங் குரங்குடன் உள்ளே நுழைகிறான்.]

யமுனா: இதென்ன கூத்து? கருங்குரங்கோடே ஒரு மீசைக்காரன் வீட்டுக்குள்ளே நுழையறான்? ஐயோ! எனக்குப் பயமாக இருக்கு.

குப்பு: யார் அது? வடிவேலுவா? வாப்பா. உன்னைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்...குரங்கையும் கையோடேயே கொண்டு வந்து விட்டாயா? பலே பேஷ்!

யமுனா: இதோ பாருங்கோ, அவனைச் சீக்கிரம் இங்கிருந்து போகச் சொல்லுங்கோ. வீட்டுக்குள்ளே இந்தக் குரங்கை நான் ஒரு நாளும் அனுமதிக்க மாட்டேன். இது என்ன வீடா, மிருகக் காட்சி சாலையா?

குப்பு: என்னப்பா வடிவேலு, இது நல்ல ஜாதிக் குரங்கா?

குரங்காட்டி: என்ன சாமி அப்படிக் கேட்கிறே? மோசமான குரங்கை உனக்குக் கொண்டாந்து தருவேனா? இதோ பார்... எவ்வளவு இடத்தில் பிராண்டியிருக்குன்னு! இது அசல் காட்டு ஜாதிங்க. மலையாளத்திலிருக்கும் ஒரு ஆயுர்வேத வைத்தியர் கருங் குரங்கு ரசாயனம் பண்ணுவதற்காக இதை ஆயிரம் ரூபாய்க்குக் கேட்டாருங்க....

குப்பு: தந்துவிடாதே! நான் தருகிறேன் இரண்டாயிரம்!

யமுனா: அட பாண்டுரங்கா! இந்தக் குரங்குக்கா இரண்டாயிரம் ரூபாய்? குழந்தை சக்குபாய் கல்யாணத்துக்கு நிற்கிறாள் என்பது உங்களுக்கு மறந்து விட்டதா?

குப்பு: நீ கொஞ்சம் சும்மா இரு, யமுனா. குரங்கைக் கொண்டு வரும்போது யாரும் பார்க்கலியே!

குரங்காட்டி: பார்க்க விடுவேனுங்களா? அதான் படிச்சுப் படிச்சு 'இரகசியம்'னு சொல்லியிருக்கீங்களே. துணியைப் போட்டு மூடியல்லவா கொண்டாந்தேன்? இருந்தும் பக்கத்து வீட்டுப் பீமராவ் 'மூட்டைக்குள்ளே என்ன?'ன்னு கேட்டாருங்க. அடிச்சேன் பாருங்க 'யானைக் குட்டி'ன்னு அவர் அதை அப்படியே நம்பிவிட்டார்.

குப்பு: பேஷ்! பேஷ்! பிரமாதம்! உன் வாய்க்குச் சர்க்கரைதான் போடவேண்டும். பீமராயன் நான் யானைக் குட்டியை வச்சுண்டு ஏதோ ஆராய்ச்சி பண்ணறதாக நினைச்சுண்டு தானும் அதுபோல் செய்வான். யானைக் குட்டி வாங்கற பணம் அவனுக்கு நஷ்டமாகும்... வடிவேலு! நான் குரங்கு வாங்கியிருக்கிற சமாசாரத்தை ஒரு பயல் கிட்டேயும் மூச்சு விட்டு விடாதே!

குரங்காட்டி: சொல்லுவேனா?... இந்தக் குரங்கோடே மாமியார் கூட அதே காட்டில் இருக்குங்க. அதையும் இரகசியமாகப் பிடிச்சு வரட்டுங்களா?

[சக்கு பிரவேசம்]

சக்குபாய்: வேண்டாம்! மாமியாருக்கும் நாட்டுப் பெண்ணுக்கும் ஒத்துப் போகாது.

குப்பு: சக்கு... நீ எங்கே வந்தாய்?

சக்கு: குரங்கு பார்க்க வந்தேன் அப்பா... பக்கத்து வீட்டுப் பீமராவ் பிள்ளை பிந்து மாதவராவுக்குக் குரங்குன்னு ஒரே உசிர் அப்பா... அதிலும் கருங்குரங்குன்னு பைத்தியம்!

குப்பு: போச்சே! போச்சே!... இதோ பார் சக்கு... நீ சமர்த்தோல்லியோ... இந்தக் குரங்கு வாங்கியிருக்கிற விஷயத்தை ஒருத்தர் கிட்டேயும் சொல்லாதேம்மா. அப்பாவுக்கு 'நோபல்' பரிசு கிடைக்கணுமோல்லியோ?

சக்கு: பிந்துவுக்கு மட்டும் சொல்றேன் அப்பா.

யமுனா: ஓடிப்போய்ச் சொல்லுடி குழந்தை. அப்படியாவது இந்தச் சனியன் வீட்டை விட்டுத் தொலையட்டும்.

குப்பு: சக்கு... நீ அம்மா சொல்றதைக் கேட்காதே சக்கு... ஆராய்ச்சி முடிஞ்ச உடனே இந்தக் குரங்கை உன்னிடம் ஒப்படைத்து விடுகிறேன். நீ பிந்துவுக்கே இதைத் தந்துவிடலாம்.

சக்கு: நிஜமாகவா அப்பா?

குப்பு: சத்தியமாக.

யமுனா: நீ அப்பா சொல்றதை நம்பறயா சக்கு? இவர் ஆராய்ச்சி பண்ணி முடியறதுக்குள்ளே குரங்கு சொர்க்க லோகம் போய்ச் சேர்ந்திருக்கும்.

குரங்காட்டி: இது செத்துப் போனா இதன் ஆத்தாளைப் பிடிக்க வரேனுங்க. அது ரொம்ப நல்ல ஜாதி. இதோ பாருங்க... கழுத்துப் பக்கத்திலே என்னமா பிராண்டியிருக்கு!

யமுனா: குரங்கும் சனியனும்!... நான் இங்கிருந்து தொலையறேன்... இந்தாப்பா குரங்காட்டி, குரங்கைக் கொஞ்சம் புடிச்சுக்கோ... நான் உள்ளே போறேன்...

[போகிறாள்]

காட்சி 2

குப்பு: ஐயையோ! ஐயையோ!

[யமுனா ஓடி வருகிறாள்.]

யமுனா: என்ன கூச்சல்? அந்தக் குரங்கு பிராண்டித் தொலைத்து விட்டதா? எனக்கு அப்பொழுதே தெரியும், இந்த மாதிரி ஏதாவது ஆகும்னு. சக்கு! சீக்கிரம் டிஞ்சர் பாட்டிலை எடுத்துண்டு வா.

[சக்கு டிஞ்சர் பாட்டிலுடன் வேகமாக ஓடி வருகிறாள்.]

சக்கு: எங்கேப்பா குரங்கு கடிச்சுது? முன்னே பன்றி கடித்ததே, அதே கையிலா?

குப்பு: ஐயையோ! ஐயையோ! என் உயிரே போச்சே!

யமுனா: எங்கே கடிச்சுதுன்னு சொன்னாத்தானே.... சக்கு, சீக்கிரம் டாக்டருக்கு 'போன்' பண்ணு. அந்த இழவு குரங்கு நன்றாகக் கடித்து விட்டது போலிருக்கு. ஆமாம், அந்தச் சனியன் எங்கே? பிராண்டி விட்டுப் பறந்து விட்டதா?

குப்பு: என்னை ஒண்ணும் குரங்கு கடிக்கலேடி....

யமுனா: பின்னே, நீங்க குரங்கைக் கடிச்சீங்களா? பல்லுக் கில்லு பெயர்ந்துவிட்டதா? வாயை என்னமோ மாதிரி வச்சுண்டு இருக்கேளே... பல்லிலே பலமாகப் பட்டிருக்கு போலிருக்கு. அட ஈசுவரா, இந்த ஆராய்ச்சியையெல்லாம் விட்டுத் தொலைக்கக் கூடாதா? வயசுக் காலத்திலே ஏன் இந்த வம்பு?

குப்பு: இதோ பார் யமுனா... என்னைக் குரங்கும் கடிக்கலே, நான் குரங்கையும் கடிக்கலே....

சக்கு: அப்பாவும் குரங்குமாச் சேர்ந்து பக்கத்து வீட்டுப் பீமராவைக் கடித்திருப்பா. என்ன, நான் சொல்வது சரிதானே?

குப்பு: சக்கு, நீ கொஞ்சம் சும்மா இரு...

யமுனா: எதுக்காக உசிர் போன மாதிரி கத்தினேள்?

குப்பு: குரங்கையும் காணோம். என் ஆராய்ச்சிக் குறிப்புக்களையும் காணோம். இனிமேல் நான் என்ன செய்வேன்?

சக்கு: ப்பூ! அந்தக் குரங்கு போனதற்குத் தானா இவ்வளவு கூச்சல்? அது போனால் போகட்டுமே, அதான் குரங்காட்டி சொன்னானே, இதன் மாமியாரைப் பிடித்து வருவதாக! எனக்குக் கூட இந்தக் குரங்கை அவ்வளவாகப் பிடிக்கவில்லை. 'டார்ஜான்' சினிமாவிலே வர்ற குரங்காட்டம் கொட்டக் கொட்ட விழிக்க வேண்டாமா?

குப்பு: சக்கு! நீ இங்கிருந்து போ...எனக்கு ஆத்திரம் ஆத்திரமாக வருகிறது.

யமுனா: எதுக்காக இப்படி அனாவசியமாக அலட்டிக்கிறேள்? இன்னும் கொஞ்ச நாழியில் அந்தக் குரங்கு தானாகத் திரும்பி வரும். பாலும், பழமும் தந்து ராஜோபசாரம் பண்ணும் இடத்துக்கு அது மீண்டும் வராமலிருக்குமா என்ன?

குப்பு: என்னுடைய ஆராய்ச்சிக் குறிப்புகளையும் எடுத்துக்கொண்டல்லவா அது பீமராயன் வீட்டுப் பக்கம் தாவியிருக்கிறது! இந்நேரம் அவன் அத்தனை குறிப்புகளையும் படித்துத் தொலைத்திருப்பானே.

யமுனா: ஆமாம், படித்துத் தொலைத்திருப்பார்... ஏன் குரங்குக்கு வேதனை இல்லாமல் குட்டி பிறக்கச் செய்து அமெரிக்காவுக்கு விசேஷ விமானத்திலே அனுப்பியிருப்பார்.... உங்களுக்கு மூளை போறதே.

குப்பு: உனக்கு என்ன தெரியும் விஞ்ஞான உலகத்தைப் பற்றி? நான் தபாலில் என் ஆராய்ச்சி முடிவுகளை அனுப்புவதற்குள் வேறு எவனாவது தந்தியில் அனுப்பிவிடுவான்.

யமுனா: உங்களுக்கு, பாவம்! எத்தனை தடவை 'நோபல்' பரிசு கை வரைக்கும் வந்து வாய்க்கு எட்டாமல் போயிருக்கு!... (மேலே பார்த்து) அதோ உட்கார்ந்திருக்கிறதே உங்கள் தடிக் குரங்கு.

குப்பு: பீமராயன் வீட்டுக்குள்ளே யிருந்து தான் வர்றது. நல்ல வேளை... என் ஆராய்ச்சிக் குறிப்புக்கள் அதன் கையிலே அப்படியே இருக்கு... பிடி பிடி அந்தக் குரங்கை.

[எல்லோருமாகக் குரங்கை அங்குமிங்குமாகத் துரத்துகிறார்கள். வெகு நேரம் ஏமாற்றின பின் காகிதத்தை விட்டெறிகிறது குரங்கு.]

குப்பு: (வாங்கிப் படித்து) ஐயையோ! இது என் ஆராய்ச்சிக் குறிப்பில்லையே! ஒரு வேளை பீமராயன் பண்ணும் ஆராய்ச்சி சம்பந்தமான கடுதாசி போலும் (படிக்கிறார்) ''என் உள்ளத்தையும் உணர்வையும் ஒருங்கே கொள்ளை கொண்ட சக்கு! நீ ஒரு கனவுப் பெண்... சிற்பி செதுக்காத ஓவியம்... கவிஞன் பாடாத காவியம்... உன் காதலன் பீந்து'' — இதென்ன கூத்து! அப்பன் என் ஆராய்ச்சியைத் திருடறான்... பிள்ளை என் பெண்ணின் உள்ளத்தைத் திருடறான்.... விடமாட்டேன் இந்த ராஸ்கல்களை!

சக்கு: அப்பா, பீந்துவை ஒன்றும் சொல்லாதீர்கள் அப்பா... எனக்கு அவரிடம்... நான்தான்....

குப்பு: அப்பவே சொன்னேனே பெண்ணை அடிக்கடி சினிமாவுக்கு அனுப்பாதேன்னு... கேட்டியா? இப்ப என்ன சொல்றாய்?

யமுனா: சொல்றதுக்கு என்ன இருக்கு? சீக்கிரமா ஒரு முகூர்த்தம் பார்த்து அந்தப் பிள்ளையாண்டானிடம் மூணு முடிக்கப் போடச் சொல்லுங்கோ. ராஜாவாட்டம்



அகில உலக
அகில உலக பாங்கிங்
தேர்ந்த அனுபவமுள்ள கனரா பாங்க், ஏற்றுமதியாளர்களுக்கும் இறக்குமதியாளர்களுக்கும் அகில உலக பாங்கிங் சேவையில் மிக நேர்த்தியான சேவையை மனமுவந்தளிக்கிறது.
உலகெங்கும் பரவியுள்ள தனது அயல்நாட்டு பிரதிநிதிகள் மூலமும், கால தாமதத்தைக் குறைக்கும் "டெலக்ஸ் சர்வீஸ்" மூலமும், ஒவ்வொரு வாடிக்கைக்காரருக்கும் அவரவரின் அகில உலக பாங்கிங் தேவைகளை பிரத்தியேக கவனத்துடன் பூர்த்தி செய்கிறது.
விவரங்களுக்கு, காரியசித்திக்கு—பயனடைவதற்கு—அருகிலுள்ள கனரா பாங்க் கிளையை—உங்களுக்கு அருகில் ஒன்று இருக்கிறது—அணுகுங்கள்.
உலகெங்கும் பிரதிநிதிகள்
பாங்க் மட்டுமல்ல
பாங்கை விட
மேலான பாங்க்
பாங்கின் நிர்வாக அலுவலகக் கட்டடம்
கனரா பாங்க் லிமிடெட்
(ஸ்தாபிதம் 1906)
பதிவுக் காரியாலயம் : மங்களூர்
நிர்வாகக் காரியாலயம் : பெங்களூர்
இந்தியாவில் 235 கிளைகளுக்குமேல் உள்ளன
CB—113 / Tam.

இருக்கான் பீந்து. அவனுக்கு என்ன குறைச்சல்?

குப்பு: என்ன குறைச்சலா? அவன் ஆராய்ச்சி உலகில் என் எதிரியாக விளங்கும் பீமராயனின் புத்திர பாக்கியம்.

யமுனா: ஆராய்ச்சியும் மண்ணாங்கட்டியும்! மூக்கும் முழியுமாக இருக்கிற ஒரு பிள்ளைக்குப் பெண்ணைக் கொடுக்கக் கசக்கிறதோ?

[பீமராவும் பீந்து மாதவ ராவும் அந்தச் சமயத்தில் நுழைகிறார்கள்]

பீமராவ்: பேஷ்! பேஷ்! அப்படிச் சொல்லுங்கோ! எங்க பீந்துவுக்கு உங்க பெண் சக்குவிடம் அலாதியான பிரியம். எனக்குக் கூட இந்தத் தொடர்பிலே ஒரே மகிழ்ச்சி. நீங்கதான் சம்மதிச்சுக் குழந்தைகளை ஆசிர்வதிக்கணும்.

குப்பு: முடியாது! முடியவே முடியாது! என் ஆராய்ச்சிக் குறிப்புக்கள் அத்தனையும் இழந்து நான் தவித்துக் கொண்டிருக்கையில் கலியாணப் பேச்சா?

பீமராவ்: இதோ இருக்கின்றன உங்கள் ஆராய்ச்சிக் குறிப்புக்கள். நான் திறந்து பார்க்கக் கூட இல்லே. குரங்கு என் மேஜை மீது விட்டெறிந்தவுடன் பொறுக்கி எடுத்துக்கொண்டேன். நிச்சயம் படித்துப் பார்க்கவில்லே. முன்னே ஒரு தடவை நாம ரெண்டு பேரும் சந்தர்ப்பக் கோளாறு காரணமாக ஒரே விஷயத்தை ஆராய்ச்சி பண்ணப் போய் அனுவசியமாக மனஸ்தாபம் ஏற்பட்டதுபோல் மீண்டும் ஏற்படக் கூடாது என்பதுதான் என் எண்ணம். தவிர, அந்தக் காலத்திலே என் குறுக்கீட்டால் உங்களுக்குக் கிடைக்காமல் எனக்குக் கிடைத்த பரிசுத் தொகையாகிய ஐயாயிரம் டாலரை உங்களுக்கு எதிர் ஜாமீனாக அளிக்கிறேன்.

யமுனா: என்னது, எதிர்ஜாமீனா? பிள்ளை வீட்டிலிருந்தா?

பீமராவ்: ஏன், சக்குவைப் போன்ற அழகான பெண்ணை நாட்டுப் பெண்ணாக அடைய எதைத்தான் தியாகம் செய்யக் கூடாது?

குப்புராவ்: பதிலுக்கு உங்கள் பிள்ளைக்கு நான் என்ன செய்வேன்? என்னிடமிருந்த சொத்து அத்தனையும் ஆராய்ச்சியில் கரைந்து விட்டதே!

சக்கு: கவலைப்படாதீர்கள் அப்பா! உங்கள் கருங்குரங்கை ஆராய்ச்சி முடிந்தவுடன் மாப்பிள்ளைக்குத் தந்துவிடுங்கள்... அவருக்குக் குரங்கென்றால், கொள்ளை ஆசை!

யமுனா: சக்கு... வாயை மூடு. மாமனாருக்கு முன்னாடி இப்படித்தான் மரியாதை இல்லாமல் வாயடிப்பாளா? உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொண்ட பின் குரங்கைப் பற்றி என்ன மாப்பிள்ளைக்கு என்ன பைத்தியமா?

விசித்திர வழக்குகள்

கலிபோர்னியாவில் ஒரு துப்பாக்கிக் கம்பெனியின் மீது வழக்குப் போட்டிருக்கிறார் ஒருவர். அங்கே அவர் வாங்கிய துப்பாக்கி சுடவே வரவில்லையாம்! அவர் தம்மைத் தாமே சுட்டுக்கொள்ள வாங்கியதாம் அந்தத் துப்பாக்கி!

ஃ ஃ ஃ

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ஓர் அரசியல்வாதி தம் கட்சியின் மீது வழக்குத் தொடர்ந்திருக்கிறார். அந்தக் கட்சியின் அபேட்சகராக அவர் நின்று தேர்தலில் வெற்றி பெற்றதால் அவர் அலுப்புச் சலிப்பில்லாமல் நிறையப் பேரிடம் கைகுலுக்கும்படியாயிற்றாம். அதனால் அவர் கை சுளுக்கிக் கொண்டு விட்டதாம்! வழக்குத் தொடர்ந்ததற்குக் காரணம் அதுதானாம்!

ஃ ஃ ஃ

ஒரு சினிமாக் கம்பெனியின் மீது கலிபோர்னியாவைச் சேர்ந்த ஒருவர் 20,000 டாலர் கோரி வழக்குத் தொடர்ந்திருக்கிறார். அந்தச் சினிமாக் கம்பெனியின் சினிமா ஒன்றைப் பார்த்த பிறகு அதில் வரும் பயங்கரக் காட்சிகளைக் கண்டு அவருடைய இருதய நோய் அதிகமாகி ரொம்பவும் பலஹீனமாகிவிட்டதாம்.

ஃ ஃ ஃ

தம் மீசையை ஒரு பக்கம் கொஞ்சம் குறைத்து வெட்டி விட்டார் என்பதற்காக ஒரு க்ஷவரத் தொழிலாளியின்மீது வழக்குத் தொடர்ந்திருக்கிறார் ஒருவர் நியூயார்க்கில்.

கானடாவில் போலீஸ் மீது வழக்குப் போட்டிருக்கிறார் ஒருவர். அவர் குடித்திருக்கிறாரா இல்லையா என்பதைச் சோதனை செய்யப் போலீஸ் அவருடைய இரத்தத்தை எடுத்ததாம். அதைத் திருப்பித் தரவில்லை என்று போலீஸ்மீது வழக்குப் போட்டிருக்கிறார் அவர்.

ஃ ஃ ஃ

தம் மனைவியின் நடத்தையைப் பற்றித் துப்பறிய ஒருவரை நியமித்தார் மின்னேஸ்டாவில் ஒரு மனிதர். அவர் இப்போது அந்தத் துப்பறிபவரின்மீது வழக்குப் போட்டிருக்கிறார். காரணம் அந்தத் துப்பறிபவரே அவர் மனைவியிடம் நடந்துகொண்ட முறை கேடானதுதானாம்!

ஃ ஃ ஃ

சில்லி நகரத்து மேயர் வானிலை ஆராய்ச்சி இலாகா மீது வழக்குத் தொடர்ந்திருக்கிறார். சில்லி நகரத்தில் மழை பெய்யும் என்பதை அந்த வானிலை இலாகா அறிவித்ததால் அங்கே நடைபெறும் பெரிய திருவிழாவுக்கு ஜனங்கள் வரவில்லையாம். அதனால் நகரசபையின் வருமானம் குறைந்து விட்டதாம்.

ஃ ஃ ஃ

ஸ்வீடனில் மருத்துவக் கழகம் ஒன்று இறந்துபோன மனிதனின் மீது வழக்குத் தொடர்ந்திருக்கிறது. அந்த மனிதன் தான் இறந்த பிறகு தன் உடலை மருத்துவக் கழகம் எடுத்துக் கொள்ள விற்றிருந்தானாம். அவன் விற்கும்பொழுது இருந்த பற்களில் இரண்டு அவன் இறந்தபோது இல்லை என்பதுதான் வழக்கின் சாரம். ஆதாரம்: காரனெட்



வாசு வந்து விட்டான் உள்ளே. ராகவன் அவனை ஏறிட்டு நோக்கினார். அவன் முகத்தைப் பார்த்ததுமே அவர் புரிந்தும் கொண்டு விட்டார். பலன் நன்றாகத்தான் அமைந்திருக்க வேண்டும். இல்லாவிடில் இப்படியொரு மகிழ்ச்சி அவன் முகத்தில் இருக்காது.

''மாமா!''

''என்னடா வாசு! போன காரியம் என்ன ஆயிற்று?'' உள்ளிருந்தபடியே மாமி ஜானகி கேட்டுக் கொண்டே வந்தாள். அவளுக்குப் பின்புறமாக உமா வந்து நின்றாள்.

''எனக்குத் தெரியாதா மாமி, உமாவின் அழகுக்கு அவளுக்கு இது போல்தான் வரன் அமையும். அதனால்தானே நான் தீவிரமாக முயற்சி எடுத்தேன்!'' என்று வாசு பெருமிதத்துடன் கூறினான்.

ராகவன் நிம்மதியாக மூச்சு விடுவதற்கு மாறாகப் பெரும் கவலைதான் கொண்டார். பணக்காரப் பெரிய இடம் என்று வாசு ஒரே பிடியாக இந்த வரனை நிச்சயம் செய்து விட்டு வந்து நிற்கிறான். இந்தப் பணக்கார வரனுக்கு அவரால் ஈடு கொடுக்க முடியுமா? மாயூரத்தில் சின்னஞ் சிறு மிராசுதாராக இருக்கும் அவர் தம் குடும்ப வயிற்றுப் பாட்டையே பெரும் கஷ்டத்துடன் சமாளித்து வருகிறார்.

''வாசு! நீ என்னமோ பெருமை பொங்கத்தான் நிற்கிறாய். ஆனால் அதை எப்படிச் சமாளிக்கப் போகிறோம் என்று எனக்குக் கவலையாக இருக்கிறது!'' ராகவன் கூறினார்.

''இந்தப் பிரச்னையெல்லாம் எனக்கு மட்டும் தெரியாதா மாமா! உங்களுக்குக் கவலையே வேண்டாம். உமா எப்படியெல்லாம் இருக்க வேண்டுமென நான் நினைத்தேனோ, அப்படித்தான் இருக்கப் போகிறாள். நான் ஏற்றுக் கொண்ட லட்சியம் ஈடேறத்தான் போகிறது'' என்றவன், உமாவை நோக்கி, ''என்ன உமா, உனக்குத் திருப்திதானே?'' என்று கேட்டான்.

முதலில் சற்று மௌனமாக இருந்த உமா, பிறகு மெல்லிய குரலில், ''என்னைக் கேட்பானேன்? நீங்கள்தான் ஒரே. பிடியாக நிச்சயம் செய்துவிட்டீர்களே!'' என்றாள்.

இடையே பேச ஆரம்பித்து விட்ட ஜானகியின் குரலால் உமாவின் வார்த்தைகள் முழுவதும் அவன் செவியில் விழவில்லை. ''வாசு! புதிர் போட்டுப் பேசாதே. எல்லாவற்றையும் எப்படி முடித்து வந்திருக்கிறாய்? விவரமாகச் சொல்லு'' என்றாள் ஜானகி.

''ரகு உமாவைப் பார்த்துவிட்டுச் சென்றதுமே உமாவைத்தான் விவாகம் செய்து கொள்வதென்று நிச்சயம் செய்துவிட்டானாம். நேற்று நான் சென்னைக்குச் சென்று அவன் அபிப்பிராயத்தைக் கேட்க உள்ளே நுழைந்தபோதே 'முகூர்த்தத்துக்கு நாள் பார்க்கச் சொல்லி விடுங்கள்' என்கிறான்.''

''நம் நிலை அவனுக்கு நன்றாகத் தெரியுமல்லவா?''

''இதென்ன மாமி, புது சந்தேகம்? நான் பத்து நாட்களுக்கு முன் ஜாதகம் கேட்கச் சென்றபோதே 'மாமா சாதாரண மிராசுதார்தான். அவருடைய ஒரே பெண் உமா. அதிகச் சீர்வரிசைகள் எதிர்பார்க்க முடியாது. பெண்ணின் குணமும் அழகும்தான் உங்களுக்குக் கிடைக்கும் பொருள்கள்' என்று கூறிவிட்டேன்.''

ராகவன் எழுந்து விட்டார், முகூர்த்தம் வைக்க ஜோசியரைப் பார்ப்பதற்காக. ஜானகியும் அடுக்களைக்குச் சென்றுவிட்டாள். வீட்டில் கல்யாணமென்றால் இனி வேலை அம்பாரமாகக் கொட்டிக் கிடக்குமே!

உமா வாசுவையே கண் கொட்டாமல் நோக்கியபடி சிறிது நேரம் நின்றிருந்தாள்.

''என்ன உமா, சிலையாக நின்றுவிட்டாய்?''

''ஒன்றுமில்லை! சும்மாத்தான் இப்படி...''

''உமா! நிச்சயமாகச் சொல்கிறேன். நீ அதிர்ஷ்டசாலிதான். இல்லாவிடில் இப்படிக் கொள்ளை போகும் அழகு உனக்குக் கிடைத்திருக்காது. அந்த அழகு பணத்தோடு கைகோத்துச் செல்ல வேண்டும், சிரஞ்சீவித்தன்மை பெற வேண்டும் என நினைத்தேன். பணத்தில் நீ குறைவில்லாமல் இருக்க வேண்டும். இந்த நிறைவின் மகிழ்ச்சியில் உன் அழகு விரிய வேண்டும் என்பதே என் குறிக்கோள்.''

உமா அவனை நிமிர்ந்து மீண்டும் ஒரு முறை நோக்கினாள். ''வாசு! நீங்கள் சொல்லும் தத்துவத்தை என்னால் புரிந்து கொள்ள முடியாது போல் இருக்கிறது.''

''போகப் போக உனக்குக் கண்டிப்பாகப் புரியும், உமா!''

உள்ளிருந்து உமாவை ஜானகி கூப்பிட்டு விட்டாள். உமா உள்ளே சென்றாள்.

வாசு மாடிக்குச் சென்று விட்டான். படியோடு ஒட்டினது போல் ஒரு சிறு தடுப்பு மாடியில் இருந்தது. மாமாவின் வீட்டோடு வந்தது முதல் அதுதான் அவன் அறை; வாசஸ்தலம்.

அலுப்புத் தீர மாடியில் படுத்தவனுக்கு முன் சிறு பாலகனாகத் தாய் தந்தையற்ற அனாதையாய் மாமாவின் வீட்டினுள் நுழைந்த காட்சிதான் பளிச்செனத் தெரிந்தது. மாமா ராகவனும் மாமி ஜானகியும் எப்படியெல்லாம் ஆட்டி வைப்பார்களோ என்ற அச்சம் இருக்கத்தான் செய்தது. அவர்களோ அவனிடம் பச்சாதாபம் காட்டவும் இல்லை; தூற்றவும் இல்லை. இரு வேளை சாப்பாடு கிடைத்தது. மற்றவைகளை அவன் எதிர்பார்க்கவுமில்லை. தானாகவே படிப்புக்கு உபகாரச் சம்பளம் மூலம் வழி தேடிக்கொண்

ரன். பிறகு ஒரு பெரிய கம்பெனியில் நாஸ்தா வேலையும் தேடிக் கொண்டான்.

வாசு அந்த வீட்டில் நுழைந்த காலத்தில் இகக் குதூகலம் கொண்டவள் உமாதான். நு வயதில் அவனுக்கு அவள் விளையாட்த் தோழன். பள்ளிப் பருவத்தில் சந்தேகங்களைத் தீர்த்து வைத்த ஆசான்; தற்குப் பிறகு....

அதற்குப் பிறகு பருவ உணர்ச்சியில் அவன் மாவை நன்கு புரிந்துகொண்டு விட்டான். இருவருக்கும் நான்கு வயது பேதம். பருவத்தின் காலடியில் இருவரும் அடிவைத்து விட்ட வயது. உள்ளுணர்ச்சிகள் விழிப்புக் காணும்போது உமாவின் உள்ளம் அவனுக்குப் புரியாமல் போய்விடுமா, என்ன?

தன்னைக் காணும்போதெல்லாம் உமாவின் முகம் மெல்ல மெல்ல மலருவதை அவன் கண்டான். உடலில் பூரிப்போடு வெட்கத்தின் செம்மை படருவதைப் பார்த்தான்.

உமாவோ சௌந்தரியம் என்னும் சொல்லுக்குப் பொருளாக விளங்குபவள். அந்த அழகின் பிம்பம் பருவ காலத்தில் மேலும் மலர்ச்சி அடைய நிற்கும்போது அவனிடம் அடைக்கலம் அடைந்துவிடுவதால் தேய்ந்து மாய்ந்து விடுமோ? அவனுக்கு ஏற்ற அழகு தனக்கு இல்லாவிடினும் பாதகமில்லை. அவனிடம் வருவதால் வயிற்றுக்குப் போதுமான ஆகாரம் இல்லாமல், அழகுக்கு உணவின் உரம் இட முடியாமல் வாடி விடுவாளோ! அழகு என்பதற்கு உள்ளத்தின் மகிழ்ச்சியும் உடன் அமைய வேண்டும். அந்த மகிழ்ச்சியும் சுகஜீவனமும் பணக்கார இடத்தில்தான் அவள் அடைய முடியும். பருவ திரளில் எழில் தோற்றத்தைக் காட்டும் உமா பணக் காற்றில் மேலும் பூரிப்பைக் காட்டுவாள். அவளைக் கணவனாக அடைந்துவிட்டால் அவளது அழகு மலர் விரியாது. வாட்டம் காணும். ஏழ்மைப் பிரச்சினையில் உடலும் வாடிவிடும்....அவன் உமா அப்படியெல்லாம் ஆகிவிடக் கூடாது. அவள் எப்போதும் சந்தோஷ நீரில் குளிர்ச்சி காண வேண்டும். பணக்காரக் குடும்பத்தில் லட்சுமி கடாட்சத்தின் அருளில் அவள் ராணியாகத் திகழ வேண்டும். சிருஷ்டி கர்த்தா அபூர்வமாகப் படைத்திருக்கும் அந்த அழகின் படைப்பை அவன் கைப்பிடித்துப் பாழடித்து விடக் கூடாது.

இப்படிச் சிந்தனை ஓடினாலும் உமா தன்னை முழு மனத்தோடு விரும்புவதை அவன் அறிவான். அவன் வேண்டாமெனச் சொல்லி விடுவதால் அவள் மனம் தவிக்குமோ? தவிக்கத்தான் செய்யும். தவிக்கட்டுமே! பணக்காரக் கணவன் கிடைத்துவிட்டால் அந்த நல் வாழ்வில் தவிப்பெல்லாம் தானாக மறந்து போகிறது.


இப்படி எண்ணி ஒரு முடிவுக்கு வந்த நேரத்தில்தான் ஒரு நாள் அவன் மாமா அவனைத் திருமண விஷயமாகக் கேட்டார்: அவனும் மனத்தைக் கல்லாக்கிக் கொண்டு, ''மாமா! உமாவை விவாகம் செய்துகொள்ளும் எண்ணம் எனக்கு என்றுமே இருந்ததில்லை'' என்று கூறிவிட்டான்.

ராகவன் இந்தப் பதிலை எதிர்பார்க்கவில்லை. ''என்னது? என்னடா சொல்கிறாய்?''

''அதையேதான் மாமா திருப்பியும் சொல்கிறேன். உமாவை நல்ல இடத்தில் விவாகம் செய்து கொடுக்க வேண்டியது என்னுடைய பொறுப்பு'' என்றான்.

உமா அவனைத் தனிமையில் சந்தித்தபோது, ''வாசு! அப்பாவிடம் சொன்னீர்களே, அப்போது உள்ளுணர்வோடுதான் பேசினீர்களா அல்லது....'' என்றாள்.

வாசுவோ முன்பே தயாரித்து வைத்திருந்தது போல் கூறிவிட்டான். ''உள்ளுணர்வு, வெளிப் பார்வையெல்லாம் நாமாகக் கற்பித்துக் கொள்ளுகிறோம். உன்னைப் பணக்



கார இடத்தில் விவாகம் செய்வித்து ஆனந்தப் பூரிப்பில் உன் அழகு விரிவதை நான் காண வேண்டும். அதுதான் என்னுடைய குறிக்கோள்.''

உமா பேசவேயில்லை.

வீட்டில் மூன்றோ ராள் அவனோடு யாரும் சரளமாக இல்லை என்பதை வாசு உணர்ந்தான். ஆனால் அதற்காக அவன் கவலை கொள்ளவில்லை. உமாவுக்குப் பணக்கார இடமாகத் தேடுவதில் தீவிரமாக முனைந்தான்.

ஆபீஸ் வேலையாக அவன் சென்னை சென்ற போது நண்பர் ஒருவர் மூலமாக அவன் எண்ணம் ஈடேறும் நிலைக்கு வந்துவிட்டது. சங்கரன் பெரிய செல்வந்தர். அவரது ஒரே மகன் ரகு, உமாவை மணக்க முன்வந்தான். பெண்ணைப் பார்க்க அவன் வருவதாகத் தெரிவித்தபோதுதான் வாசு தன் வாக்கை நிறைவேற்றுவதில் தீவிரமாக இருப்பது ராகவனுக்கும் ஜானகிக்கும் தெரிந்தது.

பெண்ணைப் பார்த்துவிட்டுச் சென்றதும் ரகுவின் அபிப்பிராயத்தை அறிய வாசு மீண்டும் சென்னைக்குச் சென்று வந்தான்.

பலன் விவாகம் இனிதாக நடந்தது. ரகுவும் அவன் தந்தையும் ஒருவித குறைபாடோ குற்றமோ கூறாமல் விவாகத்தை நடத்தினர். விவாகம் முடிந்த மறுநாளே உமாவைத் தங்களுடன் அழைத்துச் சென்றுவிட அவர்கள் விரும்பினார்கள்.

உமா பயணத்துக்குச் சித்தமாகப் பெட்டியில் சாமான்களை எடுத்து வைத்துக் கொண்டிருந்தபோது வாசு அவள் அருகில் வந்தான். ''உமா!'' என்று அழைத்தான்.

''என்ன வாசு?''

''உன் மனம் எனக்குப் புரியும். ஆனால் இந்த ஏழையின் கைகளில் நீ ஒப்படைக்கப்பட்டால் உன் அழகு வாடிவிடும். செல்வச் சூழ்நிலையில் மகிழ்ச்சியின் சிகரத்தில் உன் பூரிப்பைக் காணவேண்டும் என்றே நான் விரும்பினேன். கடவுள் எனக்கு உதவி விட்டார். ரகு நல்ல பையனாக இருக்கிறான். வீட்டில் பணம் உருளுகிறது.... உமா, நீ கண்டிப்பாக வாடிவிடாமல் மகிழ்ச்சியோடு இருப்பாய்... புரிகிறதா உமா?''

''நீங்கள் புரியவைக்க முயற்சி செய்கிறீர்கள். புரிந்து விடுமா என இனிதான் பார்க்க வேண்டும்.''

அதற்குள் ரகு அங்கு வந்து விடவே, அவர்கள் பேச்சு தடைப்பட்டது.

உமா சென்னைக்குச் சென்று விட்டாள். சில நாட்களுக்குப் பிறகு அவளைப் பார்க்கச் சென்ற ராகவனும் ஜானகியும் பெண் வீட்டாரின் பணப் பெருமையைப் பற்றிப் புகழ்ந்தபடி இருந்தார்கள்.

தீபாவளி நெருங்கியது. மாயூரத்தில் அந்தப் பெரிய வீட்டில் கொண்டாடுவதற்குப் பதில் சென்னையில் தங்கள் வீட்டிலேயே, தீபாவளியை வைத்துக் கொள்ளலாம் என ரகுவும், உமாவும் எழுதி விட்டனர். வாசுவையும் அழைத்து வரும்படி எழுதினர்.

தீபாவளிக்குத் தங்கள் சக்திக்கும் மீறி ராகவன் பெண், மாப்பிள்ளைக்கு ஜவுளி எடுத்தார். ஆனால் உமாவோ தன் பெற்றோர்களுக்கு உயர் ரக ஜவுளி எடுத்ததோடு வாசுக்கும் உயர் ரக சூட்டு தைத்து வைத்திருந்தாள்.

''என்ன, உமா இது, இதெல்லாம் எனக்கு எதற்கு வாங்கினாய்?''

''நீங்கள்தானே பணக்கார இடத்தில் உயர்ந்த பொருள்களில் மகிழ்ச்சி காணவேண்டுமென்றீர்கள். இந்த உயர் பொருள் காரணமாக உங்களுக்கு ஆனந்தம் கிடைக்கிறதா என்று பார்க்கிறேன்'' என்றாள் உமா.

வாசு சற்று மௌனமாகி விட்டுப் பிறகு கேட்டான் :

''உமா! இப்போது உனக்கு வாய்த்த கணவனும் நல்லவனாகத்தானே காணப்படுகிறான்! சொல்லு உமா, நீ சந்தோஷமாகத்தானே இருக்கிறாய்? ரகு நன்றாகத்தானே வைத்துக் கொண்டிருக்கிறான்?''

''என் கணவர் என் மீது உயிராகத்தான் இருக்கிறார் வாசு.'' – உமா இப்படிக் கூறியதுமே வாசு நகர்ந்து விட்டான். தன்னை மணக்காமல் போனது குறித்து ஏதாவது கூறி விடப் போகிறாளோ என்ற அச்சம். அந்தப் பேச்செல்லாம் அவள் பேசும்படி அவன் விட்டு விடக் கூடாது. ஆதரவும் அளிக்கக் கூடாது. அவன் எண்ணத்தில் உமாவைப் போன்ற அழகு பிம்பங்கள் காதல் என்றெல்லாம் சொல்லிக் கொண்டு வறுமையில் வாடி இளைத்து விடக் கூடாது!

நாட்கள் மேலேறி வருடங்களுக்கு வழி வகுத்தன. இதில் எத்தனையோ மாறுதல்கள். வாசு வேலை செய்து வந்த கம்பெனி முதலாளி திருவனந்தபுரத்தில் ஒரு கிளை ஆரம்பித்தபோது நம்பிக்கையான வாசுவையே அதற்கு மேற்பார்வையாளனாக நியமித்தார். வாசு தன் முயற்சியாலும் உழைப்பாலும் கடையை முன்னேற்றி விட்டான். கொள்ளையான லாபம். கடையின் முன்னேற்றத்துக்கு மேலும் வழி வகுக்க அவன் உபயோகத்துக்கு ஒரு காரும் கொடுத்தார். அவனது உழைப்பை உணர்ந்து கைநிறையச் சம்பளம் கொடுத்தார்.

தன்னுடனேயே வந்திருக்கும்படி மாமா மாமிக்குக் கடிதம் எழுதியும் மாயூரத்தை விட்டு நகர அவர்கள் விரும்பவில்லை. வேலை காரணமாக இந்த ஆறு வருட காலத்தில் இடையே ஒருமுறைகூட வாசு திருவனந்தபுரத்தை விட்டு மாயூரம் வர முடியவில்லை. மாமாவிடமிருந்து வந்த கடிதத்தில் உமா ஒரு குழந்தைக்குத் தாயாகி விட்டதாகவும் அவள் சந்தோஷமாக இருப்பதாகவும் எழுதியிருந்தார்.

மீண்டும் பல வருடங்களுக்குப் பிறகு தீபாவளி. வாசு இந்த முறை கண்டிப்பாக மாயூரம் வரத் தீர்மானித்துவிட்டான். உமாவையும் தீபாவளிக்கு மாயூரத்துக்கு அழைக்கும்படி மாமாவுக்கு எழுதி விட்டான்.

வண்டியிலிருந்து இறங்கிய வாசுவைப் பார்த்து ராகவன் ஆச்சரியம் அடைந்து விட்டார். எப்படி வளர்ந்து விட்டான்! உடலில் தான் எத்தனை கவர்ச்சி! மகிழ்ச்சியின் களை ஒவ்வோர் அங்கத்திலும் பொங்கி வழிந்தது. வீட்டினுள் நுழைந்ததுமே அவர்களுக்கென வாங்கி வைத்திருந்த புத்தாடைகளையும் சாமான்களையும் எடுத்துப் பரப்பினான்.



அஜீரணத்தால்
அவஸ்தைப்பட
வேண்டாம்!
ஹ்யூலெட்ஸ் மிக்சர்
அருந்தி விரைவில் நிவாரணம் பெறுங்கள்
வேலை மும்முரமும் கவலையும் ஜீரணத்தை பாதிக்கின்றன; பசியை மந்திக்கச்செய்து, தளர்ச்சியூட்டுகின்றன. ஹ்யூலெட்ஸ் மிக்சர் விரைவில் நீடித்த பரிகாரம் அளிக்கிறது. ஹ்யூலெட்ஸ் மிக்சர் வயிற்று உபாதையை விரைவில் போக்கி, நிரந்தரமாக குணமளிக்கிறது. வலியுண்டாக்கும் அமிலங்களை அகற்றி, ஜீரண கோசத்திற்கு அதன் வேலையை சரிவர செய்வதற்கேற்ப பாதுகாப்பளிக்கிறது. ஹ்யூலெட்ஸ் மிக்சர் குழந்தைகளின் வயிற்றுக் கோளாறுகளுக்கும் கூட சிறந்தது. வயிற்றுப் போக்குக்கு அபினி சேர்ந்த ஹ்யூலெட்ஸ் மிக்சர் குணமளிக்கும்.
ஹ்யூலெட்ஸ் மிக்சர் ஜீரணத்திற்கு சிறந்தது.
C. J. ஹ்யூலெட் & ஸன் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்
86 A, தைனியப்ப நாயக் தெரு மதராஸ் 3
HEWLETT'S MIXTURE

JWT/CJH/2821

உமாவுக்கென உயர்ரக புடவையும் எடுத்து வைத்திருந்தான்.

''மாமா! உமா எப்போது வருவதாக எழுதியிருக்கிறான்?''

''அவள் வரவில்லை என்று எழுதிவிட்டாள். நீ வரப் போவதாகக்கூட எழுதினேன். அப்படி யிருந்தும் மாமனாரையும் கணவரையும் சாப் பாட்டுக்குத் திண்டாட விட்டு விட்டு வர முடியாது என்றும், மாப்பிள்ளைக்கு ஒரு நாள் தான் லீவு என்றும், அந்த ஒரு நாளைக் கழிக்க ரயில் சார்ஜ் செலவு செய்துகொண்டு எதற்கு வருவது என்றும் எழுதி விட்டாள். உன்னைப் பற்றி விசாரித்து ஒவ்வொரு கடிதத்திலும் எழுதுவாளடா!''

இதைக் கேட்டதுமே வாசுவின் மனத்தில் ஏதோ சிறு அச்சுறுத்தல். அப்படியும், ''என்ன மாமா, முதலாளிக்கு ஒரு நாள் தான் லீவாமோ?'' எனக் கேட்டு வைத் தான். ''முதலாளியின் மனைவிக்கு ரயில் சார்ஜ் சங்கடமாக்கும்!''

ராகவனே பதிலே கூறாமல் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டார்.

''என்ன மாமி! பெண் இன்னும் செட் டும் கட்டுமாகத்தான் இருக்கிறாளோ?''

''செட்டும் கட்டுமாக இல்லாமல் எப்படிக் காலம் தள்ள முடியுமாம்? வரும் சம்பளம் மூந்நூறு ரூபாய். அதில் வீட்டு வாடகை, குடும்பச் சாமான்கள், பால் எல்லாம் ஈடு கட்டியாக வேண்டும் என்றால் இந்தக் குணம் இருக்கத்தானே வேண்டும்?''

''என்ன மாமி, சொல்கிறீர்கள்?'' திடுக் கிட்ட வாசு கையில் பிடித்திருந்த சாமானைக் கூடக் கீழே வைக்காமல் கேட்டான்.

''எல்லாம் கண்ணாடி மாளிகை போல் உடைந்து விட்டதப்பா. வியாபாரத்தில் கூட்டாளியாக இருந்தவன் எத்தனையோ சுரண்டி விட்டான். போட்டிகளும் நிறைய முளைத்து விட்டன. இன்னும் எத்தனையோ காரணங்கள். உன் மட்டத்தைப் பார்த்தால் விரிசல் போல் எல்லாம் கடனில் இருக்கிறது. ரகுவுக்கு இது தெரிந்ததுமே கடன் வாழ்வே வேண்டாம் என்று எல்லாவற்றையும் விற்றுக் கடனுக்கு ஈடுகட்டி விட்டான். வியாபாரத் துக்குத் தலை முழுக்குப் போட்டு விட்டு ஓர் ஆபீஸில் வேலை தேடிக் கொண்டு விட்டான். இதெல்லாம் அறிந்தால் நீ மனம் சங்கடப் படுவாயே என்றுதான் மாமா உனக்கு எழுதவில்லை!''

''ஐயோ மாமி!'' கிரீச்சிட்டான் வாசு. வைத்ததெல்லாம் வைத்தபடி இருக்க வழக்கப்படி மாடி அறைக்குச் சென்று குப் புறப் படுத்துவிட்டான்.

உமாவுக்குப் பணக்கார இடமாகத் தேடிக் கொடுத்த வெற்றியின் நிழலைக் கண்ட வனுக்கு, தோல்வியின் வெய்யிலையும் பார்க்க நேரிடும் என அவன் நினைக்கவேயில்லை. உமாவின் எழிலோவியம் பணக்காரக் குடும் பத்தில் வாடாது விரிந்து நிற்கும் எனத் தனக் கென வந்தவளையும் மறக்க முயற்சி செய் தானே! அது இப்படி மாற்று உருவத்தையும் காட்டுகிறதே! ஏழைமையில் உழலப் போவதாக நினைத்த அவளே பணப் பசையில் ஒட்டி நிற்கிறாள்!

உமா இப்போது எப்படியிருப்பாள்? வாடித்தான் போயிருப்பாள். அவள் அழ கெல்லாம் உருத் தெரியாமல் உள்ளோடு அமுங்கிக் கிடக்கும். சென்னைக் கரையில் இந்தச் சம்பளத்தில் வாழ்க்கைப் பிரச்னையே அவளைக் காய வைத்திருக்கும். 'உமா எப்படி இருக்கிறாள்' என்று மாமியைக் கேட்க லாமா? வேண்டாம். கேட்டால் வரப் போகும் பதில் அவனுக்குத் தெரியாதா?

சுற்றிச் சுற்றித் தவித்த மனம் கடைசியில் ஒரு முடிவுக்கு வரத்தான் செய்தது. உமாவை இந்த ஏழைமை நிலைமையில் குன்றி நலியவிடப் போவதில்லை. ரகுவைத் திருவனந்தபுரத்துக்கு அழைத்துச் சென்று தான் ஏற்றிருக்கும் கடைப் பொறுப்பில் விட்டு விட வேண்டும். சிறிது நாட்கள் அருகில் இருந்து சொல்லிக் கொடுத்தால் புரிந்து கொண்டு விடுவான். தன் முதலாளியிடம் தன் ஏற்பாட்டைக் கூறி ஒப்புக் கொள்ளும் படி செய்துவிட வேண்டும். ரகு மீண்டும் பணப் பசையில் காலடி எடுத்து வைத்து விட் டால் உமா வறுமையில் வாடாது வளம் பெற்று விடுவாள். அவள் அழகு சிரஞ்சீவித் தன்மை பெற்று விடும். ரகு தன் வேலையை ஒப்புக் கொண்டு நடத்த ஆரம்பித்த பிறகு தனக்கு வேறு எங்கேயாவது வேலை தேடிக் கொண்டு விடலாம்!

மறு நாள் காலை.
மாமி, நான் உமாவைப் ர்க்கச் சென்னைக்குப் ாகிறேன்'' என்றான் ாசு.

''போய்விட்டுவாப்பா. ந்தத் தீபாவளிக்காவது ங்கு வரச் சொல்லு. ந்தப் பக்கம் வந்து ன்று வருடங்கள் ஆகி ிட்டன. இங்கு வரக்கூட ிருப்பமில்லாமல் கண ர் வீட்டில் அப்படி யார் ஒட்டுதல் அவளுக்கு'' என்று ஞானம் ூறினாள்.

சென்னையில் ராஜா அண்ணாமலைபுரத்திலொரே மாதிரியான தெருவில் உமாவின் வீட்டைக் கண்டு பிடித்ததும்தான் நிம்மதியாக மூச்சு விட்டான் வாசு. சந்து பொந்து இல்லை. ஒண்டுக் குடித்தனமானாலும் பாங்காக இருந்தது.

வாசு வீட்டின் உள்ளே நுழைவதற்கும் ரகு ஆபீசுக்குக் கிளம்புவதற்கும் சரியாக இருந்தது. வாசுவைக் கண்டதும் ரகுவுக்கு ஆச்சரியம்.

''வாருங்கள், வாசு! கடிதம் போட்டிருந்தால் ஸ்டேஷனுக்கு வந்திருப்பேனே! ஆபீசுக்கு நேரமாகி விட்டது. மாலை வந்து பேசுகிறேன்'' என்றவன், உட்புறம் திரும்பி, ''உமா! இங்கே வந்து பார். உனக்கு மகிழ்ச்சி தரப் போகும் அதிசயம். உங்கள் வாசு வந்திருக்கிறார்'' எனக் குதூகலத்துடன் கூவிவிட்டு, பஸ் ஸ்டாண்டை நோக்கி அவசரம் அவசரமாக ஓடினான்.

உமா சமையலறையிலிருந்து வந்தாள். ''வாசுவா! வாருங்கள் வாசு! நீங்கள் கண்டிப்பாக வருவீர்கள் என்று எனக்குத் தெரியும்.''

வாசு கண்களைத் துடைத்துத் துடைத்துப் பார்த்தான். உமாவா? அவன் எதிர்நோக்கி வந்த உமாவா! அவள் கையில் ஒரு குழந்தை! அதன் முகத்திலும் உடலிலும்....

''என்ன பார்க்கிறீர்கள், வாசு?'' உமா சிரித்தபடி கேட்டாள்.

''ஒன்றுமில்லை.... உமா!'' பேச முடியாமல் திணறினான் அவன்.

''வாசு! அம்மா உங்களிடம் எல்லாம் கூறியிருப்பாளே! இப்போது இந்த இரு அறை தான் எங்கள் அரண்மனை! நாங்களே வேலைக்காரர்கள், நாங்களே எஜமானர்கள்.....''

''வாசு! பணத்தில் என் அழகு மென்மையுறும் எனக் கூறினீர்கள். அதனால் வீட்டோடு ஆரம்பித்த பிணைப்பை மறந்து என்னை வெளியிடத்துக்கு அனுப்பினீர்கள். உங்கள் குறிக்கோளை எனக்குப் புரிய வைக்க வேண்டுமென முயற்சி எடுத்தீர்கள். ஆயினும் உங்கள் குறிக்கோள் புரிவதற்குள் என் கணவரின் செல்வம் அழிந்து விட்டது.....''



''போலீஸ் வேலைக்கு ஆள் தேவை என்கிறீர்களாமே? நானும் வரட்டுமா?''

''வேண்டாம், உமா! நான்தான் இப்போது புரியாமல் தவிக்கிறேன்.''

''உங்களைப் பார்த்தால் நீங்கள் அப்படித்தான் புரியாமல் திண்டாடுவதாகத் தெரிகிறது. வாசு, நீங்கள் ஆண் மக்கள். எப்போதும் வெளி உலகிலேயே இருப்பவர்கள். சம்பாதிப்பதே குறிக்கோள்; அதைப் பற்றியே நினைப்பவர்கள். உலகில் மகிழ்ச்சியையும், அழகையும் பணத்தின் அடிப்படையில் அடைந்துவிட முடியும் என நினைப்பவர்கள். நாங்கள் பெண் மக்களோ இல்லற லட்சுமியாக உட்பிராகாரத்தில் வீட்டோடு இருப்பவர்கள். வீட்டு மக்களை சந்தோஷமாக வைத்திருக்க வேண்டுமென்பதே குறிக்கோள். அந்தக் குறிக்கோள் நிறைவேறும்போது மகிழ்ச்சி கிட்ட, உடல் பன்மடங்கு சோபையுடன் பாங்குற அமையப் பெறும் என எண்ணுபவர்கள்.... இப்போது இந்த நிலையில் என்னை நீங்கள் எதிர்பார்த்திருக்கவே மாட்டீர்கள்.....''

''உமா!'' வாசு நிமிர்ந்து உமாவையே நோக்கினான். உமாவின் உடலில் இந்த மலர்ச்சியும் சோபையும் எங்கிருந்து வந்தது என்பதைத்தான் உமா புரிய வைக்கிறாளோ! அழகு மெருகிட்டு மின்னல் போல் எப்படிப் பிரகாசத்துடன் நிற்கிறாள். செல்வச் சூழ்நிலையில் அவன் எதிர்பார்த்த அந்த அழகு, இந்த ஏழைமை எளிமையிலும் அவள் காட்டி நிற்கிறாள். அந்தத் தாய்க்கே ஏற்ற மகவையாக இடுப்பில் குழந்தை.

''வாசு! பணக்கார மாப்பிள்ளை கிடைத்து விட்டதாக நீங்கள் நினைத்தீர்கள். நானோ குணவானை, அன்பு செலுத்தத் தெரிந்த ஒருவரை என் மணாளனாகத் தேடிக் கொடுத்தற்கு உங்களுக்கு நன்றி செலுத்துகிறேன். இந்த மனக் களிப்பில் என் உடம்பு பூரித்து விடுகிறது வாசு.''

எல்லாமே புரிந்துவிட்ட உணர்ச்சி வாசுவுக்கு ஏற்பட்டது.

வாசுவைக் கட்டாயப்படுத்தித் தீபாவளிக்கு ரகு தங்கள் வீட்டோடு நிறுத்தி விட்டதோடு உமாவின் பெற்றோர்களையும் வரவழைத்து விட்டான். தீபாவளியன்று கைத்தறிப் புடவையிலும், வேஷ்டியிலும் ஒட்டிக் கொண்டிருந்த மகிழ்ச்சியின் பிறப்பிடம் அவனுக்குப் புரிந்தது. ரகு, உமாவின் உள்ளங்களில் நெருக்கத்தோடு பிணைந்த அன்பு அவனுக்கு எதையோ திரை விலக்கிக் காட்டுவது போல் இருந்தது. தான் வாங்கி வந்த உயர்ந்த புடவையை வாசு வெளியே எடுக்கவேயில்லை.


வாசு கிளம்பி விட்டான். திருவனந்தபுரத்து வேலையைத் தானே ஒப்புக் கொண்டான். உமாவின் இல்லத்தில் நிலவு நிழலாகப் படர்ந்த அந்தக் குளுமை அவன் மனத்தில் பசுமையாகப் படர்ந்து விட்டது.

நம்பிக்கை நாயகர்கள்!

திருடன், கொள்ளைக்காரன், கொலைகாரன் இவர்களெல்லாம் ஒரு ரகம் என்றால் நம்பிக்கை மோசடி செய்பவர்கள் அலாதி ரகம். முந்திய ரகத்துக்குத் துணிவும் வெற்றியும் மூலப் பொருள்கள் என்றால் பிந்திய ரகத்துக்கு இனிமையும், தலைசிறந்த நடிப்புத் திறமையும் மூலப் பொருள்களாக உதவுகின்றன. நாவன்மையும், நகைச் சுவை உணர்ச்சியும், மனோதத்துவமும் நம்பிக்கை மோசடிக்காரர்களின் உற்ற தோழர்கள். அவர்களுடைய கலையில் தடுமாற்றம், சந்தேகம் எழுவதற்கு இடமே இல்லை.

சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன்னால் போலந்து நாட்டைச் சேர்ந்த பால் லூப்ஸ்கியும் அவன் மனைவியும் கூட்டுச் சேர்ந்து தொடர்ந்து ஊர்க்காரர்களை ஏமாற்றி சர்வ சாதாரணமாக முப்பத்தி ஒன்பதாயிரம் பவுன்கள் வரை சேர்த்தது கேட்பவர்கள் வியக்கக் கூடிய விஷயம்.

ஒரு புதுப் பெயரைச் சூட்டிக் கொண்டு பால் லூப்ஸ்கி வார்சா நகரத்திலுள்ள சில பிரமுகர்களுக்கு ஒரே மாதிரியான கடிதங்களைத் தபால் மூலம் அனுப்பி வைத்தான். தான் ஓர் ஏழை என்றும், ஓர் அழகான யுவதியைக் காதலிப்பதாகவும் பொருளாதாரப் பிரச்னை திருமணத்துக்கு இடைஞ்சலாக இருப்பதால் பண உதவி தேவை என்றும் உருக்கமாக எழுதியிருந்தான். முடிவில் காதல் தோல்வியைத் தற்கொலையில் தான் ஈடு கட்ட வேண்டும் என்றும் சேர்த்திருந்தான்.



இளம் காதலர்களுக்கு ஏமாற்றத்தை அளிக்கக் கூடாது என்று கருணை உள்ளம் படைத்த சிலர் பணத்தை அவனுக்குத் தர்மமாக அனுப்பி வைத்தார்கள்.

லூப்ஸ்கி தன் மனைவியுடன் கிராமாந்தரத்தில் உள்ள ஒரு சிற்றூருக்குப் போய் அங்கு [illegible] திருமணம் நடத்திக் கொள்வான். அந்தச் செய்தி உள்ளூர்ப் பத்திரிகையில் வரும்படி பார்த்துக்கொள்வான். கல்யாணப் படமும் பிடித்துக் கொள்வான். பிறகு சிரத்தையாக, பணம் அனுப்பிய பிரமுகர்களுக்குப் பத்திரிகைக் குறிப்பையும் படத்தையும் அனுப்பிவைத்து வந்தனம் தெரிவிப்பான். பணம் அனுப்பியவர்கள் திருப்தி அடைவார்கள். ஒரு நல்ல காரியத்துக்கு உதவிசெய்ததாகவே நினைத்துப் பெருமிதமடைவார்கள்.

கையோடு வேறு பெயரில் அன்றைக்கே வேறு சில பிரமுகர்களுக்குக் கல்யாணத்துக்கு பண உதவி வேண்டி லூப்ஸ்கி கடிதங்கள் அனுப்பி வைப்பான். அவர்களிடமிருந்து பணம் வந்ததும் லூப்ஸ்கி தம்பதிகள் வேறு ஒரு கிராமத்துக்குச் சென்று திருமண நாடகம் நடத்துவார்கள். செய்திக் குறிப்பும் புகைப்படமும் அனுப்பப்படும். சில அசட்டுச் செல்வந்தர்கள் முன்னால் கொடுத்தது போதாதென்று திருமணப் பரிசாக வேறு அப்புறமும் அனுப்பி வைப்பார்கள்.

இந்த வகையில் லூப்ஸ்கியும் அவன் மனைவியும் அறுநூற்றுப் பதினேழு தடவை எந்த விதச் சிக்கலும் இல்லாமல் திருமண நாடகம் நடத்தினார்கள். இந்தத் தொழில் நடத்த லூப்ஸ்கி ஏழு குமாஸ்தாக்களுடன் ஒரு ஸ்தாபனத்தையே நடத்தினான். கடைசியில் ஒரு குமாஸ்தா செய்த சிறு தவறு லூப்ஸ்கியை மாட்டிவிட்டது.


அந்தக் குமாஸ்தா கவனப் பிசகாக ஒரே பிரமுகருக்கு ஒரே நாளில் இரண்டு விதத் தபால்களை அனுப்பி விட்டான். அந்தச் சந்தேகப் பிராணியான பிரமுகர் போலீஸுக்குத் தெரிவித்தார். லூப்ஸ்கிக்கும் அவன் மனைவிக்கும் ஏழு வருடச் சிறை தண்டனை கிடைத்தது.

லண்டனில் உள்ள 'பிக்பென்' கடிகாரஸ்தூபியை விலை பேசிய ஆர்தர் பெர்கூசன் என்னும் ஆசாமி ஆயிரம் பவுன் அச்சாரம் வாங்கிப் போலீஸ் வலையில் விழாமலிருக்க அமெரிக்காவுக்குத் தப்பி ஓடி விட்டான். ஆனால் அங்கு போயும் அவனால் சும்மா இருக்க முடியவில்லை! அங்கு நியூயார்க் துறைமுகத்தில் உள்ள பிரும்மாண்டமான 'சுதந்திரதேவி' சிலையை ஆஸ்திரேலிய லட்சாதிபதிக்கு விலை பேசி விற்று விட்டான். அந்த அப்பாவி லட்சாதிபதி சிலையைப் பெயர்த்து சிட்னி நகரத்துக்குக் கொண்டு போக ஆசைப்பட்டார். அதனால் பெர்கூசன் அகப்பட்டுச் சிறைக்குப் போனான்.

அதிகப் பணத்துக்காக நம்பிக்கை மோசடி செய்பவர்கள் பலர் இருப்பது போக அற்பக் காரணத்துக்காகவும் இந்த மாதிரி வேலைகளில் இறங்குபவர்கள் சிலர் உண்டு. பாரிஸ் நகரத்தில் ஓர் ஆசாமி ஒரு சிறு பையனுடன் கிராப்பு வெட்டிக் கொள்ள க்ஷவர சலூன்களில் நுழைவான். தனக்கு அவசர வேலை இருப்பதாகவும் தனக்கு முதலில் முடித்து விட்டுப் பிறகு பையனுக்குக் கிராப்பு வெட்டலாம் என்றும் சொல்வான். அவன் தலை வேலை முடிந்ததும் "இதோ வந்து கூலி கொடுத்துவிட்டுப் பையனையும் அழைத்துச் செல்கிறேன். பையன் பத்திரமாக இருக்கட்டும்!" என்று சொல்லிவிட்டுக் கிளம்புவான். அப்புறம் ஆசாமி கண்ணிலேயே தென்படாது. பையனை விசாரித்தால் தான் யாரோ அவன் யாரோ என்ற செய்தி வெளியாகும். வழியில் பார்த்த பையன்களை இலவசத் தலை வெட்டு நடத்திக் கொடுப்பதாகச் சொல்லி அழைத்து வந்து தான் வெட்டிக் கொண்டு கம்பி நீட்டும் ஆசாமியைப் பற்றிச் செய்தி பாரிஸ் நகர நாவிதர்களிடையே பரவியதும், சிறுவனை அழைத்துக் கொண்டு யார் வந்தாலும் அவரைச் சந்தேகக் கண்களுடன் பார்க்கிறார்களாம்!

—மேனு

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press Kilpauk Madras-10
Managing Editor T. Sadasivam.



உங்கள் வதனம் இயற்கைப்பொலிவுடன் எழிலாய் விளங்க
பாண்ட்ஸ் ட்ரீம்ஃப்ளவர் ஃபேஸ் பவுடர்

பாண்ட்ஸ் ட்ரீம்ஃப்ளவர் ஃபேஸ் பவுடர் உபயோகித்தால் உங்கள் வதனப்பொலிவு இயற்கை எழிலோடு வசீகரமாய் விளங்கும். இது திட்டுத்திட்டாகத் தெரியாமல் ஒரே சீராகப் படிந்து முகத்திலுள்ள மாசு மறுக்களை மறைத்து விடுகிறது. பாண்ட்ஸ் ட்ரீம்ஃபளவர் ஃபேஸ் பவுடர் பல இளம் நிறங்களில் கிடைக்கிறது. இது உங்கள் முக சருமத்தை மினுமினுப்பாக்கி நீடித்த நேரம் கவர்ச்சியுடனிருக்கச் செய்யும்.



பாண்ட்ஸ்
ட்ரீம்ஃப்ளவர்
ஃபேஸ் பவுடர்

சீஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பொரேடட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ்.ஏ. வில் இணைக்கப்பட்டது)

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon